# 5

# வெளிநாட்டுத்துறை அபிவிருத்திகளும் கொள்கைகளும்

## 5.1 பொதுநோக்கு

*இலங்கையின் வெளிநாட்டுத் துறையானது 2019இல் கடுமையான உள்நாட்டுப் பாதிப்படையக்கூடிய தன்மைகளுக்கு மத்தியிலும் தாக்குப்பிடிக்கும் தன்மையுடன் காணப்பட்டது. 2019இன் முதலாவது காலாண்டில் வர்த்தகப் பற்றாக்குறையின் கணிசமான சுருக்கமானது பணிகள் கணக்கிற்கான ஆரோக்கியமான உட்பாய்ச்சல்களுடன் இணைந்து வெளிநாட்டு நடைமுறைக் கணக்கில் மிகையொன்றினைத் தோற்றுவித்தது. எவ்வாறாயினும், குறிப்பாக சுற்றுலாத் துறையினைப் பாதித்த உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல்களின் பின்னர் ஏற்பட்ட நிலைமைகளினால் நடைமுறைக் கணக்கு மோசமாகப் பாதிக்கப்பட்டது. ஆண்டின் இறுதியில் வர்த்தகப் பற்றாக்குறை படிப்படியாக விரிவடைந்தமை மற்றும் சுற்றுலாத்துறை வருவாய்கள் அத்துடன் தொழிலாளர் பணவனுப்பல் என்பவற்றின் வீழ்ச்சி என்பன மூலம் நடைமுறைக் கணக்கானது 2019இன் இரண்டாவது காலாண்டு தொடக்கம் பற்றாக்குறை மட்டங்களுக்கு திரும்பியது. எனினும், ஆண்டுப் பற்றாக்குறையானது 2018இன் பற்றாக்குறையினை விட கணிசமாகக் கீழே தொடர்ந்துமிருந்தது. 2019இல் வர்த்தகப் பற்றாக்குறையின் ஒட்டுமொத்த சுருக்கமானது வணிகப் பொருள் மீதான இறக்குமதி செலவினத்தில் குறிப்பிடத்தக்க குறைப்பின் மூலம் தூண்டப்பட்டமைக்கு தங்கம் மற்றும் உந்து ஊர்திகளின் இறக்குமதியில் கொள்கை ரீதியாக தூண்டப்பட்ட குறிப்பிடத்தக்க குறைப்பு காரணமாக அமைந்தது. 2019இன் முதலரைப் பகுதியில் அவதானிக்கப்பட்ட வணிகப் பொருள் ஏற்றுமதிகளின் ஆரோக்கியமான வளர்ச்சியானது இரண்டாம் அரையாண்டில் திரும்பலடைந்து 2019இல் ஏற்றுமதி வருவாய்களில் ஒட்டுமொத்த மிதமான வளர்ச்சியொன்றினை ஏற்படுத்தியது. 2019இன் ஏற்றுமதி வளர்ச்சியானது புடவைகள் மற்றும் ஆடைகள் ஏற்றுமதிகளின் அதிகரிப்பினால் பிரதானமாகத் தூண்டப்பட்டிருந்தது. உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களின் பின்னர் சுற்றுலா வருவாய்கள் மற்றும் விமானப் பயணிகள் போக்குவரத்து பணிகள் வருவாய்கள் என்பனவற்றில் குறிப்பிடத்தக்களவு வீழ்ச்சியொன்றின் மூலம் பணிகள் கணக்கின் மிகை மோசமாகப் பாதிக்கப்பட்டது. நேரடி முதலீட்டுத் தொழில்முயற்சிகளின் மீள் முதலிடப்பட்ட வருவாய்கள் மற்றும் பங்கிலாபக் கொடுப்பனவுகளுடன் ஆண்டு காலப்பகுதியில் முதலாந்தர வருமானக் கணக்கின் பற்றாக்குறை மிதமானளவு விரிவடைந்த அதேவேளை தொழிலாளர் பணவனுப்பல்களின் மிதமடைதலினால் இரண்டாந்தர வருமானக் கணக்கின் மிகைகள் சுருக்கமடைந்தன.*

*சென்மதி நிலுவையின் நிதியியல் கணக்கானது ஆண்டு காலத்தில் குறிப்பிடத்தக்க உட்பாய்ச்சல்கள் மூலம் வலுவடைந்தது. ஐ.அ.டொலர் 4.4 பில்லியன் தொகையுடைய நாட்டுக்கான பன்னாட்டு முறிகள் வழங்கலின் பெறுகைகள் அதேபோன்று பன்னாட்டு நாணய நிதியத்தின் விரிவாக்கப்பட்ட நிதிய வசதியின் இரு தொகுதிகளின் கிடைப்பனவு என்பன 2019இல் நிதியியல் கணக்கிற்கான முக்கிய உட்பாய்ச்சலாக அமைந்திருந்தன. எனினும், மந்தமடைந்த வெளிநாட்டு நேரடி முதலீடுகளின் மட்டங்களின் காரணமாக நிதியியல் கணக்கிற்கான ஏனைய உட்பாய்ச்சல்கள் மிதமாக காணப்பட்ட அதேவேளை அரசாங்க பிணையங்கள் சந்தை மற்றும் கொழும்புப் பங்குப் பரிவர்த்தனை என்பனவற்றில் வெளிநாட்டு முதலீடுகள் தேறிய வெளிப்பாய்ச்சல்களை பதிவுசெய்தன. அரசாங்கமானது ஐ.அ.டொலர் 1.5 பில்லியன் தொகையுடைய இரு முதிர்ச்சியடைகின்ற நாட்டுக்கான பன்னாட்டு முறிகளைத் தீர்ப்பனவுசெய்தமை, வெளிநாட்டு நாணய கால நிதியிடல் வசதிகளின் கடன் தவணைக் கொடுப்பனவுகள் மற்றும் முதிர்ச்சியடைகின்ற இலங்கை அபிவிருத்தி முறிகளின்*

*தீர்ப்பனவு ஆகியன உள்ளடங்கலாக 2019இல் பாரியளவு* படுகடன் மீள்கொடுப்பனவுகளை மேற்கொண்டது. *இப்படுகடன் மீள்கொடுப்பனவுகளுக்கு மத்தியில், மொத்த அலுவல்சார் ஒதுக்குகள் 2018இன் இறுதியில் ஐ.அ.டொலர் 6.9 பில்லியனிலிருந்து 2019இன் இறுதியளவில் ஐ.அ.டொலர் 7.6 பில்லியனாக வலுப்பெற்றது. ஒதுக்குடன் தொடர்புடைய பொறுப்புகளுக்கெதிராக மொத்த அலுவல்சார் ஒதுக்குகளின் ஒப்பீட்டுரீதியான அதிகரிப்பும் 2019இன் இறுதியளவில் ஒட்டுமொத்த நிலுவையினை ஐ.அ.டொலர் 377 மில்லியன் கொண்ட மிகையொன்றினைப் பதிவுசெய்ததில் பிரதிபலித்தது.*

*ஆண்டு காலத்தில் செலாவணி வீதத்தினை நிர்ணயிப்பதில் இலங்கை மத்திய வங்கி தொடர்ந்தும் நெகிழ்வுத்தன்மையினை பேணியது. 2018இல் குறிப்பிடத்தக்க தேய்வொன்றினைப் பதிவுசெய்த இலங்கை ரூபா, 2019இல் ஐ.அ.டொலருக்கெதிராக 0.6 சதவீதத்தினால் சிறிதளவு உயர்வடைந்தது. செலாவணி வீதத்தின் ஒப்பீட்டளவிலான உறுதிப்பாட்டிற்கு வர்த்தகப் பற்றாக்குறை சுருக்கமடைந்தமை பிரதான காரணமாகும். உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையில் காணப்பட்ட சாதகமான நிலைமைகளும் மொத்த அலுவல்சார் ஒதுக்குகளைக் கட்டியெழுப்புவதற்கு தேறிய அடிப்படையொன்றில் வெளிநாட்டுச் செலாவணியைக் கொள்வனவு செய்துகொள்வதற்கு மத்திய வங்கியினை இயலச்செய்தன. உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல்களின் பின்னரும் அதேபோன்று உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நிச்சயமற்றதன்மைகள் காரணமாக அரசாங்க பிணையங்கள் சந்தையிலிருந்து சில வெளிநாட்டு முதலீடுகளின் வெளிப்பாய்ச்சல்கள் நிகழ்ந்த போதும் உள்நாட்டு வெளிநாட்டு நாணயச் சந்தையில் அவ்வப்போது தளம்பல்கள் அவதானிக்கப்பட்டன.*



*வெளிநாட்டுத் துறையானது 2020இல் குறிப்பிடத்தக்களவு அழுத்தத்திற்குட்படும் சாத்தியம் காணப்படுகின்றது. கொவிட் - 19 உலகளாவிய நோய்ப்பரவலின் காரணமாக 2020 மாச்சின் பின்பகுதியில், ஏற்றுமதியினை நோக்காகக் கொண்ட தயாரித்தல் உள்ளடங்கலாக அநேகமாக அனைத்து உள்நாட்டுப் பொருளாதார நடவடிக்கைகளும் நிறுத்தப்பட்டமை, உலகளாவிய பயணம் மீதான கட்டுப்பாடுகள் மூலம் சுற்றுலாக் கைத்தொழில் முற்றுமுழுதாக ஸ்தம்பிதமடைந்தமை, உலகளாவிய வழங்கல் சங்கிலிகள் மற்றும் வணிகப் பொருள் வர்த்தகத்தைப் பாதிக்கின்ற வகையில் பல நாடுகள் முடக்கப்பட்டமை அத்துடன் தோற்றம் பெற்றுவரும் சந்தைப் பொருளாதாரங்களிலிருந்து மூலதனம் வெளியேறுகின்றமை என்பன 2020இன் முதல் காலாண்டில் இலங்கையின் வெளிநாட்டுத் துறையினை ஏற்கனவே பாதிப்படையச் செய்துள்ளன. கொவிட் - 19 நோய்த்தொற்றிலிருந்து தோன்றுகின்ற குறிப்பிடத்தக்க நிச்சயமற்றதன்மையும் 2020 மாச்சில் இலங்கை ரூபா துரிதமாகத் தேய்வடைதலுடன் உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையினை பாதிப்படையச் செய்துள்ளது.*

அட்டவணை 5.1

## சென்மதி நிலுவை பகுப்பாய்வு வெளிப்படுத்துகை

| விபரம் | ஐ.அ.டொ. மில்லியன் | | ரூபா. மில்லியன் | |
|---|---|---|---|---|
| | 2018(அ) | 2019 (ஆ) | 2018(அ) | 2019 (ஆ) |
| **நடைமுறை கணக்கு (தேறிய)** | **-2,799** | **-1,808** | **-451,975** | **-320,969** |
| **வர்த்தக நிலுவை** | **-10,343** | **-7,997** | **-1,673,111** | **-1,430,232** |
| ஏற்றுமதிகள் | 11,890 | 11,940 | 1,933,533 | 2,134,796 |
| இறக்குமதிகள் | 22,233 | 19,937 | 3,606,644 | 3,565,028 |
| **பணிகள் (தேறிய)** | **3,766** | **2,849** | **611,233** | **510,822** |
| பெறுகைகள் | 8,374 | 7,474 | 1,358,881 | 1,337,540 |
| கொடுப்பனவுகள் | 4,608 | 4,625 | 747,648 | 826,718 |
| **முதலாந்தர வருமானம் (தேறிய)** | **-2,385** | **-2,426** | **-389,601** | **-432,250** |
| பெறுகைகள் | 249 | 252 | 40,204 | 44,989 |
| கொடுப்பனவுகள் | 2,633 | 2,678 | 429,805 | 477,239 |
| **இரண்டாந்தர வருமானம் (தேறிய)** | **6,163** | **5,766** | **999,504** | **1,030,690** |
| இரண்டாந்தர வருமானம்: வரவு | 7,023 | 6,726 | 1,139,324 | 1,202,334 |
| தொழிலாளர் பணவனுப்பல்கள் | 7,015 | 6,717 | 1,138,124 | 1,200,766 |
| அரசாங்க மாற்றல்கள் | 8 | 9 | 1,201 | 1,568 |
| இரண்டாந்தர வருமானம்: செலவு | 860 | 960 | 139,821 | 171,644 |
| **மூலதன கணக்கு (தேறிய)** | **14** | **23** | **2,265** | **4,095** |
| மூலதன கணக்கு : வரவு | 42 | 51 | 6,702 | 9,054 |
| மூலதன கணக்கு : செலவு | 27 | 28 | 4,437 | 4,959 |
| **நடைமுறை மற்றும் மூலதன கணக்கு (தேறிய)** | **-2,785** | **-1,785** | **-449,710** | **-316,875** |
| **நிதியியல் கணக்கு (தேறிய)** | **-3,378** | **-2,432** | **-548,398** | **-436,783** |
| **நேரடி முதலீடு : சொத்துக்கள்** | **68** | **77** | **11,021** | **13,830** |
| **நேரடி முதலீடு : பொறுப்புகள்** | **1,614** | **758** | **260,831** | **135,538** |
| **சொத்துப் பட்டியல் முதலீடு : சொத்துக்கள்** | **...** | **-** | **6** | **-** |
| படுகடன் பிணையங்கள் | ... | - | 6 | - |
| **சொத்துப் பட்டியல் முதலீடு : பொறுப்புக்கள்** | **129** | **2,303** | **-2,281** | **406,997** |
| பங்கு மூலதனம் | -4 | -15 | -3,728 | -2,964 |
| படுகடன் பிணையங்கள் | 134 | 2,317 | 1,446 | 409,960 |
| **நிதியியல் பெறுதிகள்** | - | - | - | - |
| **ஏனைய முதலீடு : சொத்துக்கள்** | **372** | **100** | **64,683** | **17,823** |
| நாணயம் மற்றும் வைப்புகள் | 80 | -93 | 14,605 | -16,796 |
| வர்த்தக கொடுகடன் மற்றும் முற்பணங்கள் | 177 | -4 | 28,647 | -680 |
| ஏனைய பெறத்தக்க கணக்குகள் | 116 | 196 | 21,430 | 35,299 |
| **ஏனைய முதலீடு : பொறுப்புகள்** | **1,073** | **-114** | **184,204** | **-18,653** |
| நாணயம் மற்றும் வைப்புகள் | -632 | 167 | -107,198 | 31,079 |
| கடன்கள் | 1,620 | -277 | 278,136 | -49,269 |
| மத்திய வங்கி | 252 | 327 | 39,999 | 58,277 |
| வைப்புக்களை ஏற்கும் கூட்டுத்தாபனங்கள் | 697 | -281 | 120,016 | -50,904 |
| மத்திய அரசாங்கம் | 557 | -97 | 96,909 | -15,917 |
| ஏனைய துறைகள் | 114 | -226 | 21,212 | -40,725 |
| வர்த்தக கொடுகடன் மற்றும் முற்பணங்கள் | 247 | -28 | 36,401 | -5,577 |
| ஏனைய கொடுபடத்தக்க கணக்குகள் | -162 | 24 | -23,135 | 5,114 |
| சிறப்பு எடுப்பனவு உரிமைகள் | - | - | - | - |
| **ஒதுக்கு சொத்துக்கள்** | **-1,002** | **337** | **-181,354** | **55,445** |
| நாணய தங்கம் | -103 | -14 | -16,244 | -2,614 |
| சிறப்பு எடுப்பனவு உரிமைகள் | -3 | 6 | -519 | 1,080 |
| ப.நா.நி இல் ஒதுக்கு நிலைமை | - | - | - | - |
| ஏனைய ஒதுக்கு சொத்துக்கள் | -895 | 346 | -164,592 | 56,979 |
| நாணயம் மற்றும் வைப்புகள் | -1,011 | 361 | -170,196 | 59,518 |
| பிணையங்கள் | 122 | -19 | 6,732 | -3,039 |
| **தேறிய பிழைகளும் தவறுகளும்** | **-593** | **-647** | **-98,688** | **-119,909** |
| **திரண்ட நிலுவை (இ)** | **-1,103** | **377** | **-4,354** | **62,296** |
| **மொ.உ.உ. இன் சதவீதமாக** | | | | |
| வர்த்தக நிலுவை | -11.7 | -9.5 | | |
| பொருட்கள் மற்றும் பணிகள் | -7.4 | -6.1 | | |
| நடைமுறை கணக்கு | -3.2 | -2.2 | | |
| நடைமுறை மற்றும் மூலதன கணக்கு | -3.1 | -2.1 | | |

(அ) திருத்தப்பட்டது


(ஆ) தற்காலிகமானது

(இ) திரண்ட நிலுவையைக் கணிப்பிடுவது தொடர்பில் அட்டவணை 5.13 பார்க்குக


*மூலம்:* இலங்கை மத்திய வங்கி

வரைபடம் 5.1

வெளிநாட்டுத்துறை செயலாற்றம் - 2019



வரைபடம் 5.2
சென்மதி நிலுவை




*மூலம்* : இலங்கை மத்திய வங்கி

*வெளிநாட்டு செலாவணி சந்தை மீதான அழுத்தத்தினை தணிப்பதற்கு மத்திய வங்கியும் அரசாங்கமும் மூன்று மாத காலப்பகுதிக்கு உந்து ஊர்திகளினதும் அத்தியாவசியமற்ற நுகர்வுப் பொருட்களினதும் இறக்குமதியினை தற்காலிகமாக இடைநிறுத்துதல் உள்ளடங்கலாக அவசரகால வழிமுறைகளை எடுத்தன. ஒட்டுமொத்தமாக, உள்நாட்டிலும் உலகளாவியரீதியிலும் கொவிட் - 19 நோய்ப்பரவலின் தாக்கம் வியாபிக்கின்றமையின் அளவு கணிசமான படுகடன் தீர்ப்பனவு சவால்களுக்கு மத்தியில் உள்நாட்டு வெளிநாட்டு செலாவணிச் சந்தையில் சாத்தியமான ஊகம் சார்ந்த தளம்பல்களுடன் சேர்ந்து 2020 இன் சென்மதி நிலுவையின் நடைமுறைக் கணக்கினதும் நிதியியல் கணக்கினதும் செயலாற்றத்தினை நிர்ணயிக்கும். வெளிநாட்டுத் துறையின் நீண்ட கால உறுதிப்பாட்டினை நிச்சயப்படுத்தும் பொருட்டு, நடுத்தர காலம் தொடக்கம் நீண்ட காலப் போக்கில் நடைமுறைக் கணக்குப் பற்றாக்குறையை நீடித்து நிலைத்திருக்கும் மட்டங்களில் பேணுவதும் அதேபோன்று வெளிநாட்டுத் தங்கியிருப்புக்களைக் கட்டியெழுப்புவதும் மிகவும் முக்கியத்துவமிக்கவையாக காணப்படுகின்றன. கணிசமானளவு பாரிய இறைப் பற்றாக்குறையின் கசிவுத் தாக்கங்கள் காணப்படுமாயின் வெளிநாட்டு நிதியிடல் தேவைப்பாடுகளும் அதிகரிக்கும். இப்பின்னணியில், உலகளாவிய நோய்த்தொற்றின் காரணமாக உலகளாவிய மூலதனச் சந்தைகளுக்கான அணுகுவழி தோற்றம்பெற்றுவரும் மற்றும் அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளுக்கு மட்டுப்படுத்தப்பட்டதாகவிருக்கும் என்பதனால் சில இடைவெளி நிதியிடலூடாக குறுங்கால வெளிநாட்டு படுகடன் கடப்பாடுகளுக்கு நிதியிடுவதற்கு உடனடிக் கவனம் செலுத்தப்படவேண்டும். படுகடனைத் தோற்றுவிக்காத வெளிநாட்டு முதலீட்டினைக் கவருவதற்கு நடுத்தர காலத்தில் ஏற்றுமதிகளை நோக்காகக் கொண்ட தயாரித்தல் மற்றும் பணிகள் துறையினை வசதிப்படுத்துவதற்கான வழிமுறைகள் அவசியமானதாகக் காணப்படுகின்றன.*

## 5.2 வெளிநாட்டு வர்த்தகக் கொள்கைகள், அபிவிருத்திகள் மற்றும் நிறுவன ரீதியான ஆதரவு

**அரசாங்கமானது 2019ஆம் ஆண்டில் வர்த்தக வசதிப்படுத்தலுக்காகவும் ஏற்றுமதி ஊக்குவிப்புக்காகவும் பாரிய வர்த்தக ஒருங்கிணைப்பின் மீதும் நிறுவன ரீதியான ஆதரவினை மேம்படுத்துவதன் மீதும் தொடர்ந்தும் கவனம் செலுத்தியது.** பிராந்திய வர்த்தக உடன்படிக்கைகளுக்கான மேம்படுத்தல்கள் மீதான கலந்துரையாடல்கள் தொடர்ந்தும் இடம்பெற்ற போதிலும் சீனா, இந்தியா மற்றும் தாய்லாந்து போன்ற நாடுகளுடன் முன்மொழியப்பட்ட அனைத்தையுமுள்ளடக்கிய சுதந்திர வர்த்தக/ பங்குடமை உடன்படிக்கைகள் மீதான இருபுடைப் பேச்சுவார்த்தைகள் 2019ஆம் ஆண்டில் இடம்பெறவில்லை. இதற்குப் புறம்பாக, 2018 மே மாதம் அமுலுக்கு வந்த இலங்கை-சிங்கப்பூர் சுதந்திர வர்த்தக உடன்படிக்கை மீதான மீளாய்வுச்

அட்டவணை 5.2
முன்னுரிமை வர்த்தக உடன்படிக்கைகளுக்கு கீழான இலங்கையின் ஏற்றுமதிகள்

| முன்னுரிமை உடன்படிக்கை | 2018 | 2019 (அ) | | |
|---|---|---|---|---|
| | பெறுமதிகள் (ஐ.அ.டொ. மில்லியன்) | பெறுமதிகள் (ஐ.அ.டொ. மில்லியன்) | வளர்ச்சி (%) | பங்கு (%) |
| முன்னுரிமைகளின் பொதுவாக்கப்பட்ட முறைமை (ஜி.எஸ்.பீ) | 3,927.7 | 4,077.9 | 3.8 | 82.5 |
| இதில் ஐரோப்பிய ஒன்றியம் (ஜி.எஸ்.பீ + உள்ளடங்கலாக) (ஆ) | 2,665.3 | 2,766.3 | 3.8 | 56.0 |
| அமெரிக்கா | 708.0 | 709.4 | 0.2 | 14.3 |
| ருசிய கூட்டாட்சி (இ) | 166.6 | 150.3 | -9.8 | 3.0 |
| அவுஸ்திரேலியா | 79.5 | 89.7 | 12.9 | 1.8 |
| துருக்கி | 79.5 | 85.3 | 7.3 | 1.7 |
| யப்பான் | 92.7 | 84.9 | -8.4 | 1.7 |
| கனடா | 71.6 | 73.5 | 2.6 | 1.5 |
| 2000 இல் நடைமுறைப்படுத்தப்பட்ட இந்தியா-இலங்கை சுதந்திர வர்த்தக உடன்படிக்கை | 483.5 | 489.6 | 1.3 | 9.9 |
| 2006 இல் நடைமுறைப்படுத்தப்பட்ட ஆசிய-பசுபிக் வர்த்தக உடன்படிக்கை (ஈ) | 157.0 | 179.3 | 14.2 | 3.6 |
| 1989 இல் நடைமுறைப்படுத்தப்பட்ட வர்த்தக முன்னுரிமைகளுக்கான உலகலாவிய முறைமை | 92.6 | 80.7 | -12.8 | 1.6 |
| 2005 இல் நடைமுறைப்படுத்தப்பட்ட பாகிஸ்தான்-இலங்கை சுதந்திர வர்த்தக உடன்படிக்கை | 51.0 | 60.8 | 19.1 | 1.2 |
| 2006 இல் நடைமுறைப்படுத்தப்பட்ட தெற்காசியா சுதந்திர வர்த்தக பிரதேசம் | 35.4 | 55.9 | 57.9 | 1.1 |
| 1995 இல் நடைமுறைப்படுத்தப்பட்ட சார்க் முன்னுரிமை வர்த்தக உடன்படிக்கை | 3.5 | 1.7 | -50.1 | ... |
| **முன்னுரிமை உடன்படிக்கையின் கீழான மொத்த ஏற்றுமதிகள்** | **4,750.7** | **4,945.8** | **4.1** | **100.0** |
| **இலங்கையினுடைய மொத்த வணிகப்பொருள் ஏற்றுமதிகளின் பங்காக** | **40.0** | **41.4** | | |

(அ) தற்காலிகமானது
(ஆ) ஐரோப்பிய ஒன்றியத்திற்கான பொருட்களின் இறக்குமதிகள் மீதான தீர்வைகள் 66 வீதமானவைக்கு ஐரோப்பிய ஒன்றிய ஜீ.எஸ்.பீ. முன்னுரிமையான நுழைவை வழங்கும் அதே வேளையில் ஐரோப்பிய ஒன்றியத்திற்கான பொருட்களின் இறக்குமதிகள் மீதான அதே தீர்வைகளிந்கு பூச்சிய தீர்வை நுழைவை ஜீ.எஸ்.பீ. + வழங்குகிறது.
(இ) ருசியா,பெலாறுஸ் மற்றும் கசகஸ்தான் உள்ளடங்கலாக
(ஈ) முன்னர் பாங்கொக் உடன்படிக்கை என அழைக்கப்பட்டது

*மூலங்கள்:* இலங்கை சுங்கம் வர்த்தகத் திணைக்களம்

செயன்முறையொன்று 2019இல் மேற்கொள்ளப்பட்டது. வர்த்தக தாராளமயப்படுத்தலிலிருந்து தோன்றக்கூடிய சாத்தியமான எதிர்மறையான விளைவுகளை தணிப்பதற்கு முக்கியமாக சந்தை அணுகுவழி நிகழ்ச்சித்திட்டம் மற்றும் 2018ஆம் ஆண்டின் 2ஆம் இலக்க தேவையற்ற பொருட்களைக் குவித்தலுக்கெதிரான மற்றும் ஈடளிக்கும் தீர்வைச் சட்டம் அத்துடன் 2018ஆம் ஆண்டின் 3ஆம் இலக்க பாதுகாப்பு வழிமுறைகள் சட்டம் என்பவற்றைச் செயற்படுத்தல் என்பனவூடாக வர்த்தக சீராக்க நிகழ்ச்சித்திட்டங்கள் உள்ளிட்ட வழிமுறைகள் எடுக்கப்பட்டன. மேலும், ஏற்றுமதி அபிவிருத்திச் சபையானது தேசிய ஏற்றுமதி உபாயம் 2018-2022இன் நடைமுறைப்படுத்தலினை தொடர்ந்தும் முன்னெடுத்தது. உலக வர்த்தக அமைப்பின் வர்த்தக வசதிப்படுத்தல் உடன்படிக்கையின் தேவைப்படுத்தல்களுக்கமைவாக தேசிய ஒரே கூரையின் கீழான நிலையத்துடன் தொடர்புபட்ட முன்னேற்றம் மீளாய்வுக்குட்பட்ட காலப்பகுதியில் தொடர்ந்தும் இடம்பெற்றது. அத்தகைய வழிமுறைகளின் தாக்கத்தைப் பிரதிபலித்து இலங்கையின் வியாபாரம் செய்யுங்கள் சுட்டெண்ணின் நிலை 2019இல் 100ஆவது நிலையிலிருந்து 2020இல் 99ஆக (2018இல் 111ஆவது நிலை) மேம்பட்ட அதேவேளை, எதிர்வரும் காலங்களில் ஆதரவுக் கொள்கை மறுசீரமைப்புகளின் நடைமுறைப்படுத்தல்களின் மூலம் மேலும் முன்னேற்றம் அடையுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

**2019ஆம் ஆண்டில் முன்னுரிமைகளின் பொதுவாக்கப்பட்ட முறைமைத் திட்டங்களிலிருந்து இலங்கை தொடர்ந்தும் நன்மையடைந்தது.** இலங்கைக்குக் கிடைக்கப்பெற்ற முன்னுரிமைகளின் பொதுவாக்கப்பட்ட முறைமைத் திட்ட வசதிகளுக்கு மத்தியில், ஐரோப்பிய ஒன்றியத்தினாலும் ஐக்கிய அமெரிக்காவினாலும் வழங்கப்பட்ட வசதிகள் இலங்கையின் மொத்த முன்னுரிமை ஏற்றுமதிகளின் மூன்றில் இரு மடங்கிற்கு மேல் பங்களிப்புச் செய்தன. 2017 மே இல் ஐரோப்பிய ஒன்றியத்தின் முன்னுரிமைகளின் பொதுவாக்கப்பட்ட முறைமைத் திட்டம் + என்ற திட்டம் மீள நடைமுறைப்படுத்தப்பட்டதிலிருந்து ஐரோப்பிய ஒன்றியத்திற்கான ஏற்றுமதிகள் குறிப்பிடத்தக்களவு வளர்ச்சியடைந்தது. ஐரோப்பிய ஒன்றியத்தின் முன்னுரிமைகளின் பொதுவாக்கப்பட்ட முறைமைத் திட்டம் + இன் மொத்தத் தீர்வைத் தொடர்களின் 66 சதவீதம் மீதான தீர்வை அகற்றுதலின் காரணமாக இலங்கை இந்நன்மையினைப் பெறக்கூடியதாக இருந்தது. ஆடைகள், இறப்பர் உற்பத்திகள், தேயிலை, கடலுணவு, உணவு, குடிபானங்கள் மற்றும் புகையிலை அத்துடன் இயந்திரங்கள் மற்றும் பொறியியல் உபகரணங்கள் ஆகியன 2019இல் ஐரோப்பிய ஒன்றிய முன்னுரிமைகளின் பொதுவாக்கப்பட்ட முறைமைத் திட்டம் + இன் கீழ் ஏற்றுமதிசெய்யப்பட்ட முக்கிய வகைகளாக விளங்கின. எவ்வாறாயினும், 2019இல் உலக வங்கியினால் வகைப்படுத்தப்பட்டவாறு 'உயர் நடுத்தர-வருமானம்' என்ற அந்தஸ்த்தினை அடைந்தமையினால் ஐரோப்பிய ஒன்றியத்தின் முன்னுரிமைகளின் பொதுவாக்கப்பட்ட முறைமைத் திட்டம் + இற்கான அதேபோன்று நியமமான முன்னுரிமைகளின் பொதுவாக்கப்பட்ட முறைமைத் திட்டத்திற்கான தகைமை 2023 அளவில் இல்லாது போகலாம். அதேவேளை, ஐரோப்பிய ஒன்றியத்தின் முன்னுரிமைகளின் பொதுவாக்கப்பட்ட முறைமைத் திட்டம் + இலிருந்து பிரதானமாக நன்மைபெறுகின்ற ஆடைத்துறையானது திட்டத்திற்கு தகைமைபெறும் பொருட்டு உற்பத்திசெய்த நாடு தேவைப்பாடுகளை நிறைவுசெய்வதற்கு தொடர்ந்தும் போராடி வருவது ஆடை ஏற்றுமதிகளின் வளர்ச்சியை தடைப்படுத்துகின்றது. இது தொடர்பில், ஐரோப்பிய ஒன்றியத்தின் முன்னுரிமைகளின் பொதுவாக்கப்பட்ட முறைமைத் திட்டம் + இன் கூட்டு விதிகளின் கீழ் இந்தோனேசியா மற்றும் தென் கொரிய நாடுகளிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட துணிகளைப் பயன்படுத்தி இலங்கையின் ஆடைத் துறை தகைமை பெறுவதற்கான அனுமதியினை வேண்டி அரசாங்கமானது 2018இல் இந்நாடுகளின் அரசாங்கங்களுடன் கூட்டிணைந்து ஐரோப்பிய ஒன்றியத்திடம் ஏற்கனவே பல கோரிக்கைகளை முன்வைத்ததுடன் இக்கோரிக்கைகள் ஐரோப்பிய ஒன்றியத்தினால் பரிசீலிக்கப்பட்டு வருகின்றன. அதேவேளை, முன்னுரிமை உடன்படிக்கைகளின் கீழ் மொத்த ஏற்றுமதிகளின் 14.3 சதவீதத்திற்கு வகைகூறுகின்ற ஐக்கிய அமெரிக்க முன்னுரிமைகளின் பொதுவாக்கப்பட்ட முறைமைத் திட்டத்தின் கீழான ஏற்றுமதிகள், 2019இல் சிறிதளவு அதிகரித்தன. ஆடைகள், இறப்பர் உற்பத்திகள், உணவு, குடிபானம் மற்றும் புகையிலை, தேயிலை மற்றும் இரசாயன உற்பத்திகள் என்பன 2019இல் ஐக்கிய அமெரிக்க முன்னுரிமைகளின் பொதுவாக்கப்பட்ட முறைமைத் திட்டத்தின் கீழ் ஏற்றுமதி செய்யப்பட்ட பிரதான வகைகளாக விளங்கின. தற்போதுள்ள ஐக்கிய அமெரிக்க முன்னுரிமைகளின் பொதுவாக்கப்பட்ட முறைமைத் திட்டமானது 2020 இறுதிவரை அமுலிலிருக்கும் என்பதுடன் ஐக்கிய அமெரிக்க அரசாங்கத்தின் பொதுவான நடைமுறையின் பிரகாரம் மீள புதுப்பிக்கப்படுமென எதிர்பார்க்கப்படுகின்றது. இதற்கு மேலதிகமாக, ருசியா சம்மேளனம், யப்பான், அவுஸ்திரேலியா, துருக்கி, கனடா மற்றும் சுவிட்சர்லாந்து போன்ற நாடுகளினால் ஏற்றுமதிகளுக்கு வழங்கப்பட்ட பங்களிப்பு ஒப்பீட்டளவில் குறைவாக இருந்தபோதிலும் இந்நாடுகளினால் வழங்கப்பட்ட முன்னுரிமைகளின் பொதுவாக்கப்பட்ட முறைமைத் திட்டங்களிலிருந்து இலங்கை தொடர்ந்தும் நன்மையடைந்தது. அதேவேளை, மெக்சிகோ மற்றும் பேரு நாடுகளுக்கு பிரதானமாக கறுவா ஏற்றுமதிசெய்த வர்த்தக முன்னுரிமைகளின் உலகளாவிய முறைமை உடன்படிக்கையின் கீழ் இலங்கையின் ஏற்றுமதி வருவாய்கள் 2019இல் வீழ்ச்சியடைந்தன. குறுகிய ஏற்றுமதித் தளமும் குறைவான உற்பத்தி ஊடுருவலும் அனேகமான முன்னுரிமைகளின் பொதுவாக்கப்பட்ட முறைமைத் திட்டங்களின் நன்மைகளை முழுமையாக ஈட்டிக்கொள்வதிலிருந்து இலங்கையைத் தடைபடுத்துகின்றன.

**இருபுடை வர்த்தக மேம்படுத்தல்கள் மீதான கலந்துரையாடல்கள் முன்னேற்றமடைந்த போதிலும் புதிய வர்த்தக உடன்படிக்கைகள் தொடர்பிலான மேலதிக பேச்சுவார்த்தைச் சுற்றுகள் 2019இன் போது ஸ்தம்பிதம் அடைந்தன.** 2019இன் தொடக்கத்தில் சீனா, இந்தியா (பொருளாதார மற்றும் தொழில்நுட்ப ஒத்துழைப்பு உடன்படிக்கை) மற்றும் தாய்லாந்து ஆகிய நாடுகளுடன் இலங்கை மூன்று விரிவான சுதந்திர வர்த்தக/பங்குடமை உடன்படிக்கைகள் தொடர்பான பல சுற்றுப் பேச்சுவார்த்தைகளை நிறைவுசெய்திருந்தது. அரசியல் பதற்றங்களுக்கு மத்தியில் இப்புதிய சுதந்திர வர்த்தகப் பங்குடமை உடன்படிக்கைகளுக்கான உத்தியோகபூர்வ இருபுடைப் சுற்றுப் பேச்சுவார்த்தைகள் 2019ஆம் ஆண்டில் இடம்பெறவில்லை. சீனா-இலங்கை சுதந்திர வர்த்தக உடன்படிக்கை பற்றிய பேச்சுவார்த்தைகளின் பரிந்துரை மீது சீனா அரசாங்கத்துடன் அரசியல் மட்ட கலந்துரையாடல்கள் இடம்பெற்ற போதிலும் 2017 மாச்சில் இடம்பெற்ற ஆறாவது சுற்றுப் பேச்சுவார்த்தையின் பின்னர் உத்தியோகபூர்வ சுற்றுப் பேச்சுவார்த்தைகள் மீண்டும் இடம்பெற்றிருக்கவில்லை. அதேவேளை, இந்தியாவிற்கும் இலங்கைக்குமிடையில் முன்மொழியப்பட்ட பொருளாதார மற்றும் தொழில்நுட்ப ஒத்துழைப்பு உடன்படிக்கை மீதான 11 சுற்று பேச்சுவார்த்தைகள் 2018 செத்தெம்பர் அளவில் முடிவடைந்தன. அதற்கமைய, இரண்டு அத்தியாயங்களின் அதாவது ‘சுங்க நடைமுறை’ மற்றும் ‘வர்த்தக வசதிப்படுத்தல் அத்துடன் வர்த்தகப் பரிகாரங்கள்’ மீதான பேச்சுவார்த்தைகள் வெற்றிகரமாக நிறைவுபெற்று வரைவு அத்தியாயங்கள் இறுதிப்படுத்துவதற்காக தொடர்புடைய அமைச்சுக்களுக்கு அனுப்பப்பட்டுள்ளன. 2018 யூலையில் தொடங்கிய இலங்கை-தாய்லாந்து சுதந்திர வர்த்தக உடன்படிக்கை மீதான பேச்சுவார்த்தைகள் 2018 செத்தெம்பரில் இடம்பெற்ற 2ஆம் சுற்றுப் பேச்சுவார்த்தைகளின் பின்னர் மீளத் தொடங்கவில்லை. உலகளாவிய பெறுமதிச் சங்கிலித் தொழிற்பாடுகளூடாக பணிகள் மீதான வர்த்தகம் முதலீடு மற்றும் வியாபார வாய்ப்புகளினை மேம்படுத்தும் எதிர்பார்க்கையுடன் இலங்கை அதன் முதலாவது அனைத்தையுமுள்ளடக்கிய இருபுடை சுதந்திர வர்த்தக உடன்படிக்கையினை சிங்கப்பூருடன் 2018 சனவரியில் கைச்சாத்திட்டது. இது 2018 மே இல் நடைமுறைக்கு வந்தது. எவ்வாறாயினும், இலங்கை-சிங்கப்பூர் சுதந்திர வர்த்தக உடன்படிக்கை மீது பல்வேறு ஆர்வலர்களினால் எழுப்பப்பட்ட கரிசனைகளுக்கு மத்தியில் சுதந்திர வர்த்தக உடன்படிக்கையை மேலும் பகுப்பாய்வு செய்வதற்கு 2018 ஓகத்தில் நிபுணர்கள் குழுவொன்று நியமிக்கப்பட்டது. இக்குழு அதன் அறிக்கையினை 2018 நவெம்பரில் சமர்ப்பித்தது. அதனைத் தொடர்ந்து 5 உறுப்பினர்களைக் கொண்ட அமைச்சரவைத் துணைக்குழுவொன்று நியமிக்கப்பட்டு இலங்கை-சிங்கப்பூர் வர்த்தக உடன்படிக்கையின் திருத்தம் செய்யவேண்டிய விடயப்பரப்புக்களையும் தொடர்புடைய உள்நாட்டு நிறுவனங்களுடன் மேலும் கலந்துரையாடப்பட வேண்டிய தீர்வு காணப்படாதுள்ள கரிசனைகள் பற்றியும் குறித்துரைக்கின்ற அதன் பூர்வாங்க அறிக்கையினைத் தயாரித்தது. அதேவேளை, மலேசியா, இந்தோனேசியா, வங்களாதேசம் போன்ற நாடுகளுடனான சாத்திமான பல சுதந்திர வர்த்தக உடன்படிக்கைகள் பற்றிய பூர்வாங்க ஆய்வுகளும் கலந்துரையாடல்களும் 2019இல் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டன. 2019 காலப்பகுதியில் இருபுடை வர்த்தக உடன்படிக்கை தவிர ஹங்கேரி, அவுஸ்திரேலியா, ஜேர்மனி, நியுசிலாந்து போன்ற நாடுகளுடனான பொருளாதார ஒத்துழைப்பு தொடர்பான பல கலந்துரையாடல்கள் மேற்கொள்ளப்பட்ட அதேவேளை, ஐரோப்பிய ஒன்றியம், தாய்லாந்து, குவைத், வியட்நாம் ஆகிய நாடுகளுடன் இணைந்த குழுக்கள் மற்றும் ஆணைக்குழுக்கள் இடம்பெற்றன. 2019 திசெம்பர் தொடக்கம் பல்புடை, இருபுடை மற்றும் பொருளாதார சமவாயங்கள் மீதான கடமைகளும் தொழிற்பாடுகளும் நிதி, பொருளாதார மற்றும் கொள்கை அபிவிருத்தி அமைச்சுக்கு குறித்தொதுக்கப்பட்டிருக்கின்றன. அதற்கமைய, ஏற்கனவேயுள்ள சுதந்திர வர்த்தக உடன்படிக்கைகள் மற்றும் தற்போது இடம்பெற்று வருகின்ற பேச்சுவார்த்தைகள் உள்ளடங்கலாக நாட்டின் ஒட்டுமொத்த பேரண்ட பொருளாதாரக் கொள்கையினை மீளாய்வு செய்த பின்னர் நிதி, பொருளாதார மற்றும் கொள்கை அபிவிருத்தி அமைச்சினால் எதிர்காலச் செயற்பாடுகள் மேற்கொள்ளப்படும்.

**இச் சுதந்திர வர்த்தக உடன்படிக்கைகளின் கீழான ஒப்பீட்டளவில் குறைவான வர்த்தக அளவுகளைக் கருத்திற்கொண்டு ஏற்கனவேயுள்ள இருபுடை வர்த்தக உடன்படிக்கைகளின் பயன்பாட்டினை மேலும் அதிகரிப்பதற்கு வழிமுறைகள் எடுக்கப்பட்டன.** இந்தியா-இலங்கை சுதந்திர வர்த்தக உடன்படிக்கையானது இலங்கைக்கு மிகவும் நன்மைபயக்கும் இருபுடை சுதந்திர வர்த்தக உடன்படிக்கையாக இருந்து வந்தது. இதன் கீழ் இலங்கையின் ஏற்றுமதிகள், 2018இன் ஐ.அ.டொலர் 484 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2019இல் ஐ.அ.டொலர் 490 மில்லியனுக்கு சிறிதளவு அதிகரித்தன. சுதந்திர வர்த்தக உடன்படிக்கையின் கீழ் இந்தியாவிலிருந்தான ஐ.அ.டொலர் 199 மில்லியன் தொகையுடைய ஏறத்தாழ 5 சதவீத இறக்குமதிகளுடன் ஒப்பிடுகையில் விலங்குத் தீன், வாசனைத் திரவியங்கள், ஆடைகள், அடிப்படை உலோகங்கள் மற்றும் பொருட்கள் என்பன மூலம் முன்னிலைப்படுத்தப்பட்டு இந்தியாவுக்கான இலங்கையின் 64 சதவீதமான ஏற்றுமதிகள், சுதந்திர வர்த்தக உடன்படிக்கையூடாக அனுப்பப்பட்டன. ஆடைகள் மற்றும் மிளகு மீதான அளவுசார் மட்டுப்பாடுகள், சுங்க அப்புறப்படுத்தல் மற்றும் மாதிரிப் பரிசோதனைகள் மீதான நடைமுறைகள், மிதமிஞ்சிய ஆவணப்படுத்தல் கட்டணங்கள் மற்றும் தாமதங்கள் போன்ற இந்தியா-இலங்கை சுதந்திர வர்த்தக உடன்படிக்கையின் நடைமுறைப்படுத்தலுடன் தொடர்புபட்ட பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு மேலும் வழிமுறைகள்

எடுக்கப்பட்டன. பேச்சுவார்த்தைகள் நிறைவுபெறுகின்ற பொழுது பொருளாதார மற்றும் தொழில்நுட்ப ஒத்துழைப்பு உடன்படிக்கை இந்தியா-இலங்கை சுதந்திர வர்த்தக உடன்படிக்கையினை தன்னகப்படுத்தும். அதேவேளை, பாகிஸ்தான்-இலங்கை சுதந்திர வர்த்தக உடன்படிக்கையின் கீழான ஏற்றுமதிகள், 2019 ஆண்டு காலப்பகுதியில் ஐ.அ.டொலர் 61 மில்லியனாக 19.1 சதவீதத்தினால் அதிகரித்தன. பாகிஸ்தான்-இலங்கை சுதந்திர வர்த்தக உடன்படிக்கையின் கீழ் இலங்கை ஏற்றுமதி செய்த பிரதான உற்பத்திகளை வெற்றிலை, தெங்கு உள்ளீட்டு உற்பத்திகள் மற்றும் நடுத்தர அடர்த்தி கொண்ட நாரிழைப் பலகைகள் என்பன உள்ளடக்கியிருந்தன. குறைவான வர்த்தக அளவுகளுக்கு மத்தியில் பாகிஸ்தான்-இலங்கை சுதந்திர வர்த்தக உடன்படிக்கையின் ஊடான ஏற்றுமதிகள் ஏறத்தாழ 74 சதவீதமாக உயர்வாக காணப்பட்ட அதேவேளை பாகிஸ்தான்-இலங்கை சுதந்திர வர்த்தக உடன்படிக்கையின் ஊடான இறக்குமதிகள் ஐ.அ.டொலர் 24 மில்லியனுக்கு வகைகூறி ஏறத்தாழ 6 சதவீதமாகக் குறைவாகக் காணப்பட்டன. உற்பத்தி பன்முகப்படுத்தல் போதாமை, தற்காலிகமான கொள்கை மாற்றங்கள் மற்றும் நடைமுறைசார் தாமதங்கள் போன்ற தீர்வை தொடர்பற்ற தடைகள் போன்றன இவ் உடன்படிக்கையின் கீழ் வர்த்தக அளவுகளைத் தடைப்படுத்தியுள்ளன. எதுஎவ்வாறிருப்பினும், இந்தியா-இலங்கை சுதந்திர வர்த்தக உடன்படிக்கை மற்றும் பாகிஸ்தான்-இலங்கை சுதந்திர வர்த்தக உடன்படிக்கை என்பன தொடர்பில் 2019ஆம் ஆண்டில் இலங்கை சாதகமான வர்த்தக நிலுவையினை பேணியுள்ளது என்பது தெளிவாகத் தென்படுகின்றது. அதேவேளை, ஐக்கிய அமெரிக்கா-இலங்கை வர்த்தக மற்றும் முதலீட்டுக் கட்டமைப்பு உடன்படிக்கையின் கீழ் 13ஆவது இணைந்த சபைக்கூட்டம் 2019 யூனில் கொழும்பில் இடம்பெற்றது. விரிவான ஆராய்வுகளின் பின்னர் 'வியாபாரம் செய்யுங்கள் சுட்டெண்' இல் இலங்கையின் நிலையினை மேம்படுத்துவது உள்ளடங்கலாக பல்வேறு விடயப்பரப்புகளில் இயலளவுகளைக் கட்டியெழுப்புதல் மற்றும் திறன் அபிவிருத்தி என்பவற்றிற்கான தொழில்நுட்ப உதவியினை வழங்குவதில் தமது ஒத்துழைப்பினை வழங்குவதற்கு ஐக்கிய அமெரிக்க இணைத்தரப்பினர் விருப்பம் தெரிவித்தனர்.

**பிராந்திய வர்த்தக மற்றும் பணிகள் வலையமைப்புகள் மத்தியில் ஒத்துழைப்பினை அதிகரிக்கும் முக்கியத்துவத்தினை கருத்திற்கொண்டு பிராந்திய முன்னுரிமை வர்த்தக உடன்படிக்கைகளுடனான ஈடுபாடு மேலும் வலுப்படுத்தப்பட வேண்டும்.** 2006இல் கைச்சாத்திடப்பட்ட தென்னாசிய சுதந்திர வர்த்தக பிரதேசம் மீதான உடன்படிக்கை சார்க் முன்னுரிமை வர்த்தக உடன்படிக்கையினை பதிலீடு செய்யுமென எதிர்பார்க்கப்படுகின்றது. சார்க் முன்னுரிமை வர்த்தக உடன்படிக்கையின் பயன்பாட்டில் இது குறைவொன்றுக்கு வழிவகுத்துள்ள அதேவேளை, தென்னாசிய சுதந்திர வர்த்தக பிரதேசம் மீதான உடன்படிக்கையூடான ஏற்றுமதிகள் 2019 ஆண்டு காலப்பகுதியில் அதிகரித்துள்ளன. சார்க் முன்னுரிமை வர்த்தக உடன்படிக்கையின் கீழ் இலங்கையின் ஏற்றுமதி வருவாய்களில் 83 சதவீதத்திற்கும் மேல் ஆதிக்கம் செலுத்திய இந்தியாவுக்கான ஏற்றுமதிகள், தேங்காய்த் துருவல், மிளகு என்பன மூலம் தூண்டப்பட்டிருந்தன. தென்னாசிய சுதந்திர வர்த்தக பிரதேசம் மீதான உடன்படிக்கையின் தீர்வை தாராளமயமாக்கல் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் முதலாம் மற்றும் இரண்டாம் கட்டங்கள் முறையே 2015 மற்றும் 2018ஆம் ஆண்டுகளில் இலங்கையினால் நிறைவுசெய்யப்பட்டதுடன் 2019 காலப்பகுதியின் போது மூன்றாம் கட்டத்தின் கீழ் தீர்வைக் குறைப்பு கடமைப்பொறுப்பினை நடைமுறைப்படுத்துவதற்கு தீர்வைத் தொடர்களை இனங்காண்பதற்கான ஆர்வலர் கலந்தாலோசனைகள் இடம்பெற்றன. ஆசிய-பசுபிக் வர்த்தக உடன்படிக்கையின் கீழான ஏற்றுமதிகள் பிரதானமாக சீனாவுக்கு ஏற்றுமதி செய்யப்பட்ட தேயிலை, ஆடைகள், தெங்கு தொடர்புபட்ட பொருட்களின் மூலம் முன்னிலைப்படுத்தப்பட்டு 2019இல் அதிகரித்தன. 2018 மாச்சில் 4வது சலுகைகள் சுற்றினை இலங்கை நடைமுறைப்படுத்தியதுடன் 5வது சுற்று ஆசிய-பசுபிக் வர்த்தக உடன்படிக்கை பேச்சுவார்த்தைகளுக்கான நடைமுறை மற்றும் நோக்கெல்லையை வகுப்பதில் பங்கேற்கின்ற அரசுகள் தற்போது ஈடுபட்டுள்ளன. அதேவேளை, பல்துறைசார் தொழில்நுட்ப மற்றும் பொருளாதார ஒத்துழைப்புக்கான வங்காள விரிகுடா முயற்சியின் முன்மொழியப்பட்ட சுதந்திர வர்த்தக உடன்படிக்கை (பிம்ஸ்டெக்-சுதந்திர வர்த்தக உடன்படிக்கை) மீதான பல கலந்துரையாடல்கள் 2019இல் இடம்பெற்றன. இலங்கையின் வரி தாராளமயப்படுத்தல் திட்டத்தின் வரைவினை வணிகத் திணைக்களம் தயாரித்துள்ளதுடன் ஆர்வலர்களின் அவதானிப்புகளுக்காக அவர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

5

**உலக வர்த்தக அமைப்பின் வர்த்தக வசதிப்படுத்தல் உடன்படிக்கையின் நடைமுறைப்படுத்தலுடன் இணைந்து உலக வர்த்தக அமைப்புடனான இலங்கையின் பல்புடை வர்த்தக ஈடுபாடுகள் தொடர்ந்தும் இடம்பெற்றன.** 2019ஆம் ஆண்டில் கடற்றொழில் உதவுதொகைகள், வேளாண்மை, இ-வணிகம் மற்றும் இலத்திரனியல் மாற்றல்கள், உள்நாட்டு ஒழுங்குமுறைப்படுத்தல்கள் மற்றும் உலக வர்த்தக அமைப்பினை நவீனமயப்படுத்துவதற்கான மறுசீரமைப்பு என்பவற்றுடன் தொடர்புடைய உலக வர்த்தக அமைப்பின் விடயப்பரப்புகளில் இலங்கை முனைப்புடன் ஈடுபட்டது. வர்த்தக வசதிப்படுத்தல் உடன்படிக்கை 2017 பெப்புருவரியில் நடைமுறைக்கு வந்தது முதல் "அ", "ஆ" மற்றும் "இ" வகைகளின் கீழ் குறித்துரைக்கப்பட்டவாறு உலக வர்த்தக அமைப்புக்கான அதன் கடமைப்பொறுப்புக்களை இலங்கை அறிவித்தது. வர்த்தக வசதிப்படுத்தல் உடன்படிக்கையின் கீழ் இலங்கையின் கடமைப்பொறுப்புக்களை நிறைவேற்றுவதில் 2018 யூலையில் ஆரம்பிக்கப்பட்ட வர்த்தகத் தகவல் வாயிலை

பயன்படுத்துகின்றமையினை அதிகரிப்பதற்கு 2019இல் பல்வேறு ஆர்வலர் கலந்தாலோசனைகள் மற்றும் விழிப்புணர்வு அமர்வுகள் இடம்பெற்றுள்ளன. அதேவேளை, இலங்கைச் சுங்கத்திற்கென தேசிய ஒரே கூரையின் கீழான வசதியினை வடிவமைத்தல் முன்னெடுக்கப்படுவதுடன் தேசிய ஒரேகூரையின் கீழான வசதி பற்றிய உத்தேசத் திட்டம் நிதி அமைச்சுக்கும் இலங்கைச் சுங்கத்திற்கும் 2019 யூலையில் உலக வங்கியினால் கையளிக்கப்பட்டது.

**வெளிநாட்டு வர்த்தகத்தை வசதிப்படுத்தும் நோக்கில் நிறுவனசார் இயலளவினை நெறிப்படுத்துவதற்கு அரசாங்கத்தினால் முயற்சிகள் எடுக்கப்பட்டன.** புதிய வர்த்தகக் கொள்கையின் முக்கிய பெறுபேறான வர்த்தக சீராக்க நிகழ்ச்சித்திட்டமானது தாராளமயப்படுத்தப்பட்ட வர்த்தக நிபந்தனைகளுக்கு நிறுவனங்களும் பணியாளர்களும் சீரான முறையில் மாற்றமடைவதற்குத் துணையளிப்பதற்காக 2017இல் அறிமுகப்படுத்தப்பட்டதாகும். வர்த்தக சீராக்க நிகழ்ச்சித்திட்டத்தினை உற்பத்திதிறன்வாய்ந்த விதத்தில் நடைமுறைப்படுத்துவதற்கு வர்த்தக மற்றும் உற்பத்தித்திறன் ஆணைக்குழுவினையும் ஒரு கூட்டான வழிகாட்டல் குழுவினையும் நிறுவுதற்கு அமைச்சரவை 2019 மாச்சில் அனுமதியளித்தது. தொழிற்துறைகள் மற்றும் அரசாங்கம் என்பவற்றுக்கிடையிலான இடைவெளியினைப் போக்குவதனூடாக வர்த்தகத் தாராளமயமாக்கல் செயன்முறையில் முக்கிய பங்காற்றவுள்ள வர்த்தக மற்றும் உற்பத்தித்திறன் ஆணைக்குழுவிற்கு அதிகாரமளிப்பதற்கான சட்டமூலமொன்றை வரைவதற்கான முயற்சிகள் எடுக்கப்பட்டன. அதேவேளை, 2018 யூலையில் தொடங்கப்பட்ட தேசிய ஏற்றுமதி உபாயம் 2018-2022இனை செயற்படுத்துதல் 2019ஆம் ஆண்டில் தொடர்ந்தும் இடம்பெற்றது. அதற்கமைய, தேசிய ஏற்றுமதி உபாய நடவடிக்கைகள் திட்டத்தினை நடைமுறைப்படுத்துவதனை ஒருங்கிணைத்து, கண்காணித்து அறிக்கை சமர்ப்பிப்பதற்கு தனியார் மற்றும் அரசாங்கத் துறைகளிலிருந்தான பிரதிநிதித்துவத்துடன் கூடிய பல்வேறு ஆலோசனைக் குழுக்களை உள்ளடங்குகின்ற தேசிய ஏற்றுமதி உபாய முகாமைத்துவ அலகொன்று கைத்தொழில் ஏற்றுமதிகள் மற்றும் முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சு (முன்னர் அபிவிருத்தி உபாயங்கள் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சு என அழைக்கப்பட்ட) மற்றும் ஏற்றுமதி அபிவிருத்திச் சபை என்பவற்றின் கீழ் நிறுவப்பட்டது. 2019இன் இறுதியளவில் தேசிய ஏற்றுமதி உபாயமானது அது கவனம் செலுத்தும் துறைகள் மற்றும் வர்த்தகத் துணையளிப்புத் தொழிற்பாடுகள் போன்ற அனைத்திலும் கணிசமாக முன்னேற்றம் கண்டது. அதேவேளை, ஏற்றுமதி அபிவிருத்திச் சபையானது சந்தை அணுகுவழி ஆதரவுத் திட்டம், தகவல் தொழில்நுட்ப முயற்சி, மின்னியல் மற்றும் இலத்திரனியல் கூறுகள் துறைக்கான பல்தேசிய ஒத்துழைப்பு சென்றடைவு நிகழ்ச்சித்திட்டம், உட்கட்டமைப்பு வசதிகளை நிறுவுதல் மற்றும் ஏற்றுமதி அபிவிருத்திச் சபைக்குச் சொந்தமான வர்த்தக ஊக்குவிப்புத் தளமொன்றினை (இ-சந்தை வசதி) நிறுவுதல் போன்ற முயற்சிகளை தொடர்ந்தும் முன்னெடுத்த வேளையில் புதிய ஏற்றுமதி வெற்றியாளர்களாக, 2,000 பிராந்திய சிறிய மற்றும் நடுத்தர முயற்சியாளர்களை மாற்றம் பெறச்செய்தல், பெண் தொழில்முயற்சியாளர்களை ஊக்குவித்தல், “ஒரு கிராமம் ஒரே உற்பத்தி” எண்ணக்கரு, இனங்காணப்பட்ட பிராந்தியங்களில் நேரடியான மற்றும் நேரடியற்ற ஏற்றுமதியாளர்களை உருவாக்குதல் போன்ற தேசிய நிகழ்ச்சித்திட்டங்களுக்கு மேலும் மேம்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன. விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள், உள்நாட்டு வெளிநாட்டு வர்த்தக சந்தை விஜயங்கள் மற்றும் தொழில்நுட்ப உதவி என்பவற்றிலிருந்து தெரிவுசெய்யப்பட்ட ஏற்றுமதியாளர்கள் நன்மையடைந்தனர். பெறுமதி கூட்டல் மற்றும் அதிகரித்த உற்பத்தித்திறனூடாக தமது சந்தை அணுகுவழியினை விரிவு படுத்துவதற்கு தொழில்முயற்சியாளர்களுக்கு உதவுவதற்கென வடிவமைக்கப்பட்ட சந்தை அணுகுவழி ஆதரவுத் திட்டத்தின் கீழ் 2019 இறுதியளவில் ஏறத்தாழ 100 முன்மொழிவுகள் ஏற்றுமதி அபிவிருத்திச் சபையினால் தெரிவுசெய்யப்பட்டன. இதற்கு மேலதிகமாக, கருவா ஏற்றுமதிகளை மேலும் விருத்தி செய்வதற்கு “இலங்கைக் கறுவா” தகைமைபெற்ற புவியியல் ரீதியான குறிகாட்டி சமிக்ஞையினைப் பெற்றுக்கொள்ளுதல் உள்ளடங்கலாக ஏற்றுமதி அபிவிருத்திச் சபை பல வழிமுறைகளை எடுத்தது. ஏற்றுமதியினை ஊக்குவிப்பதற்கு வர்த்தக சம்மேளனங்களும் பங்களித்தன. இவை கொள்கை வகுத்தல், குறைகளைக் கையாளுதல் போன்றவற்றில் அரசாங்கம் மற்றும் தனியார்துறை ஆர்வலர்களை இணைப்பதில் உதவியளித்தன. அதேவேளை, 2019இல் உலக வர்த்தக அமைப்பின் வர்த்தக வசதிப்படுத்தல் உடன்படிக்கையின் நடைமுறைப்படுத்தலுடன் இசைந்து செல்லும் விதத்தில் இலங்கைச் சுங்கம் அதன் நடவடிக்கையினை மேலும் நெறிப்படுத்தியது. அதற்கமைய, முறைமை அடிப்படையிலமைந்த அப்புறப்படுத்தலுக்குப் பிந்திய கணக்காய்வொன்று நடைமுறைப்படுத்தப்பட்டது. இது சுங்க நடைமுறைகளை மேலும் இலகுபடுத்துவதற்கும் வசதிப்படுத்துகின்ற செலவினை குறைக்கின்ற அதேவேளை. உள்ளகக் கட்டுப்பாடுகளைப் பேணுவதற்கும் இலங்கைச் சுங்கத்தினை இயலச்செய்கின்றது. மேலும், இலங்கை எல்லையினுள் குப்பை, கழிவுகள் மற்றும் பாவனையிலிருந்து ஒதுக்கியவை நுழைவதனைத் தடுப்பதற்கு இலங்கைச் சுங்கம் பல வழிமுறைகளை எடுத்தது. அதேவேளை, இறக்குமதிச் சரக்கு அப்புறப்படுத்தல் 2019 யூலையில் முழுமையாக தன்னியக்கமாக்கப்பட்டது.

**2019 வரவுசெலவுத் திட்டத்தில் வர்த்தகம் தொடர்புபட்ட முன்மொழிவுகளை நடைமுறைப்படுத்துகின்ற அதேவேளை, உள்நாட்டு வேளாண்மையாளர்களையும் தொழிற்துறைகளையும் பாதுகாப்பதற்கு தெரிவுசெய்யப்பட்ட பொருட்களின்**

5

**இறக்குமதிகளை மட்டுப்படுத்துவதற்கு அரசாங்கத்தினால் வழிமுறைகள் எடுக்கப்பட்டன.** ஐந்து வருட காலப்பகுதியில் தெரிவுசெய்யப்பட்ட பொருட்கள் மீதான மேலதிகத் தீர்வைகளை தொடர்ந்தும் கட்டங்கட்டமாக நீக்குவதற்கு 2019 வரவுசெலவுத் திட்டத்தில் முன்மொழியப்பட்டது. இதற்கு மேலதிகமாக, வர்த்தக சீரமைப்பு நிகழ்ச்சித்திட்டம், தேசிய ஏற்றுமதி உபாய நிகழ்ச்சித்திட்டம், ஏற்றுமதி அணுகுவழி நிகழ்ச்சித்திட்டம் போன்ற முன்னெடுக்கப்படுகின்ற வர்த்தக மறுசீரமைப்பு நிகழ்ச்சித்திட்டங்களுக்காகவும் பிங்கிரிய மற்றும் வகவத்த போன்ற இடங்களில் முன்மொழியப்பட்ட கைத்தொழில் வலயங்களின் மேலதிக அபிவிருத்திக்காகவும் மேலதிக நிதியங்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டன. 2019 திசெம்பரில் உள்நாட்டு வேளாண்மையாளர்கள் மற்றும் தொழிற்துறைகளைப் பாதுகாப்பதற்கான வழிமுறையொன்றாக தெரிவுசெய்யப்பட்ட பொருட்களின் இறக்குமதியினை மட்டுப்படுத்துவதற்கு பணிப்புரைகள் வழங்கப்பட்டன. அதற்கமைய, நேரடி மீள் ஏற்றுமதி அல்லது சிறிய தயார்ப்படுத்தலின் பின்னர் மீள் ஏற்றுமதி நோக்கத்துடன் கூடிய மிளகு, கடுகு, புளி, கருவா, சாதிக்காய், சாதிப்பத்திரி, ஏலக்காய், இஞ்சி மற்றும் கராம்பு போன்ற வாசனைத் திரவியங்களின் இறக்குமதி கட்டுப்படுத்தப்பட்டது. மேலும், பிரதானமாக உள்நாட்டுக் கைத்தொழில்கள் மீதான தாக்கத்தின் காரணமாக வெசாக் விளக்குகள், பட்டங்கள் மற்றும் ஊதுபத்திக் குச்சிகள் போன்றவற்றின் இறக்குமதிகளும் கட்டுப்படுத்தப்பட்டன. மீளக் கப்பலேற்றுவதற்கு அல்லது மீள் ஏற்றுமதி நோக்கங்களுக்காக கழிவுப் பொருட்களை இறக்குமதி செய்தல் அதேபோன்று மதுபான உற்பத்திக்கான எத்தனோல் இறக்குமதி என்பனவும் இடைநிறுத்தப்பட்டன. இதற்கு மேலதிகமாக, கொவிட் - 19 நோய்ப்பரவல் காரணமாகத் தோன்றிய வெளிநாட்டுத் துறை மீதான அழுத்தத்தினைத் தணிப்பதற்கு 2020 மாச்சில் அரசாங்கமும் மத்திய வங்கியும் தொடக்கத்தில் மூன்று மாத காலப்பகுதிக்கு தெரிவுசெய்யப்பட்ட உந்து ஊர்திகள் மற்றும் அத்தியாவசியமற்ற நுகர்வுப் பொருட்களின் இறக்குமதியினை வசதிப்படுத்தல் மீதான தற்காலிக இடைநிறுத்தம் உள்ளடங்கலாக அவசர வழிமுறைகளை மேற்கொண்டது.

**உள்நாட்டு மற்றும் உலகளாவிய தடைகள் இலங்கையின் வர்த்தகச் செயலாற்றத்திற்கு தொடர்ந்தும் சவாலாக இருக்கும் அதேவேளை, எதிர்வரும் காலப்பகுதியில் வர்த்தகச் செயலாற்றத்தினை மேம்படுத்துவதற்கு கொள்கைரீதியான இசைவுத்தன்மை, விரிவுபடுத்தப்பட்ட நிறுவனரீதியான ஆதரவு, மற்றும் பேரண்டப் பொருளாதார உறுதிப்பாடு என்பன தேவையானதாக இருக்கும்.** 2019 காலப்பகுதியில் பல உள்நாட்டு மற்றும் பன்னாட்டுச் சவால்கள் காணப்பட்ட போதிலும், பிரதானமாக அத்தியாவசியமற்ற தன்மையிலான நுகர்வோர் பொருட்களின் மிதமிஞ்சிய இறக்குமதியினைக் கட்டுப்படுத்துவதற்கு அறிமுகப்படுத்தப்பட்ட நிருவகிக்கப்பட்ட வழிமுறைகளினால் தூண்டப்பட்ட குறைவான இறக்குமதிச் செலவினம் காரணமாக வர்த்தகப் பற்றாக்குறையில் குறிப்பிடத்தக்க மேம்பாடொன்று அவதானிக்கப்பட்டது. முக்கிய உலகளாவிய வர்த்தகச் செயற்பாட்டாளர்களால் எடுக்கப்பட்ட பாதுகாப்புவாத வழிமுறைகள், ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்து பிரித்தானியா வெளியேறியமை, உயர் நடுத்தர வருமானம் ஈட்டும் நாடு என்ற அந்தஸ்த்திற்கு தரமுயர்த்தப்படுவதன் காரணமாக இலங்கை 2023இல் ஐரோப்பிய ஒன்றியத்தின் முன்னுரிமைகளின் பொதுவாக்கப்பட்ட முறைமைத் திட்ட/ முன்னுரிமைகளின் பொதுவாக்கப்பட்ட முறைமைத் திட்டம் + வசதியினை இழக்கின்றமை, கேள்வி மற்றும் வழங்கல் வலையமைப்புக்களில் இடையூறு ஏற்படுத்துகின்ற கொவிட் - 19 என்ற அண்மைய நோய்ப்பரவல் என்பன எதிர்வரவுள்ள காலப்பகுதியில் முக்கிய சவால்களாகவிருக்கும். உலக வர்த்தக அரங்கின் முக்கிய பங்காளருக்கிடையில் தொடர்கின்ற வர்த்தகப் பிணக்குகள், உலகளாவிய வர்த்தகம் மற்றும் வளர்ச்சியில் சாத்தியமான மெதுவடைதலையும் இலங்கையின் வர்த்தக செயலாற்றத்தின் மீது கசிவுத்தாக்கத்தினையும் கொண்டிருக்கக்கூடியதாயினும் இலங்கையின் வர்த்தகச் செயலாற்றத்தினை குறிப்பிடத்தக்களவு பாதிக்குமென எதிர்பார்க்கப்படவில்லை. இந்தியாவிற்கான ஐக்கிய அமெரிக்க முன்னுரிமைகளின் பொதுவாக்கப்பட்ட முறைமைத் திட்ட வசதி புறக்கீடு செய்யப்பட்டமை மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்துடனான வியட்நாமின் புதிய சுதந்திர வர்த்தக உடன்படிக்கை போன்ற பிராந்திய அயல் நாடுகளின் வர்த்தகம் தொடர்புபட்ட அபிவிருத்திகளும் இலங்கையின் ஏற்றுமதிச் செயலாற்றத்தின் மீது தாக்கமொன்றினைக் கொண்டிருக்கக்கூடும். தற்போதுள்ள வர்த்தக உறவுகளை மேலும் வலுப்படுத்துகின்ற அதேவேளை, புதிய வர்த்தகப் பங்காளர்களுடனான தொடர்புகளை இணைத்துக் கொள்ளல், சாதகமான மற்றும் உறுதியான வெளிநாட்டு வர்த்தகக் கொள்கைகள், நிறுவனரீதியான ஆதரவு ஊடாக இயலளவை அபிவிருத்தி செய்தல் மற்றும் பரந்தளவிலான உறுதிமிக்க பேரண்டப் பொருளாதாரச் சூழலுடன் இணைந்த அவதானமிக்க வர்த்தகத் தாராளமயமாக்கம் என்பன ஏற்றுமதிகளின் வளர்ச்சி உத்வேகத்தை தூண்டுமென எதிர்பார்க்கப்படுகின்றது. வாய்ப்புகள், சவால்கள் மற்றும் வெளிநாட்டு வர்த்தகம் மீது எடுக்கப்படவேண்டிய பரிகார வழிமுறைகள் என்பன அனேகமாக அனைத்து ஆர்வலர்களினாலும் பரந்தளவில் ஏற்றுக்கொள்ளப்பட்டு வருகின்றன. உயர்வான உற்பத்திச் செலவுகள், தேவையான தொழிலாளர்கள் போதாமை போன்ற வழங்கல் பக்க தடங்கல்களை அகற்றுவதற்கும் உலகளாவிய பெறுமதிச் சங்கிலிகள் மற்றும் உற்பத்தி வலையமைப்புகளிலிருந்து வாய்ப்புகளை பயன்படுத்திக் கொள்வதற்கும் புத்தாக்கத்தினை முன்னோடியாகக் கொண்ட ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தியினால் துணையளிக்கப்பட்ட ஏற்றுமதிக் கலாச்சாரமொன்றை உருவாக்குதல், பெறுமதி

கூட்டலை மேம்படுத்துதல், நிறுவனரீதியான கட்டமைப்பினை நெறிப்படுத்தல், நிருவாக முட்டுக்கட்டைகளை அற்றுதல் மற்றும் வர்த்தக மற்றும் முதலீட்டாளர் சினேகமிக்க சூழலொன்றினை உருவாக்குதல் என்பவற்றிற்கு முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும். மேலும், உலகம் முழுவதும் நுகர்வோரினால் உயர்வாக மதிக்கப்படுகின்ற பிரயோகங்களான சேதன உற்பத்தி, பசுமை உற்பத்தி மற்றும் நியாயமான வர்த்தக நடத்தைகள் போன்ற நீடித்து நிலைத்துநிற்கும் உற்பத்திசார் எண்ணக்கருக்களை நோக்கி இலங்கை மேலும் நகர வேண்டும். அதற்கமைய, இனங்காணப்பட்ட உபாயங்களை உரிய காலத்தில் நடைமுறைப்படுத்துகின்ற அதேவேளை, புதிய உபாயங்களுக்காக ஆர்வலர்களுடனான தொடர்ச்சியான கலந்துரையாடல்கள் இன்றியமையாததவையாகும். உயர் நடுத்தர வருமான நாடாக இலங்கை தரப்படுத்தப்பட்டதுடன் இணையப்பெற்ற இடர்நேர்வுகளை முன்கூட்டிய திட்டங்களினூடாக தீர்ப்பதற்கு விசேட கவனம் செலுத்தப்பட வேண்டும்.

## 5.3 பொருட்களிலான வர்த்தகம், வர்த்தக நிலுவை, வர்த்தக மாற்று விகிதம் மற்றும் வர்த்தகத்தின் போக்கு


### 5.3.1 ஏற்றுமதிச் செயலாற்றம்

**உயர்வடைந்த உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு பாதிப்படையக்கூடிய தன்மைகளுக்கு மத்தியிலும் 2019இல் வணிகப்பொருள் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள், சிறிதளவாலேனும் தொடர்ந்தும் வளர்ச்சியடைந்தன.** வணிகப்பொருள் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள், ஆண்டின் முதலரைப்பகுதியில் உயர்வான வீதமொன்றில் வளர்ச்சியடைந்தனவாயினும் அதன் பின்னர் மெதுவடைந்து ஆண்டுக்காண்டு ஏற்றுமதி வளர்ச்சியினை 0.4 சதவீதத்திற்கு மட்டுப்படுத்தின. இதன் விளைவாக வணிகப் பொருட்கள் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள், 2018இன் ஐ.அ.டொலர் 11,890 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2019இல் ஐ.அ.டொலர் 11,940 மில்லியனை பதிவுசெய்தன. ஏற்றுமதி வருவாய்களின் அதிகரிப்பிற்கு கைத்தொழில் ஏற்றுமதி வருவாய்கள் பங்களித்த அதேவேளை, வேளாண்மை மற்றும் கனிம பொருட்களின் ஏற்றுமதி வருவாய்கள் வீழ்ச்சியடைந்தன.

**மொத்த ஏற்றுமதி வருவாய்களின் ஏறத்தாழ 79 சதவீதத்திற்கு வகைகூறுகின்ற கைத்தொழில் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள், புடவைகள் மற்றும் ஆடைகள் ஏற்றுமதி வளர்ச்சியினால் பெரும்பான்மையாக துணையளிக்கப்பட்டு 2019இல் அதிகரித்தன.** அதற்கமைய, கைத்தொழில் ஏற்றுமதிகள், 2018 இன் ஐ.அ.டொலர் 9,258 மில்லியனிலிருந்து 2019இல் ஐ.அ.டொலர் 9,426 மில்லியனுக்கு 1.8 சதவீதத்தினால் அதிகரித்தன. ஏற்றுமதிகளுக்கு பாரிய பங்களிப்பு வழங்கும் புடவைகள் மற்றும் ஆடைகளிலிருந்தான வருவாய்கள் 2019இல் ஐ.அ.டொலர் 5,596 மில்லியனுக்கு 5.2 சதவீதத்தினால் அதிகரித்தன. ஐக்கிய அமெரிக்காவுக்கான ஆடைகள் ஏற்றுமதியிலிருந்தான வருவாய்கள், 2019 இல் ஐ.அ.டொலர் 2,338 மில்லியனாக 3.0 சதவீதத்தினால் அதிகரித்தன. ஐரோப்பிய ஒன்றியத்திற்கான ஆடை ஏற்றுமதிகளும் முன்னுரிமைகளின் பொதுவாக்கப்பட்ட முறைமைத் திட்டம் + வசதி மீளக் கிடைத்திலிருந்து நன்மையடைந்து ஐ.அ.டொலர் 2,153 மில்லியனுக்கு 4.9 சதவீதம் கொண்ட அதிகரிப்பைக் காண்பித்த அதேவேளை, ஐரோப்பிய ஒன்றியத்தினுள் பாரிய தனியொரு கொள்வனவு நாடாக விளங்குகின்ற ஐக்கிய இராச்சியம் ஐ.அ.டொலர் 747 மில்லியனுக்கு வகைகூறியது. இதற்கு மேலதிகமாக, ஐரோப்பிய ஒன்றியத்தில் இத்தாலி, ஜேர்மனி, பெல்ஜியம் மற்றும் நெதர்லாந்து அதேபோன்று கனடா, அவுஸ்திரேலியா, சீன, இந்தியா மற்றும் யப்பான் என்பனவும் 2019இல் இலங்கை ஆடைகளை பாரியளவில் கொள்வனவு செய்த நாடுகள் மத்தியில் காணப்பட்டன. இந்தியா, ஐக்கிய இராச்சியம், ஐக்கிய அமெரிக்கா, ஜேர்மனி மற்றும் பாக்கிஸ்தான் போன்ற நாடுகளில் இருந்து கிடைத்த அதிகரித்த கேள்வியின் காரணமாக புடவைகள் மற்றும் தயாரிக்கப்பட்ட புடவைப் பொருட்கள் என்பவற்றிலிருந்தான வருவாய்களும் 2019இல் அதிகரித்தன. அதேவேளை, இரத்தினக்கற்கள், வைரக்கற்கள் மற்றும் ஆபரணங்களின் ஏற்றுமதி வருவாய்கள், 2018இல் பதிவாகிய குறைவான ஏற்றுமதி வருவாய் தொகைகளிலிருந்து மீட்சியடைந்து 2019இல் ஐ.அ.டொலர் 306 மில்லியனுக்கு 10.0 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தன. யப்பானுக்கான கடற்படைக் களங்களின் வழங்கலை பிரதானமாகப் பிரதிபலித்து கப்பல்கள், படகுகள் மற்றும் மிதவைப் கட்டமைப்புகளின் ஏற்றுமதி வருவாய்களில் குறிப்பிடத்தக்க அதிகரிப்புடன் போக்குவரத்து சாதனங்களிலிருந்தான ஏற்றுமதி வருவாய்கள் ஐ.அ.டொலர் 146 மில்லியனுக்கு 21.3 சதவீதத்தினால் அதிகரித்தன. இரசாயனப் பொருட்களிலிருந்தான வருவாய்களும் செயற்படுத்தப்பட்ட காபன் ஏற்றுமதிகளினால் தூண்டப்பட்டு 5.7

வரைபடம் 5.3

ஏற்றுமதிகளின் உள்ளடக்கம் - 2019




*மூலம்* : இலங்கைச் சுங்கம்
இலங்கை மத்திய வங்கி

அட்டவணை 5.3
ஏற்றுமதிகளின் உள்ளடக்கம்

| வகை | 2018 | | 2019(அ) | | பெறுமதியின் மாற்றம் ஐ.அ.டொலர் மில்லியன் | ஆண்டுக்கு ஆண்டு மாற்றம் % | மாற்றத்திற்கான பங்களிப்பு % |
|---|---|---|---|---|---|---|---|
| | பெறுமதி ஐ.அ.டொலர் மில்லியன் | பங்கு % | பெறுமதி ஐ.அ.டொலர் மில்லியன் | பங்கு % | | | |
| **வேளாண்மை ஏற்றுமதிகள்** | **2,579.3** | **21.7** | **2,461.9** | **20.6** | **-117.4** | **-4.6** | **-233.1** |
| தேயிலை | 1,428.5 | 12.0 | 1,346.4 | 11.3 | -82.1 | -5.7 | -162.9 |
| இறப்பர் | 31.6 | 0.3 | 24.2 | 0.2 | -7.4 | -23.4 | -14.7 |
| தெங்கு | 311.0 | 2.6 | 329.5 | 2.8 | 18.5 | 6.0 | 36.7 |
| வாசனைப் பொருட்கள் | 360.2 | 3.0 | 312.5 | 2.6 | -47.7 | -13.2 | -94.6 |
| மரக்கறிகள் | 28.2 | 0.2 | 32.0 | 0.3 | 3.8 | 13.3 | 7.5 |
| தயாரிக்கப்படாத புகையிலை | 35.6 | 0.3 | 34.7 | 0.3 | -0.8 | -2.4 | -1.7 |
| சிறு வேளாண்மை உற்பத்திகள் | 118.4 | 1.0 | 120.0 | 1.0 | 1.7 | 1.4 | 3.4 |
| கடல் உணவு | 265.8 | 2.2 | 262.5 | 2.2 | -3.4 | -1.3 | -6.7 |
| **கைத்தொழில் ஏற்றுமதிகள்** | **9,258.2** | **77.9** | **9,426.3** | **78.9** | **168.2** | **1.8** | **333.8** |
| புடவைகளும் ஆடைகளும் | 5,317.7 | 44.7 | 5,596.5 | 46.9 | 278.8 | 5.2 | 553.4 |
| இறப்பர் உற்பத்திகள் | 875.3 | 7.4 | 866.1 | 7.3 | -9.2 | -1.1 | -18.3 |
| பெற்றோலிய உற்பத்திகள் | 622.1 | 5.2 | 521.1 | 4.4 | -101.0 | -16.2 | -200.5 |
| இரத்தினம், வைரம் மற்றும் ஆபரணங்கள் | 278.0 | 2.3 | 305.7 | 2.6 | 27.7 | 10.0 | 55.1 |
| உணவு, குடிபானங்கள் மற்றும் புகையிலை | 462.3 | 3.9 | 447.0 | 3.7 | -15.3 | -3.3 | -30.4 |
| பொறி மற்றும் இயந்திரவியல் சாதனங்கள் | 434.8 | 3.7 | 400.0 | 3.3 | -34.8 | -8.0 | -69.1 |
| அச்சிடல் கைத்தொழில் உற்பத்திகள் | 31.7 | 0.3 | 48.3 | 0.4 | 16.6 | 52.4 | 33.0 |
| போக்குவரத்துக் கருவிகள் | 120.3 | 1.0 | 145.9 | 1.2 | 25.6 | 21.3 | 50.9 |
| தோல், பயணப்பொருட்கள் மற்றும் காலணி | 147.7 | 1.2 | 102.9 | 0.9 | -44.8 | -30.3 | -88.9 |
| மட்பாண்ட உற்பத்திகள் | 31.3 | 0.3 | 30.1 | 0.3 | -1.2 | -3.9 | -2.4 |
| ஏனைய கைத்தொழில் உற்பத்திகள் | 937.1 | 7.9 | 962.8 | 8.1 | 25.7 | 2.7 | 51.1 |
| **கனிப்பொருள் ஏற்றுமதிகள்** | **34.4** | **0.3** | **33.9** | **0.3** | **-0.5** | **-1.4** | **-0.9** |
| **வகைப்படுத்தப்படாத ஏற்றுமதிகள்** | **17.8** | **0.1** | **17.9** | **0.2** | **0.1** | **0.6** | **0.2** |
| **மொத்த ஏற்றுமதிகள் (ஆ) (இ)** | **11,889.6** | **100.0** | **11,940.0** | **100.0** | **50.4** | **0.4** | **100.0** |
| **ஆண்டுச் சராசரி செலாவணி வீதம் (ஈ)** | **162.54** | | **178.78** | | | | |

(அ) தற்காலிகமானது
(ஆ) மீள் ஏற்றுமதிகள் நீங்கலாக
(இ) சீராக்கப்பட்டது
(ஈ) ரூபா/ஐ.அ.டொலர் செலாவணி வீதம்

*மூலங்கள்:* இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் மற்றும் ஏனைய பெற்றோலிய ஏற்றுமதியாளர்கள்
தேசிய இரத்தினக்கற்கள் மற்றும் ஆபரண அதிகார சபை
இலங்கைச் சுங்கம்
இலங்கை மத்திய வங்கி

5

சதவீதத்தினால் அதிகரித்தன. மேலும், அடிப்படை உலோகங்கள் மற்றும் பொருட்களிலிருந்தான ஏற்றுமதி வருவாய்கள், 6.7 சதவீதத்தினால் அதிகரித்தமைக்கு இரும்பு மற்றும் உருக்கு மற்றும் பொருட்களிலிருந்தான ஏற்றுமதி வருவாய்களின் அதிகரிப்பு பிரதானமாக காரணமாக அமைந்தது. உணவுக் கைத்தொழிலிருந்து எஞ்சுகின்ற பொருட்கள் ஏற்றுமதியினால் தூண்டப்பட்டு விலங்குத் தீனியிலிருந்தான வருவாய்கள் அதிகரித்த அதேவேளை, நாணயத் தாள்களின் ஏற்றுமதிகள் மூலம் அச்சுக் கைத்தொழில் உற்பத்திகளிலிருந்தான வருவாய்கள் அதிகரித்தன. மாறாக, நீர்க்கல எரிபொருட்கள் மற்றும் விமான எரிபொருள் என்பனவற்றைப் பிரதானமாக உள்ளடக்குகின்ற பெற்றோலிய உற்பத்திகளின் ஏற்றுமதி வருவாய்கள், 2019இல் ஐ.அ.டொலர் 521 மில்லியனுக்கு 16.2 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தன. பிராந்தியத்திலுள்ள நீர்கல எரிபொருள் வழங்கும் துறைமுகங்களுக்கிடையிலான உயர்வான போட்டி, உயிர்த்த ஞாயிறுத் தாக்குதலின் பின்னர் விமானப் பயணங்கள் இரத்துச் செய்யப்பட்டமை அதேபோன்று குறைவான விலைகள் என்பனவை நீர்க்கல எரிபொருள் மற்றும் விமான எரிபொருள் ஏற்றுமதி வருவாய்களில் வீழ்ச்சியினை ஏற்படுத்தின. உராய்வு நீக்கிகள் மற்றும் பெற்றோலியத் தார் உள்ளடங்கலாக ஏனைய பெற்றோலிய உற்பத்திகளின் ஏற்றுமதிகளும் 2019இல் வீழ்ச்சியடைந்தன. இறப்பர் கையுறைகளின் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய் அதிகரிப்புக்களுக்கு மத்தியிலும் குறைந்தளவான டயர் ஏற்றுமதிகளினால் தூண்டப்பட்டு இறப்பர் உற்பத்திகளின் ஏற்றுமதியிலிருந்தான வருவாய்கள் 2019இல் ஐ.அ.டொலர் 866 மில்லியனுக்கு 1.1 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தன. இயந்திரங்கள் மற்றும் உபகரணப் பாகங்களிலிருந்தான உயர்வான ஏற்றுமதி வருவாய்களுக்கு மத்தியில் அனேக துணை வகைகளிலிருந்தான குறைவான ஏற்றுமதி வருவாய்களின் காரணமாக இயந்திரங்கள் மற்றும் பொறியியல் உபகரணங்கள் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள், ஐ.அ.டொலர் 400 மில்லியனுக்கு 8.0 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தன. இதற்கு

மேலதிகமாக, தயாரிக்கப்பட்ட புகையிலையின் குறைவான ஏற்றுமதிகளினால் உணவு, குடிபானங்கள் மற்றும் புகையிலை ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் வீழ்ச்சியடைந்த அதேவேளை, தோல், பயணப் பொருட்கள் மற்றும் பாதணிகள் துணைத் துறைகளின் கீழான அனைத்து ஏற்றுமதிகளும் 2019ஆம் ஆண்டில் வீழ்ச்சியடைந்தன.


**மொத்த ஏற்றுமதிகளில் ஏறத்தாழ 21 சதவீதத்திற்கு வகைகூறுகின்ற வேளாண்மை ஏற்றுமதிகளின் செயலாற்றம் 2019இல் மேலும் மோசமடைந்தது.** தேயிலை மற்றும் வாசனைத் திரவியங்கள் ஏற்றுமதிகளின் குறைவான வருவாய்களால் தூண்டப்பட்டு வேளாண்மை ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள், 2018 உடன் ஒப்பிடும்போது 2019இல் ஐ.அ.டொலர் 2,462 மில்லியனுக்கு 4.6 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தன. இலங்கையின் மொத்த ஏற்றுமதி வருவாய்க்கு 11.3 சதவீதத்திற்கு வகைகூறி இரண்டாவது பாரியளவு பங்களிக்கின்ற தேயிலை ஏற்றுமதி வருவாய்கள், 2019இல் ஐ.அ.டொலர் 1,346 மில்லியனாக 5.7 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தன. எனினும், ஏற்றுமதி செய்யப்பட்ட தேயிலையின் அளவானது 2018இல் 282 மில்லியன் கிலோ கிராமிலிருந்து 2019இல் 293 மில்லியன் கிலோ கிராமாக 3.6 சதவீதத்தினால் அதிகரித்து தேயிலை ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்களின் வீழ்ச்சியானது ஒட்டுமொத்தமாக குறைந்த சராசரி ஏற்றுமதி விலைகளினால் தூண்டப்பட்டிருந்ததனை எடுத்துக்காட்டுகின்றது. கொல்கத்தா (இந்தியா) மற்றும் மும்பாசா (கென்யா) தேயிலை ஏலங்களுடன் ஒப்பிடுகையில் கொழும்பு ஏலத்தின் சராசரி ஏல விலைகள் ஒப்பீட்டளவில் உயர்வானதாகக் காணப்பட்டபோதிலும் சராசரி தேயிலை ஏற்றுமதி விலையானது 2018இல் காணப்பட்ட ஐ.அ.டொலர் 5.06 உடன் ஒப்பிடுகையில் ஐ.அ.டொலர் 4.60 இற்கு 9.1 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. பெறுமதி மற்றும் அளவுகள் என்ற இரு நியதிகளிலும் இலங்கைக்கான முதலாமிடத்திலுள்ள இறக்குமதியாளர் நிலையினை துருக்கி தொடர்ந்தும் தக்கவைத்தது. முன்னைய ஆண்டினைப் போன்று பெறுமதி நியதிகளில் ருசியா, ஈராக், ஈரான், சிரியா ஆகிய நாடுகள் 2019இல் ஒட்டுமொத்தமாக மொத்தத் தேயிலை ஏற்றுமதி வருவாயில் 42 சதவீதத்திற்கு வகைகூறி தேயிலை ஏற்றுமதி செய்யப்படும் ஏனைய முக்கிய நாடுகளாக தொடர்ந்தும் இருந்துவந்தன. உள்நாட்டில் உயர்ந்தளவில் வழங்கல் செய்யப்பட்டமை மூலம் கராம்பு, சாதிக்காய் மற்றும் சாதிப்பத்திரி என்பனவற்றின் வருவாய்களின் அதிகரிப்பிற்கு மத்தியில், பிரதானமாக குறைந்தளவான கறுவா மற்றும் மிளகு ஏற்றுமதி அளவுகளின் காரணமாக வாசனைத் திரவியங்கள் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள், 2019இல் ஐ.அ.டொலர் 313 மில்லியனுக்கு 13.2 சதவீதத்தினால் விழ்ச்சியடைந்தன. கடலுணவு ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள், ஐரோப்பிய ஒன்றியச் சந்தையிலிருந்து அதிகரித்த கேள்விக்கு மத்தியிலும் 2019இல் 1.3 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தமைக்கு ஐக்கிய அமெரிக்கச் சந்தையின் கேள்வியில் குறிப்பிடத்தக்க வீழ்ச்சி பிரதான காரணமாக அமைந்திருந்தது. இதற்கு மேலதிகமாக, 2019இல் குறைந்த கிறப் இறப்பர் ஏற்றுமதிகளினால் முன்னிலைப்படுத்தப்பட்டு இயற்கை இறப்பர் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் கணிசமானளவு வீழ்ச்சியடைந்த அதேவேளை, தயாரிக்கப்படாத புகையிலையிலிருந்தான வருவாய்கள் சிறிதளவு வீழ்ச்சியடைந்தன. இதற்கு மாறாக குறைந்த விலைகளுக்கு மத்தியிலும் தேங்காய் துருவல் மற்றும் தேங்காய் நாரிலை போன்ற தேங்காய் உள்ளீடற்றவற்றின் ஏற்றுமதிகளினால் முன்னிலைப்படுத்தப்பட்டு தேங்காய் உள்ளீட்டு உற்பத்திகளின் உயர்வான செயலாற்றலின் காரணமாக தெங்கு ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் ஐ.அ.டொலர் 330 மில்லியனுக்கு 6.0 சதவீதத்தினால் அதிகரித்தன. இதற்குப் புறம்பாக, உடன் காய்கறிகள் அதேபோன்று பப்பாசி, மாம்பழம், பாக்கு, வெற்றிலைகள் போன்ற சிறு வேளாண்மை உற்பத்திகளின் ஏற்றுமதிகள் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2019இல் அதிகரித்தன.

**கனிம ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் 2019இல் ஐ.அ.டொலர் 34 மில்லியனாக 1.4 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தன.** டைட்டானியம் தாது ஏற்றுமதியினால் முன்னிலைப்படுத்தப்பட்டு இரும்புத்தாது, கழிவு இரும்பு மற்றும் சாம்பல் கட்டிகள் என்பவற்றிலிருந்தான வருவாய்களின் அதிகரிப்புக்கு மத்தியில் மண்பொருட்கள் மற்றும் கற்கள் ஏற்றுமதியிலிருந்தான வருவாய்களின் வீழ்ச்சியானது கனிம ஏற்றுமதிகளில் ஒட்டுமொத்தமாக மந்தமான செயலாற்றுகைக்கு வழிவகுத்தது.

## 5.3.2 இறக்குமதிச் செயலாற்றம்

**2018இன் பிந்திய காலப்பகுதியில் அத்தியாவசியமற்ற இறக்குமதிகளைக் குறைக்கும் விதமாக அரசாங்கத்தினாலும் மத்திய வங்கியினாலும் நடைமுறைப்படுத்தப்பட்ட கொள்கைரீதியான வழிமுறைகளைத் தொடர்ந்து வணிகப் பொருள் இறக்குமதிகள் மீதான செலவினம், கடந்த மூன்று வருட காலங்களில் அவதானிக்கப்பட்ட வளர்ச்சிப் போக்கினை**

வரைபடம் 5.4
இறக்குமதிகளின் உள்ளடக்கம் - 2019




*மூலம்* : இலங்கைச் சுங்கம்
இலங்கை மத்திய வங்கி

**திரும்பலடையச் செய்து 2019இல் வீழ்ச்சியடைந்தது.** அதற்கமைய இறக்குமதிகள் மீதான செலவினமானது 2018இன் ஐ.அ.டொலர் 22,233 மில்லியனிலிருந்து 2019இல் ஐ.அ.டொலர் 19,937 மில்லியனுக்கு 10.3 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. நுகர்வோர் பொருட்கள் மற்றும் இடைநிலைப் பொருட்கள் மீதான குறைந்தளவிலான செலவினம் 2019இல் இறக்குமதிகள் மீதான வீழ்ச்சிக்கு பிரதானமாகப் பங்களித்த அதேவேளை, முதலீட்டுப் பொருட்கள் மீதான செலவினமும் சிறிதளவு வீழ்ச்சியடைந்தது. அதேவேளை, எரிபொருள் இறக்குமதிகள் தவிர்ந்த இறக்குமதிச் செலவினமானது 2019இல் ஐ.அ.டொலர் 16,045 மில்லியனுக்கு 11.3 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது.

**மொத்த இறக்குமதிகளின் 57 சதவீதத்திற்கு வகைகூறுகின்ற இடைநிலைப் பொருட்களின் இறக்குமதிச் செலவினம் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2019இல் ஐ.அ.டொலர் 11,370 மில்லியனுக்கு 9.0 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது.** எரிபொருள் இறக்குமதி மீதான செலவினம், அனைத்துத் துணைத் துறைகளிலும் அதாவது மசகெண்ணெய், சுத்திகரிக்கப்பட்ட பெற்றோலியம் மற்றும் நிலக்கரி இறக்குமதி விலைகளின் வீழ்ச்சி அதேபோன்று சுத்திகரிக்கப்பட்ட பெற்றோலியத்தின் இறக்குமதி அளவின் வீழ்ச்சி காரணமாக 2019இல் ஐ.அ.டொலர் 3,892 மில்லியனுக்கு 6.3 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. பன்னாட்டுச் சந்தையில் எரிபொருள் விலைகளின் குறைப்பிற்கு இணங்க சராசரி மசகெண்ணெய் இறக்குமதி விலையானது 2018இன் பீப்பாய் ஒன்றிற்கு ஐ.அ.டொலர் 76.25 இலிருந்து 2019இல் பீப்பாய் ஒன்றிற்கு ஐ.அ.டொலர் 68.80 ஆக வீழ்ச்சியடைந்தது. வைரக்கற்கள், அருங்கற்கள் மற்றும் உலோகங்கள் என்பனவற்றினால் இறக்குமதி மீதான செலவினமானது 2018 ஏப்பிறலில் தங்க இறக்குமதி மீதான 15 சதவீத சுங்கத் தீர்வை விதிப்பிற்குப் பின்னர் 2019 காலப்பகுதியில் தங்க இறக்குமதிகள் குறைந்தமை

அட்டவணை 5.4
இறக்குமதிகளின் உள்ளடக்கம்

| வகை | 2018 பெறுமதி ஐ.அ.டொலர் மில்லியன் | 2018 பங்கு % | 2019 (அ) பெறுமதி ஐ.அ.டொலர் மில்லியன் | 2019 (அ) பங்கு % | பெறுமதியின் மாற்றம் ஐ.அ.டொலர் மில்லியன் | ஆண்டுக்கு ஆண்டு மாற்றம் % | மாற்றத்திற்கான பங்களிப்பு % |
|---|---|---|---|---|---|---|---|
| **நுகர்வுப் பொருட்கள்** | **4,979.7** | **22.4** | **3,956.5** | **19.8** | **-1,023.2** | **-20.5** | **44.6** |
| உணவும் குடிபானங்களும் | 1,606.1 | 7.2 | 1,426.9 | 7.2 | -179.1 | -11.2 | 7.8 |
| அரிசி | 106.8 | 0.5 | 12.8 | 0.1 | -94.0 | -88.0 | 4.1 |
| சீனி மற்றும் இனிப்புப் பண்டங்கள் | 249.7 | 1.1 | 201.2 | 1.0 | -48.5 | -19.4 | 2.1 |
| பால் உற்பத்திகள் | 332.3 | 1.5 | 311.9 | 1.6 | -20.4 | -6.1 | 0.9 |
| பருப்பு வகை | 78.6 | 0.4 | 79.9 | 0.4 | 1.3 | 1.6 | -0.1 |
| ஏனையவை | 838.7 | 3.8 | 821.2 | 4.1 | -17.5 | -2.1 | 0.8 |
| உணவல்லாத நுகர்வுப் பொருட்கள் | 3,373.6 | 15.2 | 2,529.6 | 12.7 | -844.0 | -25.0 | 36.8 |
| வாகனங்கள் | 1,573.5 | 7.1 | 815.7 | 4.1 | -757.9 | -48.2 | 33.0 |
| மருத்துவ மற்றும் மருந்தாக்கல் பொருட்கள் | 532.0 | 2.4 | 552.6 | 2.8 | 20.7 | 3.9 | -0.9 |
| வீட்டுப் பாவனைப் பொருட்கள் | 232.2 | 1.0 | 206.6 | 1.0 | -25.6 | -11.0 | 1.1 |
| புடவைகள் மற்றும் துணைப் பொருட்கள் | 310.3 | 1.4 | 275.1 | 1.4 | -35.1 | -11.3 | 1.5 |
| ஏனையவை | 725.6 | 3.3 | 679.6 | 3.4 | -46.1 | -6.3 | 2.0 |
| **இடைநிலைப் பொருட்கள்** | **12,488.0** | **56.2** | **11,369.6** | **57.0** | **-1,118.4** | **-9.0** | **48.7** |
| எரிபொருள் | 4,151.9 | 18.7 | 3,891.6 | 19.5 | -260.3 | -6.3 | 11.3 |
| புடவைகள் மற்றும் புடவைப் பொருட்கள் | 2,858.5 | 12.9 | 2,909.4 | 14.6 | 50.9 | 1.8 | -2.2 |
| வைரங்கள், அருங்கற்கள் மற்றும் உலோகங்கள் | 572.7 | 2.6 | 201.4 | 1.0 | -371.3 | -64.8 | 16.2 |
| இரசாயன உற்பத்திகள் | 904.2 | 4.1 | 831.5 | 4.2 | -72.8 | -8.0 | 3.2 |
| கோதுமை மற்றும் சோளம் | 373.5 | 1.7 | 346.4 | 1.7 | -27.1 | -7.3 | 1.2 |
| வளமாக்கி | 261.6 | 1.2 | 221.4 | 1.1 | -40.2 | -15.4 | 1.7 |
| ஏனைய இடைநிலைப் பொருட்கள் | 3,365.6 | 15.1 | 2,967.9 | 14.9 | -397.7 | -11.8 | 17.3 |
| **முதலீட்டுப் பொருட்கள்** | **4,690.4** | **21.1** | **4,602.6** | **23.1** | **-87.7** | **-1.9** | **3.8** |
| கட்டடப் பொருட்கள் | 1,524.5 | 6.9 | 1,508.7 | 7.6 | -15.8 | -1.0 | 0.7 |
| போக்குவரத்துக் கருவிகள் | 668.1 | 3.0 | 596.6 | 3.0 | -71.6 | -10.7 | 3.1 |
| பொறியும் கருவியும் | 2,491.6 | 11.2 | 2,489.7 | 12.5 | -1.9 | -0.1 | 0.1 |
| ஏனைய முதலீட்டுப் பொருட்கள் | 6.1 | ... | 7.6 | ... | 1.5 | 25.5 | -0.1 |
| **வகைப்படுத்தப்படாத இறக்குமதிகள்** | **74.6** | **0.3** | **8.3** | **0.0** | **-66.4** | **-88.9** | **2.9** |
| **மொத்த இறக்குமதிகள் (ஆ) (இ)** | **22,232.7** | **100.0** | **19,937.1** | **100.0** | **-2,295.6** | **-10.3** | **100.0** |
| **ஆண்டுச்சராசரி செலாவணி வீதம் (ஈ)** | | **162.54** | | **178.78** | | | |

(அ) தற்காலிகமானது
(ஆ) மீள் இறக்குமதிகள் நீங்கலாக
(இ) சீராக்கப்பட்டது
(ஈ) ரூபா/ ஐ.அ.டொலர் நாணயமாற்று வீதம்

*மூலங்கள்:* இலங்கை பெற்றோலிய க்கூட்டுத்தாபனம்
லங்கா ஐ.ஓ.சி. பி.எல்.சி
இலங்கைச் சுங்கம்
இலங்கை மத்திய வங்கி

காரணமாக கணிசமான வீழ்ச்சியினைக் காண்பித்தது. அடிப்படை உலோகங்கள் மீதான இறக்குமதிச் செலவினமானது குறைவான இரும்பு மற்றும் உருக்கு இறக்குமதிகள் மூலம் தூண்டப்பட்டு 2019 இல் 17.6 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. சராசரி கோதுமை இறக்குமதி விலைகளின் வளர்ச்சிக்கு மத்தியில் குறைவான இறக்குமதி அளவுகளின் காரணமாக கோதுமை இறக்குமதிகளின் மீதான செலவினம் வீழ்ச்சியடைந்த அதேவேளை, குறைந்தளவான யூரியா இறக்குமதி அளவினால் முன்னிலைப்படுத்தப்பட்டு வளமாக்கி இறக்குமதிகள் மீதான செலவினம் வீழ்ச்சியடைந்தது. பிளாத்திக்கு மற்றும் அதன் பொருட்கள், இரசாயன உற்பத்திகள், கடதாசி மற்றும் கடதாசி அட்டை மற்றும் அதன் பொருட்கள், உணவுத் தயாரிப்புகள், இறப்பர் மற்றும் அதன் பொருட்கள் அத்துடன் ஊர்திகள் மற்றும் இயந்திரப் பாகங்கள் உள்ளடங்கலாக அனேகமான ஏனைய இடைநிலைப் பொருட்கள் இறக்குமதிகளின் துணைவகைகளும் வீழ்ச்சிப் போக்கொன்றினைக் காண்பித்தன. எவ்வாறாயினும், 2019இல் அதிகரித்த புடவைகள் மற்றும் ஆடைகளின் ஏற்றுமதிகளுக்கு இசைவாக இழை மற்றும் துணி இறக்குமதிகளினால் தூண்டப்பட்டு புடவை மற்றும் புடவைப் பொருட்கள் மீதான செலவினமானது அதிகரித்தது. இதற்கு மேலதிகமாக, கனிம உற்பத்திகள் மீதான செலவினம் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2019 காலப்பகுதியில் சீமெந்துக் கிலிங்கரில் கணிசமான அதிகரிப்பினால் தூண்டப்பட்டு அதிகரித்தது.

**மொத்த இறக்குமதிகளின் ஏறத்தாழ 20 சதவீதத்திற்கு வகைகூறுகின்ற நுகர்வோர் பொருட்கள் இறக்குமதிகள் மீதான செலவினமானது உணவு மற்றும் குடிபானம் அத்துடன் உணவல்லா நுகர்வோர் பொருட்கள் இரண்டின் மீதுமான செலவினத்தின் வீழ்ச்சி மூலம் கணிசமாக வீழ்ச்சியடைந்தது.** அதற்கமைய, நுகர்வோர் பொருட்கள் மீதான செலவினமானது 2018இன் ஐ.அ.டொலர் 4,980 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2019இல் ஐ.அ.டொலர் 3,957 மிலிலியனுக்கு 20.5 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. கடலுணவு, காய்கறிகள் மற்றும் வாசனைத் திரவியங்கள் தவிர பிரதான உணவு வகைகளில் குறைவான இறக்குமதிகளின் விளைவாக உணவு மற்றும் குடிபானங்கள் மீதான இறக்குமதிச் செலவினம் 11.2 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. தானியங்கள் மற்றும் அரைக்கும் ஆலை கைத்தொழில் உற்பத்திகளின் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ள அரிசி இறக்குமதி மீதான செலவினம், 2018 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2019 இல் இறக்குமதி அளவுகளின் குறைவு காரணமாக குறிப்பிடத்தக்களவு வீழ்ச்சியடைந்தது. அதற்கமைய, அரிசியின் இறக்குமதி அளவானது 2019இல் அதிகரித்த உள்நாட்டு நெல் அறுவடையினால் முன்னிலைப்படுத்தப்பட்டு 2018இன் 249 மில்லியன் கிலோ கிராமிலிருந்து 2019இல் 24 மில்லியன் கிலோ கிராமிற்கு வீழ்ச்சியடைந்தது. சீனியின் இறக்குமதி அளவுகளின் மற்றும் சராசரி இறக்குமதி விலைகளின் கணிசமான வீழ்ச்சியானது 2019இல் சீனி மற்றும் இனிப்புப் பண்ட இறக்குமதிகள் மீதான செலவினம் 19.4 சதவீதத்தினால் வீழ்ச்சியடைவதற்கு வழிவகுத்தது. மேலும், பால்மாவின் சராசரி இறக்குமதி விலைகளில் சிறிய அதிகரிப்பிற்கு மத்தியில் குறைந்தளவான பால்மா இறக்குமதி மூலம் முன்னிலைப்படுத்தப்பட்டு பால் உற்பத்திகள் மீதான செலவினமானது 2019இல் 6.1 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. இதற்கு மேலதிகமாக, தேங்காய் எண்ணெயினால் முன்னிலைப்படுத்தப்பட்டு எண்ணெய் மற்றும் கொழும்பு வகைகள், பதப்படுத்தப்பட்ட பழங்களினால் முன்னிலைப்படுத்தப்பட்டு பழங்கள் மற்றும் மதுசார குடிவகைகளினால் முன்னிலைப்படுத்தப்பட்டு குடிபானங்கள் என்பன மீதான செலவினமும் 2018 உடன் ஒப்பிடும்போது 2019இல் வீழ்ச்சியடைந்தது. எனினும், கடலுணவு இறக்குமதி மீதான செலவினமானது அதிகரித்த தகரத்திலடைந்த மீன் இறக்குமதிகளினால் முன்னிலைப்படுத்தப்பட்டு 2019இல்

அட்டவணை 5.5
முக்கிய இறக்குமதிகளின் அளவு

மெ.தொ '000

| விடயம் | 2015 | 2016 | 2017 | 2018 | 2019 (அ) |
|---|---|---|---|---|---|
| **அரிசி** | **286** | **30** | **748** | **249** | **24** |
| 1ஆம் காலாண்டு | 176 | 6 | 259 | 203 | 8 |
| 2ஆம் காலாண்டு | 91 | 9 | 79 | 37 | 3 |
| 3ஆம் காலாண்டு | 9 | 6 | 160 | 2 | 5 |
| 4ஆம் காலாண்டு | 9 | 8 | 250 | 7 | 8 |
| **கோதுமை** | **1,208** | **948** | **1,250** | **1,297** | **1,159** |
| 1ஆம் காலாண்டு | 242 | 171 | 291 | 412 | 164 |
| 2ஆம் காலாண்டு | 342 | 326 | 334 | 329 | 318 |
| 3ஆம் காலாண்டு | 373 | 271 | 359 | 285 | 292 |
| 4ஆம் காலாண்டு | 251 | 179 | 265 | 271 | 385 |
| **சீனி** | **624** | **651** | **498** | **645** | **556** |
| 1ஆம் காலாண்டு | 169 | 147 | 108 | 205 | 140 |
| 2ஆம் காலாண்டு | 161 | 144 | 158 | 166 | 153 |
| 3ஆம் காலாண்டு | 156 | 179 | 101 | 119 | 100 |
| 4ஆம் காலாண்டு | 137 | 181 | 132 | 154 | 164 |
| **மசகு எண்ணெய் (ஆ)** | **1,763** | **1,685** | **1,591** | **1,674** | **1,842** |
| 1ஆம் காலாண்டு | 369 | 372 | 282 | 283 | 461 |
| 2ஆம் காலாண்டு | 355 | 456 | 376 | 459 | 460 |
| 3ஆம் காலாண்டு | 472 | 384 | 464 | 461 | 461 |
| 4ஆம் காலாண்டு | 567 | 473 | 469 | 471 | 460 |
| **சுத்திகரிக்கப்பட்ட பெற்றோலியம் (ஆ)** | **3,321** | **3,885** | **4,895** | **4,959** | **4,740** |
| 1ஆம் காலாண்டு | 799 | 830 | 1,275 | 1,382 | 1,199 |
| 2ஆம் காலாண்டு | 952 | 1,163 | 1,123 | 1,207 | 1,206 |
| 3ஆம் காலாண்டு | 744 | 749 | 1,336 | 1,317 | 1,211 |
| 4ஆம் காலாண்டு | 826 | 1,142 | 1,161 | 1,054 | 1,124 |
| **வளமாக்கி** | **873** | **527** | **399** | **861** | **707** |
| 1ஆம் காலாண்டு | 163 | 139 | 78 | 256 | 148 |
| 2ஆம் காலாண்டு | 244 | 135 | 73 | 154 | 142 |
| 3ஆம் காலாண்டு | 189 | 126 | 129 | 225 | 238 |
| 4ஆம் காலாண்டு | 277 | 127 | 119 | 226 | 179 |

(அ) தற்காலிகமானது
(ஆ) சீராக்கப்பட்டது

*மூலங்கள்:* இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம்
லங்கா ஐ.ஓ.சி பி.எல்.சி
இலங்கைச் சுங்கம்
இலங்கை மத்திய வங்கி

ஐ.அ.டொலர் 215 மில்லியனுக்கு 8.8 சதவீதத்தினால் அதிகரித்தது. இதற்குப் புறம்பாக 2019இல் உள்ளி, மைசூர் பருப்பு, பெரிய வெங்காயம், உருளைக்கிழங்கு என்பன மீதான அதிகரித்த செலவினத்தின் மூலம் காய்கறிகள் இறக்குமதிகள் மீதான செலவினம் அதிகரித்த அதேவேளை, உயர்வான மிளகாய் இறக்குமதி விலைகளின் பயனாக வாசனைத்திரவியங்கள் மீதான செலவினம் மிதமாக அதிகரித்தது.

**உணவல்லா நுகர்வோர் பொருட்கள் இறக்குமதிச் செலவுகள் மீதான வீழ்ச்சிக்கு தனிப்பட்ட ஊர்திகள் இறக்குமதிகள் மீதான செலவினத்தின் கணிசமான வீழ்ச்சி பிரதான காரணமாக அமைந்தது.** தனிப்பட்ட ஊர்திகளின் இறக்குமதிகள் மீதான செலவினமானது, தனிப்பட்ட உந்து ஊர்திகளின் இறக்குமதிகளை ஊக்கமிழக்கச் செய்வதற்கு 2018இன் பிந்திய காலப்பகுதியில் நடைமுறைப்படுத்தப்பட்ட கொள்கைரீதியான வழிமுறைகளின் தாக்கத்தினை பிரதிபலித்து 2018இல் ஐ.அ.டொலர் 1,574 மில்லியன் கொண்ட வரலாற்று ரீதியான உயர்வான பதிவிலிருந்து ஐ.அ.டொலர் 816 மில்லியனுக்கு 48.2 சதவீதத்தினால் குறிப்பிடத்தக்களவு வீழ்ச்சியடைந்தது. கொள்கை ரீதியான வழிமுறைகளுக்கு பதிலிறுத்தி, 2018 திசெம்பர் தொடக்கம் தனிப்பட்ட ஊர்திகளின் இறக்குமதி மெதுவடைந்தது. 2019இன் முதலரைப் பகுதியில் தனிப்பட்ட ஊர்திகளின் இறக்குமதிகள் மீதான செலவினம், 2018இன் தொடர்புடைய காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் ஐ.அ.டொலர் 324 மில்லியனுக்கு 60.1 சதவீதத்தினால் விழ்ச்சியடைந்தது. எவ்வாறாயினும், 2019 மாச்சில் சமர்ப்பிக்கப்பட்ட 2019 இற்கான வரவுசெலவுத் திட்டத்தில் தெரிவுசெய்யப்பட்ட தனிப்பட்ட உந்து ஊர்தி வகைகள் மீதான கலால் தீர்வைகள் மேலும் அதிகரிக்கப்பட்டமை மிதமிஞ்சிய ஊர்தி இறக்குமதிகளைக் கட்டுப்படுத்துவதற்கு 2018இல் எடுக்கப்பட்ட பேரண்ட முன்மதியுடைய வழிமுறைகளின் தேர்ந்தெடுக்கப்பட்ட தளர்த்தலுக்கு ஓரளவு இடமளித்தது. அதற்கமைய, எல்லை வைப்புத் தேவைப்பாடு மற்றும் சலுகை அனுமதிப் பத்திரங்களை பயன்படுத்தி நாணயக் கடிதங்களின் கீழ் ஊர்திகள் இறக்குமதிகளை இடைநிறுத்தல் போன்ற கட்டுப்பாடுகள் 2019 மாச்சு/ஏப்பிறல் காலப்பகுதியில் அகற்றப்பட்டன. இதன் விளைவாக, சலுகை அனுமதிப்பத்திரங்களின் கீழ் ஊர்தி இறக்குமதி மீளத் தொடங்கியமையினால் தூண்டப்பட்டு தனிப்பட்ட உந்து ஊர்திகள் மீதான இறக்குமதிச் செலவினமானது 2019இன் இரண்டாம் பகுதியின் போது ஐ.அ.டொலர் 491 மில்லியனுக்கு அதிகரித்தது. தெரிவுசெய்யப்பட்ட அத்தியாவசியமல்லாத நுகர்வோர் பொருட்கள் மீது விதிக்கப்பட்ட எல்லை வைப்புத் தேவைப்பாடு, அத்தகையப் பொருட்களின் இறக்குமதிகளுக்காக வெளிநாட்டு நாணயங்களை விடுவிப்பதற்கான கட்டுப்பாடு போன்ற கட்டுப்பாடுகளும் 2019 மாச்சில் அகற்றப்பட்டன. எனினும், ஆடை மற்றும் துணைப்பொருட்கள் (11.3 சதவீதம்), வீட்டு உபகரணங்கள் (11.0 சதவீதம்), தொடர்பூட்டல் சாதனங்கள் (9.3 சதவீதம்), இறப்பர் உற்பத்திகள் (12.9 சதவீதம்) மற்றும் அழகுசாதன மற்றும் மலசலகூடப் பொருட்கள் (8.4 சதவீதம்) என்பனவற்றின் இறக்குமதி மீதான செலவினம் 2018 உடன் ஒப்பிடுகையில் 2019இல் சுருக்கத்தினைப் பதிவுசெய்தது. இதற்கு மாறாக, குணப்படுத்தும் பொருட்களினால் முன்னிலைப்படுத்தப்பட்டு மருத்துவ மற்றும் மருந்துப் பொருட்கள் மீதான இறக்குமதிச் செலவினமும் பிளாத்திக்கு சமையலறைப் பொருள் இறக்குமதியினால் முன்னிலைப்படுத்தப்படு வீட்டு மற்றும் தளபாடங்கள் மீதான செலவினமும் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2019இல் அதிகரித்தன. எவ்வாறாயினும், கொவிட் - 19 உலகளாவிய நோய்ப்பரவலின் காரணமாக செலாவணி வீதம் மீதான அழுத்தத்தினை இலகுபடுத்தும் பொருட்டும் நிதியியல் சந்தையில் குழப்பங்களைத் தடுப்பதற்கும் அரசாங்கமும் மத்திய வங்கியும் உந்து ஊர்திகள் மற்றும் அத்தியாவசியமற்ற நுகர்வோர் பொருட்களின் இறக்குமதியினை வசதிப்படுத்துவதன் மீது 2020 மாச்சு தொடக்கம் நடைமுறைக்கு வரும் விதத்தில் மூன்று மாத காலப்பகுதிக்கான தற்காலிக இடைநிறுத்தம் உள்ளடங்கலாக அவசர வழிமுறைகளை எடுத்தது. அதற்கமைய, நாணயக் கடிதங்களின் கீழ் தெரிவுசெய்யப்பட்ட உந்து ஊர்திகள் மற்றும் நாணயக் கடிதங்கள், ஏற்றுக்கொள்ளலுக்கெதிரான ஆவணங்கள் அத்துடன் முற்பணக் கொடுப்பனவு நியதிகள் என்பனவற்றின் கீழ் தெரிவுசெய்யப்பட்ட அத்தியாவசியமற்ற நுகர்வோர் பொருட்களின் இறக்குமதியினை வசதிப்படுத்துவதனை தற்காலிகமாக இடைநிறுத்துவதற்கு உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள் மற்றும் தேசிய சேமிப்பு வங்கி என்பன பணிக்கப்பட்டன.


**மொத்த இறக்குமதிச் செலவினத்தில் ஏறக்குறைய 23 சதவீதத்திற்கு வகைகூறுகின்ற முதலீட்டுப் பொருட்கள் மீதான செலவினம், அனைத்து முக்கிய துணை வகைகள் மீதுமான செலவினம் குறைந்ததன் மூலம் சிறிதளவு வீழ்ச்சியடைந்தது.** அதற்கமைய, முதலீட்டுப்பொருட்கள் இறக்குமதி மீதான செலவிம் 2018இன் ஐ.அ.டொலர் 4,690 மில்லியனிலிருந்து 2019இல் ஐ.அ.டொலர் 4.603 மில்லியனுக்கு 1.9 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் மீதான இறக்குமதிச் செலவினம் 0.1 சதவீதத்தினால் ஐ.அ.டொலர் 2,490 மில்லியனுக்கு சிறிதளவிற்கு வீழ்ச்சியடைந்தது. இது மருத்துவ மற்றும் ஆய்வுகூட உபகரணங்கள், மின்சார மோட்டார்கள் மற்றும் பிறப்பாக்கத் தொகுதிகள் அத்துடன் பொறியியல் உபகரண இறக்குமதிகள் மீதான செலவினத்தில் அதிகரிப்பினை எதிரீடு செய்து இயந்திரங்கள் மற்றும் உபகரணப் பாகங்கள், அலுவலக இயந்திரங்கள், தொலைத்தொடர்பு சாதனங்கள் மற்றும் புடவைக் கைத்தொழில் இயந்திர இறக்குமதிகள் என்பன மீதான செலவினத்தின் வீழ்ச்சியினைப் பிரதிபலித்தது. 2019இல் புகையிரத இயந்திரங்கள், சரக்கு

வண்டிகள் மற்றும் ஏனைய புகையிரத உபகரணங்கள் மீதான செலவினம் கணிசமாக அதிகரித்திருந்த போதிலும் சாலை ஊர்திகள், கப்பல்கள் மற்றும் படகுகள், வானூர்தி, வானூர்திப் பாககங்கள் போன்ற அனேகமான அனைத்து துணைவகைகள் மீதான செலவினத்தின் வீழ்ச்சியின் காரணமாக போக்குவரத்து சாதனங்கள் இறக்குமதி மீதான செலவினமானது 10.7 சதவீதத்தினால் கணிசமாக வீழ்ச்சியடைந்தது. பால நிருமாண பொருட்களினால் முன்னிலைப்படுத்தப்பட்டு, இரும்பு மற்றும் உருக்குப் பொருட்களின் குறிப்பிடத்தக்க அதிகரிப்பிற்கு மத்தியிலும் 2019இல் கட்டவாக்க நடவடிக்கைகளில் ஒட்டுமொத்த மெதுவடைதலினை பிரதிபலித்து கட்டடப் பொருட்கள் இறக்குமதிகள் மீதான செலவினமானது 2019இல் ஐ.அ.டொலர் 1,509 மில்லியனுக்கு 1.0 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. இதற்கு இரும்பு, உருக்கு, சீமெந்து, பிளாத்திக்கு, இறப்பர் மற்றும் கண்ணாடிப் பொருட்கள், மர உற்பத்திகள், மட்பாண்ட உற்பத்திகள், கனிம உற்பத்திகள் மற்றும் மின்கடத்தல் காப்பிடப்பட்ட கம்பிகள், வடங்கள் போன்ற ஏனைய துணைவகையிலுள்ள பல பொருட்களின் இறக்குமதியின் வீழ்ச்சி காரணமாக அமைந்தது.

## 5.3.3 வர்த்தக நிலுவை

**முன்னைய ஐந்து ஆண்டுகளாக தொடர்ச்சியாக விரிவடைந்த வர்த்தகக் கணக்குப் பற்றாக்குறையானது 2019இல் குறிப்பிடத்தக்களவு சுருக்கமடைந்தது.** 2018இன் பிந்திய காலப்பகுதியில் அத்தியாவசியமற்ற நுகர்வோர் பொருட்களை கட்டுப்படுத்துவதற்காக எடுக்கப்பட்ட கொள்கைசார்ந்த வழிமுறைகளின் பயனாக இறக்குமதிகள் மீதான செலவினம் குறைந்தமை அதேபோன்று ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்களின் சிறிதளவான அதிகரிப்பு என்பன இதற்கு காரணமாக அமைந்தன. அதற்கமைய, வர்த்தகப் பற்றாக்குறையானது 2018இன் ஐ.அ.டொலர் 10,343 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2019இல் ஐ.அ.டொலர் 7,997 மில்லியனாக ஐ.அ.டொலர் 2,346 மில்லியனால் கணிசமான அளவு சுருக்கமடைந்தது. 2013ஆம் ஆண்டு முதல் இதுவே ஆகக் குறைந்த பற்றாக்குறையாகக் காணப்பட்டது. மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமொன்றாக வர்த்தகப் பற்றாக்குறை 2018இன் 11.7 சதவீதத்திலிருந்து 2019இல் 9.5 சதவீதத்திற்கு சுருக்கமடைந்தது.

வரைபடம் 5.5
ஏற்றுமதிகள், இறக்குமதிகள் மற்றும் வர்த்தக நிலுவை (ஐ.அ.டொ. பில்லியன்)




## 5.3.4 வர்த்தக மாற்று விகிதம்

**இலங்கையின் ஏற்றுமதி விலைகள் மற்றும் இறக்குமதி விலைகள் என்பவற்றிற்கிடையிலான விகிதத்தினைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற வர்த்தக மாற்று விகிதம் 2019இல் மோசமடைந்தது.** ஏற்றுமதி விலைச்சுட்டெண்ணானது ஆண்டு காலப்பகுதியில் 94.1 சுட்டெண் புள்ளிகளுக்கு 6.3 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்த அதேவேளை, இறக்குமதி விலைச் சுட்டெண், 90.5 சுட்டெண் புள்ளிகளுக்கு 4.8 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. இறக்குமதி விலைச் சுட்டெண்ணின் வீழ்ச்சியினை விட உயர்வான வேகத்தில் ஏற்றுமதி விலைச் சுட்டெண் வீழ்ச்சியடைந்தமையினால் வர்த்தக மாற்று விகிதம், 2018இன் 105.6 சுட்டெண் புள்ளிகளுடன் ஒப்பிடுகையில் 2019இல் 103.9 சுட்டெண் புள்ளிகளாக 1.6 சதவீதத்தினால் மோசமடைந்தது.

**2019 இல் அனைத்து முக்கிய ஏற்றுமதி வகைகளினதும் குறைவான விலைகளைப் பிரதிபலித்து ஒட்டுமொத்த ஏற்றுமதி விலைச்சுட்டெண் வீழ்ச்சியடைந்தது.** ஆண்டு காலப்பகுதியில் பன்னாட்டுச் சந்தையில் காணப்பட்ட குறைந்த விலைகளுக்கு இசைவாக பிரதானமாக பெற்றோலிய உற்பத்திகளின் விலைகளின் 14.7 சதவீத வீழ்ச்சியின் காரணமாக கைத்தொழில்சார் ஏற்றுமதிகளுடன் தொடர்புடைய ஏற்றுமதி விலைச் சுட்டெண்ணானது 5.4 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. மேலும், உலோகங்கள் மற்றும் பொருட்கள் அத்துடன் மரம் மற்றும் கடதாசி உற்பத்திகள் என்பன முறையே 18.9 சதவீதத்தினாலும் 17.9 சதவீதத்தினாலும் வீழ்ச்சியடைந்தன. இதற்கு மேலதிகமாக, இயந்திரங்கள் பொறியியல் பாகங்கள், இரத்தினக்கற்கள், வைரக்கற்கள் மற்றும் ஆபரணங்கள் மற்றும் புடவைகள் அத்துடன் ஆடைகள் என்பவற்றிற்கான விலைச் சுட்டெண்கள் ஆண்டு காலப்பகுதியில் வீழ்ச்சியடைந்தன. எவ்வாறாயினும், கைத்தொழில் ஏற்றுமதிகளின் கீழ் வகைப்படுத்தப்பட்ட போக்குவரத்து உபகரணங்கள், இரசாயன உற்பத்திகள், இறப்பர் உற்பத்திகள் என்பன தொடர்பிலான விலைச் சுட்டெண்கள் 2019இல் அதிகரித்தன. அதேவேளை, வேளாண்மை ஏற்றுமதிகளுக்கான விலைச் சுட்டெண்ணானது பிரதானமாக, பாரம்பரிய ஏற்றுமதிப் பொருட்களான அதாவது தேயிலை, இறப்பர் மற்றும் தெங்கு ஆகியவற்றில் அறிக்கையிடப்பட்ட விலைக் குறைப்புகளினால் பிரதானமாகத் தூண்டப்பட்டு 2019இல் 9.5 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. தேயிலைக்கான விலைச் சுட்டெண் 9.3 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்த அதேவேளை, இறப்பர் மற்றும் தெங்கு இற்கான விலைச் சுட்டெண்களும்

முறையே 14.8 சதவீதத்தினாலும் 20.8 சதவீதத்தினாலும் வீழ்ச்சியடைந்தன. வாசனைத் திரவியங்கள், தயாரிக்கப்படாத புகையிலை, கடலுணவு போன்றவற்றுடன் தொடர்புடைய விலைச்சுட்டெண்களும் வீழ்ச்சியடைந்த அதேவேளை, காய்கறிகள் மற்றும் சிறு வேளாண்மை உற்பத்திகளுக்கான விலைச் சுட்டெண்கள் ஆண்டுகாலப்பகுதியில் அதிகரித்தன. கனிம ஏற்றுமதிகளுடன் தொடர்புடைய விலைச் சுட்டெண்ணும் 2018 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2019 ஆண்டு காலப்பகுதியில் 0.2 சதவீதத்தினால் சிறிதளவு வீழ்ச்சியடைந்தது.

**இடைநிலைப் பொருட்கள் மற்றும் முதலீட்டுப் பொருட்கள் இறக்குமதிகளுடன் தொடர்புடைய குறைவான விலைகள் முக்கிய காரணமாக ஒட்டுமொத்த இறக்குமதி விலைச் சுட்டெண் 2019இல் வீழ்ச்சியடைந்தது.** இடைநிலைப் பொருட்களின் விலைச் சுட்டெண்ணானது 5.3 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தமைக்கு ஊர்திகள் மற்றும் இயந்திரப் பாகங்கள் தவிர அனேகமாக அனைத்து துணை வகைகளிலும் பதிவாகிய விலைக் குறைப்புகள் முக்கிய காரணமாக அமைந்தன. எரிபொருளுக்கான விலைச் சுட்டெண் 5.8 சதவீதத்தினால் விழ்ச்சியடைந்த அதேவேளை, அடிப்படை உலோகங்கள் மற்றும் பிளாத்திக்கு மற்றும் அதன் பொருட்களின் விலைகள் முறையே 11.2 சதவீதத்தினாலும் 7.5 சதவீதத்தினாலும் வீழ்ச்சியடைந்தன. இதற்குப் புறம்பாக, வேளாண்மை உள்ளீடுகள், இறப்பர் மற்றும் அதன் பொருட்கள், வைரக்கற்கள், அருங்கற்கள் அத்துடன் உலோகங்கள், கோதுமை மற்றும் சோளம் அதேபோன்று வளமாக்கி என்பவற்றின் விலைகள் ஆண்டு காலப்பகுதியில் வீழ்ச்சியடைந்தன. முதலீட்டுப் பொருட்கள் தொடர்பிலான விலைச்சுட்டெண் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2019இல் 3.4 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தமைக்கு இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள், அத்துடன் கட்டடப் பொருட்கள் என்பவற்றின் விலைகள் முறையே 4.6 சதவீதத்தினாலும் 2.5 சதவீதத்தினாலும் வீழ்ச்சியடைந்தமை பிரதான காரணமாக அமைந்தது. எனினும், போக்குவரத்து உபகரணங்களின் இறக்குமதி விலைகள் 2019இல் 4.2 சதவீதத்தினால்

அட்டவணை 5.6
வர்த்தக சுட்டெண்கள் (அ)

2010 = 100


| வகை | பெறுமதிச் சுட்டெண் | | | அளவுச் சுட்டெண் | | | அலகுப் பெறுமதிச் சுட்டெண் | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 2018 | 2019 (ஆ) | ஆண்டுக்காண்டு மாற்றம் % | 2018 | 2019 (ஆ) | ஆண்டுக்காண்டு மாற்றம் % | 2018 | 2019 (ஆ) | ஆண்டுக்காண்டு மாற்றம் % |
| **ஏற்றுமதிகள்** | | | | | | | | | |
| **வேளாண்மை ஏற்றுமதிகள்** | **111.9** | **106.8** | **-4.6** | **92.6** | **97.7** | **5.5** | **120.8** | **109.3** | **-9.5** |
| தேயிலை | 99.2 | 93.5 | -5.7 | 85.5 | 88.8 | 3.9 | 116.0 | 105.3 | -9.3 |
| இறப்பர் | 18.2 | 14.0 | -23.4 | 26.7 | 24.0 | -10.1 | 68.4 | 58.3 | -14.8 |
| தெங்கு | 187.8 | 198.9 | 6.0 | 132.8 | 177.6 | 33.8 | 141.4 | 112.0 | -20.8 |
| வாசனைத்திரவியங்கள் | 173.9 | 150.9 | -13.2 | 120.5 | 115.0 | -4.6 | 144.3 | 131.2 | -9.1 |
| சிறுவேளாண்மை உற்பத்திகள் | 165.7 | 168.1 | 1.4 | 162.0 | 163.0 | 0.6 | 102.3 | 103.1 | 0.8 |
| **கைத்தொழில் ஏற்றுமதிகள்** | **152.0** | **154.7** | **1.8** | **158.7** | **170.8** | **7.6** | **95.7** | **90.6** | **-5.4** |
| புடவைகள் மற்றும் ஆடைகள் | 158.6 | 166.9 | 5.2 | 132.4 | 143.2 | 8.2 | 119.8 | 116.6 | -2.7 |
| பெற்றோலிய உற்பத்திகள் | 236.3 | 198.0 | -16.2 | 251.1 | 246.7 | -1.8 | 94.1 | 80.3 | -14.7 |
| இறப்பர் உற்பத்திகள் | 157.2 | 155.6 | -1.1 | 111.4 | 109.4 | -1.8 | 141.1 | 142.2 | 0.7 |
| **கனிப்பொருள் ஏற்றுமதிகள்** | **141.8** | **139.9** | **-1.4** | **99.3** | **98.2** | **-1.1** | **142.8** | **142.4** | **-0.2** |
| **மொத்த ஏற்றுமதிகள்** | **137.9** | **138.5** | **0.4** | **137.3** | **147.2** | **7.2** | **100.4** | **94.1** | **-6.3** |
| **இறக்குமதிகள்** | | | | | | | | | |
| **நுகர்வுப் பொருட்கள்** | **201.3** | **159.9** | **-20.5** | **183.4** | **145.4** | **-20.7** | **109.7** | **110.0** | **0.2** |
| உணவு மற்றும் குடிபானங்கள் | 121.4 | 107.9 | -11.2 | 129.5 | 120.5 | -7.0 | 93.8 | 89.5 | -4.5 |
| உணவல்லா நுகர்வுப் பொருட்கள் | 293.0 | 219.7 | -25.0 | 245.3 | 174.0 | -29.1 | 119.4 | 126.3 | 5.7 |
| **இடைநிலைப் பொருட்கள்** | **155.2** | **141.3** | **-9.0** | **162.2** | **156.0** | **-3.8** | **95.6** | **90.5** | **-5.3** |
| எரிபொருள் | 136.5 | 128.0 | -6.3 | 152.5 | 151.8 | -0.5 | 89.5 | 84.3 | -5.8 |
| வளமாக்கி | 108.9 | 92.2 | -15.4 | 136.0 | 119.5 | -12.1 | 80.1 | 77.1 | -3.7 |
| இரசாயன உற்பத்திகள் | 173.9 | 159.9 | -8.0 | 165.2 | 155.7 | -5.8 | 105.3 | 102.7 | -2.4 |
| கோதுமை மற்றும் சோளம் | 140.7 | 130.5 | -7.3 | 134.2 | 127.5 | -5.0 | 104.8 | 102.3 | -2.4 |
| புடவைகள் மற்றும் புடவைப் பொருட்கள் | 158.0 | 160.8 | 1.8 | 144.3 | 153.9 | 6.6 | 109.5 | 104.5 | -4.5 |
| பிளாத்திக்கு மற்றும் அதன் பொருட்கள் | 164.9 | 144.9 | -12.1 | 166.9 | 158.5 | -5.0 | 98.8 | 91.4 | -7.5 |
| வைரங்கள், அருங்கற்கள் மற்றும் உலோகங்கள் | 151.7 | 53.3 | -64.8 | 169.1 | 66.5 | -60.7 | 89.7 | 80.2 | -10.6 |
| **முதலீட்டுப் பொருட்கள்** | **170.2** | **167.1** | **-1.9** | **208.2** | **211.5** | **1.6** | **81.8** | **79.0** | **-3.4** |
| கட்டடப் பொருட்கள் | 185.5 | 183.6 | -1.0 | 212.1 | 215.1 | 1.5 | 87.5 | 85.3 | -2.5 |
| போக்குவரத்துக் கருவி | 112.8 | 100.7 | -10.7 | 109.3 | 93.7 | -14.3 | 103.1 | 107.5 | 4.2 |
| பொறி மற்றும் கருவி | 186.3 | 186.1 | -0.1 | 249.6 | 261.5 | 4.8 | 74.6 | 71.2 | -4.6 |
| ஏனைய முதலீட்டுப் பொருட்கள் | 181.7 | 228.0 | 25.5 | 181.9 | 220.4 | 21.2 | 99.9 | 103.5 | 3.6 |
| **மொத்த இறக்குமதிகள்** | **165.8** | **148.7** | **-10.3** | **174.3** | **164.2** | **-5.8** | **95.1** | **90.5** | **-4.8** |
| **வர்த்தக மாற்று விகிதம்** | | | | | | | **105.6** | **103.9** | **-1.6** |

(அ) ஐ.அ.டொலரின் நியதிகளில்
(ஆ) தற்காலிகமானது

*மூலங்கள்:* இலங்கை மத்திய வங்கி

5

வரைபடம் 5.6
வர்த்தக மாற்று விகிதம் மற்றும் வர்த்தகச் சுட்டெண்கள்




*மூலம்* : இலங்கை மத்திய வங்கி


அதிகரித்தன. உணவு மற்றும் குடிபானங்களுக்கான இறக்குமதி விலைச் சுட்டெண் வீழ்ச்சியடைந்த போதிலும் உணவல்லா நுகர்வோர் பொருட்களின் விலைகளில் பதிவாகிய 5.7 சதவீத அதிகரிப்பின் காரணமாக நுகர்வோர் பொருட்களுக்கான இறக்குமதி விலைச் சுட்டெண் 0.2 சதவீதத்தினால் சிறிதளவு அதிகரித்தது. உணவல்லா நுகர்வோர் பொருட்கள் வகையினுள் ஊர்திகளுக்கான விலைச் சுட்டெண் 12.3 சதவீதத்தினால் அதிகரித்த அதேவேளை, ஆடைகள் மற்றும் துணைப்பொருட்கள், வீட்டுப் பாவனை மற்றும் தளபாடப் பொருட்கள் மற்றும் இறப்பர் உற்பத்திகள் என்பவற்றுக்கான விலைச் சுட்டெண்களும் அதிகரித்தன. எவ்வாறாயினும், தொடர்பூட்டல் சாதனங்கள், வீட்டுப் பாவனைப் பொருட்கள் மற்றும் மருத்துவ மற்றும் மருந்துப்பொருள் இறக்குமதிகளின் விலைகள் 2019இல் வீழ்ச்சியடைந்தன. உணவு மற்றும் குடிபானம் தொடர்பிலான இறக்குமதி விலைச் சுட்டெண் 4.5 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தமைக்கு தானியங்கள் மற்றும் அரைக்கும் ஆலைக் கைத்தொழில் உற்பத்திகள் மற்றும் சீனி அத்துடன் இனிப்புப் பண்டங்களின் விலைகளில் முறையே 21.9 சதவீத மற்றும் 10.9 சதவீத வீழ்ச்சி முக்கிய காரணமாக அமைந்தது. எண்ணெய் மற்றும் கொழுப்பு, பால் உற்பத்திகள் மற்றும் காய்கறிகள் தொடர்பிலான இறக்குமதி விலைச் சுட்டெண்களும் வீழ்ச்சியடைந்தன. எவ்வாறாயினும், கருத்திற்கொள்ளப்படுகின்ற காலப்பகுதியில் கடலுணவு மற்றும் வாசனைத் திரவியங்கள் தொடர்பிலான விலைகள் அதிகரித்தன.

### 5.3.5 வர்த்தகத்தின் போக்கு

**இலங்கையின் முக்கிய வர்த்தகப் பங்காளர்கள் பரந்தளவில் முன்னைய ஆண்டிலிருந்தவாறு 2019இலும் மாற்றமின்றி காணப்பட்டனர்.** பெறுமதி நியதிகளில் 2019இல் இலங்கையின் முக்கிய வர்த்தகப் பங்காளராக இந்தியாவும் அதனைத் தொடர்ந்து சீனா மற்றும் ஐக்கிய அமெரிக்கா என்பனவும் காணப்பட்டு இலங்கையின் மொத்த வர்த்தகத்தில் ஏறத்தாழ 40 சதவீதத்திற்கு அனைத்தும் ஒன்றுசேர்ந்து பங்களிப்புச் செய்தன. எவ்வாறாயினும், 2018இல் ஐ.அ.டொலர் 5 பில்லியனை விஞ்சிய இந்தியாவுடனான மொத்த வர்த்தகம், 2019இல் ஐ.அ.டொலர் 4.7 பில்லியனுக்கு வீழ்ச்சியடைந்தது. சீனாவுடனான வர்த்தகம் வீழ்ச்சியடைந்ததாயினும், முன்னைய ஆண்டைப் போன்று ஐ.அ.டொலர் 4 பில்லியனுக்கு மேல் காணப்பட்டதுடன் ஐக்கிய அமெரிக்கவுடனான வர்த்தகம் ஐ.அ.டொலர் 3 பில்லியனை விஞ்சியது. ஐக்கிய அரபு இராச்சியம், ஐக்கிய இராச்சியம், யப்பான், சிங்கப்பூர் மற்றும் ஜேர்மனி என்பன ஏனைய முக்கிய வர்த்தகப் பங்காளர்களாகக் காணப்பட்டு ஒவ்வொன்றும் 2019இல் ஐ.அ.டொலர் 1 பில்லியனுக்கும் அதிக பெறுமதியுடைய மொத்த வர்த்தகத்திற்கு வகைகூறின. 2019இல் இந்தியாவுடனான மொத்த வர்த்தகத்தின் வீழ்ச்சிக்கு 2018உடன் ஒப்பிடுகையில் இறக்குமதிகளில் குறிப்பிடத்தக்க குறைவும் ஏற்றுமதிகளில் மிதமான குறைவும் காரணமாக அமைந்தன. சீனாவிடமிருந்தான இறக்குமதிகளின் வீழ்ச்சியின் காரணமாக சீனாவுடனான மொத்த வர்த்தகம் வீழ்ச்சியடைந்தது. இதற்கு மேலதிகமாக, ஐக்கிய இராச்சியம், யப்பான், சிங்கப்பூர், ஜேர்மனி என்பவற்றுடனான மொத்த வர்த்தகம் 2018உடன் ஒப்பிடுகையில் 2019இல் வீழ்ச்சியடைந்தது. இதற்கு மாறாக, ஐக்கிய அமெரிக்கா மற்றும் ஐக்கிய இராச்சியம் என்பவற்றுடனான மொத்த வர்த்தகம் 2018 உடன் ஒப்பிடுகையில் 2019இல் இந்நாடுகளுடனான அதிகரித்த ஏற்றுமதிகள் மற்றும் இறக்குமதிகளின் ஒன்றிணைந்த தாக்கத்தின் காரணமாக அதிகரித்தன. மேற்கத்தேய நாடுகள், பிரதானமாக ஐக்கிய அமெரிக்கா மற்றும் ஐக்கிய இராச்சியம் என்பன, 2019இல் இலங்கை ஏற்றுமதிகள் சென்றடையும் முக்கிய நாடுகளாக தொடர்ந்தும் விளங்கிய அதேவேளை, ஆசியா, பிரதானமாக சீனா மற்றும் இந்தியா என்பன, இலங்கைக்கான இறக்குமதிகள் தொடர்பில் முதன்மை வகித்தன.


**இலங்கை ஏற்றுமதிகளை பாரியளவில் கொள்வனவு செய்கின்ற தனியொரு நாடாக ஐக்கிய அமெரிக்கா தொடர்ந்தும் காணப்பட்டது.** ஐக்கிய அமெரிக்காவிடமிருந்தான மொத்த ஏற்றுமதி வருவாய்களின் பங்கு, 2018இன் 25.9 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2019இல் 26.3 சதவீதத்திற்கு அதிகரித்தது. ஐக்கிய அமெரிக்காவுக்கான மொத்த ஏற்றுமதிகளின் ஏறத்தாழ 87 சதவீதத்திற்கு பிரதானமாக வகைகூறுகின்ற ஆடைகள், இறப்பர் உற்பத்திகள், அடிப்படை உலோகங்கள், உணவு மற்றும் குடிபானங்கள் மற்றும் புகையிலை அத்துடன் தேயிலை என்பவற்றின் ஏற்றுமதிகளின் காரணமாக ஏற்றமதி வருவாய்கள் 2019இல் ஐ.அ.டொலர் 3,141 மில்லியனுக்கு 1.8 சதவீதத்தினால் அதிகரித்தன. 2019இல் மொத்த ஆடை ஏற்றுமதிகளில் ஏறத்தாழ 45 சதவீதத்திற்கு வகைகூறி இலங்கையின் பாரியளவில் ஆடை ஏற்றுமதி சேரிட நாடாக ஐக்கிய அமெரிக்கா தொடர்ந்தும் விளங்கியது. எனினும், ஐக்கிய அமெரிக்காவுக்கான கடலுணவு ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள், 2019இல்

வரைபடம் 5.7
நாடுகளின்படி ஏற்றுமதிகள்




*மூலம்* : இலங்கைச் சுங்கம்

வரைபடம் 5.8
நாடுகளின்படி இறக்குமதிகள்




*மூலம்* : இலங்கைச் சுங்கம்

37.9 சதவீதத்தினால் கணிசமாக வீழ்ச்சியடைந்த அதேவேளை. ஐக்கிய அமெரிக்காவிற்கான இயந்திரம் மற்றும் பொறியியல் இயந்திரங்கள், வாசனைத் திரவியங்கள் மற்றும் தேங்காய் உள்ளீட்டு உற்பத்திகள் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்களும் வீழ்ச்சியடைந்தன. இலங்கையின் ஆடைகளின் ஏறத்தாழ 14 சதவீதம் ஏற்றுமதி செய்யப்படுகின்ற ஐக்கிய இராச்சியம் இலங்கையின் ஏற்றுமதிகளின் 8.4 சதவீதத்திற்கு வகைகூறி இரண்டாவது பாரிய ஏற்றுமதி சேரிடமாக விளங்கியது. 2019இல் ஆடைகள், இயந்திரங்கள், பொறியியல் உபகரணங்கள், இறப்பர் உற்பத்திகள் மற்றும் தேயிலை என்பனவற்றின் அதிகரித்த வருவாய்களின் காரணமாக ஐக்கிய இராச்சியத்திலிருந்தான ஏற்றுமதி வருவாய்கள் ஐ.அ.டொலர் 998 மில்லியனுக்கு 1.8 சதவீதத்தினால் அதிகரித்தன. எனினும், ஐக்கிய இராச்சியத்திற்கான உணவு, குடிபானம் மற்றும் புகையிலை, தெங்கு உற்பத்திகள் அத்துடன் வாசனைத் திரவியங்களின் ஏற்றுமதிகள் 2019இல் வீழ்ச்சியடைந்தன. மொத்த ஏற்றுமதிகளின் 6.4 சதவீதத்திற்கு வகைகூறுகின்ற இலங்கையின் ஏற்றுமதிகளின் மூன்றாவது பாரிய கொள்வனவு நாடான இந்தியாவிற்கான ஏற்றுமதிகள் 2018இன் ஐ.அ.டொலர் 777 மில்லியனிலிருந்து 2019இல் ஐ.அ.டொலர் 768 மில்லியனாக 1.1 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தன. இவ் வீழ்ச்சியானது பிரதானமாக பெற்றோலிய உற்பத்திகள், ஆடைகள், அடிப்படை உலோகங்கள் மற்றும் பொருட்கள், இயந்திரங்கள், பொறியியல் உபகரணங்கள் ஏற்றுமதிகளின் வருவாயின் வீழ்ச்சியினால் ஏற்பட்டிருந்தது. எனினும், இந்தியாவிற்கான விலங்குத் தீன், தேங்காய் உள்ளீட்டு உற்பத்திகள், புடவைகள் மற்றும் தேயிலை ஏற்றுமதிகள் 2019இல் அதிகரித்தன. அதேவேளை, மொத்த ஏற்றுமதிகளில் 5.4 சதவீதத்திற்கு வகைகூறுகின்ற ஜேர்மனிக்கான ஏற்றுமதிகள் 2019இல் 5.5 சதவீதத்தினால் அதிகரித்தன. ஜேர்மனிக்கான மொத்த ஏற்றுமதிகளின் ஏறத்தாழ 70 சதவீதத்திற்கு வகைகூறுகின்ற ஆடைகள், இறப்பர் உற்பத்திகள் மற்றும் தேயிலை ஆகியன 2019இல் ஜேர்மனியிலிருந்தான ஏற்றுமதி வருவாய்கள் அதிகரிப்பதற்கு பாரியளவில் பங்களித்தன. மொத்த ஏற்றுமதி வருவாய்களில் ஏறத்தாழ 4.4 சதவீதத்திற்கு வகைகூறுகின்ற இத்தாலியானது, அந்நாட்டுக்கான மொத்த ஏற்றுமதிகளில் 89 சதவீதத்திற்கு வகைகூறுகின்ற ஆடைகள், இறப்பர் உற்பத்திகள் மற்றும் இரத்தினக்கற்கள், வைரக்கற்கள் மற்றும் ஆபரண ஏற்றுமதிகளில் வீழ்ச்சியின் பிரதானமாக காரணமாக 2019இல் ஏற்றுமதி வருவாய்களில் 7.7 சதவீதம் வீழ்ச்சியடைந்தமைக்கு மத்தியிலும் இலங்கையின் ஏற்றுமதிகளை பாரிய அளவில் இறக்குமதி செய்கின்ற ஐந்தாவது நாடாக விளங்கியது. மொத்த

ஏற்றுமதிகளில் ஏறத்தாழ 30 சதவீதத்திற்கு வகைகூறுகின்ற இலங்கையின் ஏற்றுமதிகள் அதிகம் ஆதிக்கம் செலுத்துகின்ற பிராந்தியமாகக் காணப்படுகின்ற ஐரோப்பிய ஒன்றியத்திற்கான ஏற்றுமதிகள், 2019இல் ஐ.அ.டொலர் 3,552 மில்லியனுக்கு 2.2 சதவீதத்தினால் அதிகரித்தன. ஐரோப்பிய ஒன்றியத்தின் முன்னுரிமைகளின் பொதுவாக்கப்பட்ட முறைமைத் திட்ட + வசதி மீளக்கிடைக்கப்பெற்றமை மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்திற்கான மீன் உற்பத்திகள் ஏற்றுமதிகள் மீதான தடை அகற்றப்பட்டமை என்பவற்றின் சாதகமான தாக்கத்தினைப் பிரதிபலித்து ஐரோப்பிய ஒன்றியத்திற்கான மொத்த ஏற்றுமதிகளின் 65 சதவீதத்திற்கு வகைகூறுகின்ற ஆடைகள், கடலுணவு மற்றும் போக்குவரத்து உபகரணங்கள் என்பவற்றிலிருந்தான அதிகரித்த ஏற்றுமதி வருவாய்கள் இவ்வதிகரிப்பிற்கு பாரியளவில் பங்களித்தன. 2019இல் மத்திய கிழக்கு மற்றும் ருசியா முன்னிலையிலான பொதுநலவாய சுதந்திர அரசுகள் என்பன இலங்கையின் தேயிலை ஏற்றுமதிகளுக்கான முக்கிய சேரிட நாடுகளாக காணப்பட்டன. இந்நாடுகளுக்கான தேயிலை ஏற்றுமதிகளில் வீழ்ச்சியொன்று பதிவுசெய்யப்பட்டமைக்கு மத்தியிலும் மொத்தத் தேயிலை ஏற்றுமதி வருவாய்களில் முறையே 42 சதவீதத்திற்கும் 17 சதவீதத்திற்கும் இந்நாடுகள் பங்களித்தன.

**இலங்கையின் முக்கிய இறக்குமதி மூலமாக 2016ஆம் ஆண்டு முதல் இரண்டாவது தடவையாக சீனா அதன் நிலையினை 2019இல் நிலைநிறுத்தியது.** மொத்த இறக்குமதிச் செலவினத்தில் 2018இல் பதிவாகிய 18.5 சதவீதப் பங்குடன் ஒப்பிடுகையில் 2019இல் 20.2 சதவீதம் கொண்ட குறிப்பிடத்தக்க பங்கொன்றிற்கு சீனா வகைகூறியது. எனினும், சீனாவிலிருந்தான இறக்குமதிச் செலவினமானது 2019இல் ஐ.அ.டொலர் 4,034 மில்லியனுக்கு 2.0 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தமைக்கு தொடர்பூட்டல் சாதனங்கள், வீட்டுப் பாவனை மற்றும் தளபாடப் பொருட்கள் அத்துடன் இரசாயன உற்பத்திகள் என்பவற்றின் குறைவான இறக்குமதிகள் பிரதான காரணமாக அமைந்தன. 2019ஆம் ஆண்டு காலப்பகுதியில் சீனாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட முக்கிய பொருட்களாக, புடவைகள், புடவைப் பொருட்கள், இயந்திரம் மற்றும் உபகரணங்கள் அத்துடன் கட்டடப் பொருட்கள் என்பவை காணப்பட்டு சீனாவிலிருந்தான இறக்குமதிச் செலவினத்தின் 64 சதவீதத்திற்கு வகைகூறின. இரண்டாம் மற்றும் மூன்றாம் இறக்குமதி மூல நாடுகளாக இந்தியாவும் ஐக்கிய அரபு இராச்சியமும் விளங்கி 2019இல் முறையே ஐ.அ.டொலர் 3,899 மில்லியனையும் (மொத்த இறக்குமதிகளின் 19.6 சதவீதத்திற் வகைகூறி) ஐ.அ.டொலர் 1,699 மில்லியனையும் (8.4 சதவீதத்திற்கு வகைகூறி) பதிவு செய்தன. இந்தியா தொடர்பில், இந்தியாவிலிருந்தான மொத்த இறக்குமதிகளின் 51 சதவீதத்திற்கு ஒன்றுசேர்ந்து வகைகூறுகின்ற முக்கிய இறக்குமதிகள், புடவைகள் மற்றும் புடவைப் பொருட்கள், பெற்றோலிய உற்பத்திகள், கட்டடப் பொருட்கள், இயந்திரம் மற்றும் உபகரணங்கள் மற்றும் இரசாயன உற்பத்திகள் என்பனவற்றை உள்ளடங்கியிருந்தன. ஐக்கிய அரபு இராச்சியத்திலிருந்தான முக்கிய இறக்குமதிகளாக அந்நாட்டிலிருந்தான மொத்த இறக்குமதிகளின் 88 சதவீதத்திற்கு வகைகூறுகின்ற பெற்றோலிய உற்பத்திகள், கனிம உற்பத்திகள், அடிப்படைய உலோகங்கள் என்பன அமைந்திருந்தன. 2019இல் மொத்த இறக்குமதிகளில் முறையே 4.8 சதவீதத்திற்கும் 4.4 சதவீதத்திற்கும் வகைகூறுகின்ற நான்காவது மற்றும் ஐந்தாவது பாரிய இறக்குமதி மூல நாடுகளாக முறையே சிங்கப்பூர் மற்றும் யப்பான் ஆகியன காணப்பட்டன. சிங்கப்பூரிலிருந்தான இறக்குமதி மீதான செலவினமானது பிரதானமாக பெற்றோலிய உற்பத்திகள் இறக்குமதியில் கணிசமான குறைவின் காரணமாக மொத்த இறக்குமதிகளில் அதன் பங்கினை 2018இன் 6.2 சதவீதத்திலிருந்து 2019இல் 4.8 சதவீதத்திற்கு குறைவடையச் செய்து ஐ.அ.டொலர் 964 மில்லியனுக்கு 29.7 சதவீதத்தினால் குறிப்பிடத்தக்களவு வீழ்ச்சியடைந்திருந்தது. 2019இல் சிங்கப்பூரிலிருந்தான மொத்த இறக்குமதிச் செலவினத்தின் 89 சதவீதத்திற்கு வகைகூறுகின்ற பெற்றோலிய உற்பத்திகள், இயந்திரம் மற்றும் உபகரணங்கள் மற்றும் இரசாயனப் பொருட்கள் சிங்கப்பூரிலிருந்து இறக்குமதிசெய்யப்பட்ட முக்கிய பொருட்களாகும். யப்பானிலிருந்தான இறக்குமதிகள் மீதான செலவினமானது தனிப்பட்ட உந்து ஊர்திகள் இறக்குமதியில் குறைவின் பிரதான காரணமாக அதன் பங்கினை 2018இன் 7.1 சதவீதத்திலிருந்து 4.4 சதவீதமாகக் குறைவடையச் செய்து 2019இல் ஐ.அ.டொலர் 875 மில்லியனுக்கு 44.8 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. 2019 காலப்பகுதியில் யப்பானிலிருந்தான முக்கிய இறக்குமதிகளாக அந்நாட்டிலிருந்தான இறக்குமதியின் 79 சதவீதத்திற்கு வகைகூறுகின்ற தனிப்பட்ட உந்து ஊர்திகள், போக்குவரத்துச் சாதனங்கள், இயந்திரம் மற்றும் உபகரணங்களாக அமைந்திருந்தன.

## 5.4 நடைமுறை மற்றும் மூலதனக் கணக்கு

### 5.4.1 பணிகளிலுள்ள வர்த்தகம்

**உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களினால் பணிகள் கணக்கு 2019இல் கணிசமாகப் பாதிக்கப்பட்டது.** இக்காலப்பகுதியில் பணிகளிலுள்ள வர்த்தக கணக்கு மிகையில் குறிப்பிடத்தக்க வீழ்ச்சியொன்று பதிவாகியமைக்கு சுற்றுலா மற்றும் போக்குவரத்து துறைகளிலிருந்தான வருவாய்கள் குறைவடைந்தமை பிரதான காணரமாக அமைந்தது. உயித்த ஞாயிறு தாக்குதல்களின் காரணமாக 2019இல் சுற்றுலாத் துறை மற்றும் விமானப் பயணிகள் போக்குவரத்துப் பணிகளிலிருந்தான வருவாய்கள் வீழ்ச்சியடைந்த அதேவேளை, தொலைத்தொடர்புப் பணிகள், கணனிப் பணிகள் மற்றும் ஏனைய பணிகளிலிருந்தான வருவாய்கள் 2019காலப்பகுதியில் வளர்ச்சியடைந்தன. ஒட்டுமொத்தமாக, பணிகள் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் 2018இன் ஐ.அ.டொலர் 8,374 மில்லியனிலிருந்து 2019இல் ஐ.அ.டொலர் 7,474 மில்லியனுக்கு 10.7 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தன.

அட்டவணை 5.7
நடைமுறை மற்றும் மூலதனக் கணக்கு

ஐ.அ.டொலர் மில்லியன்

| விடயம் | 2018 (அ) | | | 2019 (ஆ) | | |
|---|---|---|---|---|---|---|
| | வரவு | செலவு | தேறிய | வரவு | செலவு | தேறிய |
| **பொருட்கள் மற்றும் பணிகள்** | **20,264** | **26,841** | **-6,577** | **19,414** | **24,562** | **-5,148** |
| **பொருட்கள்** | **11,890** | **22,233** | **-10,343** | **11,940** | **19,937** | **-7,997** |
| பொது வணிகம் | 11,890 | 21,794 | -9,904 | 11,940 | 19,935 | -7,995 |
| நாணயமல்லா தங்கம் | - | 439 | -439 | - | 3 | -3 |
| **பணிகள்** | **8,374** | **4,608** | **3,766** | **7,474** | **4,625** | **2,849** |
| போக்குவரத்து | 2,486 | 1,737 | 750 | 2,339 | 1,710 | 630 |
| கடல்வழி போக்குவரத்து | 1,134 | 819 | 315 | 1,155 | 820 | 335 |
| சரக்குத் தொகுதி | 1,134 | 819 | 315 | 1,155 | 820 | 335 |
| வான்வழி போக்குவரத்து | 1,353 | 918 | 435 | 1,184 | 889 | 295 |
| பயணிகள் | 1,227 | 827 | 400 | 1,056 | 798 | 258 |
| சரக்குத் தொகுதி | 126 | 91 | 35 | 128 | 91 | 37 |
| பயணம் (இ) | 4,381 | 1,660 | 2,721 | 3,607 | 1,638 | 1,969 |
| கட்டுமானம் | 65 | 33 | 32 | 67 | 35 | 32 |
| காப்புறுதியும் ஓய்வூதியப் பணிகளும் | 130 | 97 | 33 | 137 | 102 | 36 |
| நிதியியல் பணிகள் | 242 | 447 | -205 | 213 | 470 | -258 |
| தொலைத்தொடர்பு மற்றும் கணனி பணிகள் | 995 | 484 | 511 | 1,054 | 515 | 539 |
| தொலைத்தொடர்புகள் | 147 | 112 | 35 | 155 | 135 | 21 |
| கணனி பணிகள் | 848 | 372 | 475 | 899 | 380 | 519 |
| ஏனைய வியாபார பணிகள் | 40 | 75 | -34 | 35 | 78 | -43 |
| அரச பொருட்கள் மற்றும் பணிகள் என்.ஐ.இ. | 35 | 75 | -41 | 21 | 77 | -56 |
| **முதலாந்தர வருமானம்** | **249** | **2,633** | **-2,385** | **252** | **2,678** | **-2,426** |
| ஊழியர்களுக்கான நட்டஈடு | 28 | 102 | -74 | 31 | 130 | -99 |
| முதலீட்டு வருமானம் | 221 | 2,532 | -2,311 | 220 | 2,548 | -2,327 |
| நேரடி முதலீடு | 23 | 783 | -760 | 26 | 863 | -837 |
| பங்கு இலாபங்கள் | 13 | 558 | -545 | 14 | 599 | -585 |
| மீள் முதலிடப்பட்ட வருவாய்கள் | 10 | 225 | -215 | 13 | 264 | -252 |
| சொத்துப் பட்டியல் முதலீடு | - | 1,037 | -1,037 | - | 1,007 | -1,007 |
| பங்கு மூலதனம் | - | 70 | -70 | - | 31 | -31 |
| வட்டி | - | 967 | -967 | - | 976 | -976 |
| குறுங்காலம் | - | 4 | -4 | - | 8 | -8 |
| நீண்டகாலம் | - | 963 | -963 | - | 969 | -969 |
| ஏனைய முதலீடு | 88 | 711 | -623 | 97 | 677 | -580 |
| ஒதுக்கு சொத்துக்கள் | 110 | - | 110 | 97 | - | 97 |
| **இரண்டாந்தர வருமானம்** | **7,023** | **860** | **6,163** | **6,726** | **960** | **5,766** |
| பொது அரசாங்கம் | 8 | - | 8 | 9 | - | 9 |
| தொழிலாளர் பணவனுப்பல்கள் | 7,015 | 860 | 6,155 | 6,717 | 960 | 5,757 |
| **நடைமுறை கணக்கு** | **27,535** | **30,334** | **-2,799** | **26,392** | **28,200** | **-1,808** |
| **மூலதன கணக்கு** | 42 | 27 | 14 | 51 | 28 | 23 |
| மூலதன மாற்றல்கள் | 42 | 27 | 14 | 51 | 28 | 23 |
| பொது அரசாங்கம் | 14 | - | 14 | 16 | - | 16 |
| கூட்டுத்தாபனங்கள் மற்றும் வீட்டுத்துறை | 28 | 27 | ... | 34 | 28 | 7 |
| **நடைமுறை மற்றும் மூலதனக் கணக்கு** | **27,577** | **30,362** | **-2,785** | **26,443** | **28,228** | **-1,785** |

(அ) திருத்தப்பட்டது
(ஆ) தற்காலிகமானது
(இ) வதிவற்றோருக்கு வழங்கப்பட்ட பயணிகள் பணிகள் என்பன போக்குவரத்துப் பணிகளில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

*மூலம்:* இலங்கை மத்திய வங்கி

அதேவேளை, ஆண்டு காலப்பகுதியில் காப்புறுதி, நிதியியல், தொலைத்தொடர்பு மற்றும் கணனிப் பணிகள் உள்ளடங்கலாக ஏனைய பணிகளின் வெளிப்பாய்ச்சல்கள் அதிகரிப்பொன்றினைப் பதிவுசெய்த அதேவேளை, உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களின் பின்னர் தனிப்பட்ட வெளிநாட்டுப் பயணம், பயணிகள் போக்குவரத்து பணிகள் மீதான செலவினம் வீழ்ச்சியொன்றினைப் பதிவுசெய்தமை மூலம் ஆண்டு காலத்தில் பணிகள் கணக்கிலிருந்தான வெளிப்பாய்ச்சல்கள், ஐ.அ.டொலர் 4,625 மில்லியனுக்கு 0.4 சதவீதம் கொண்ட சிறிய வீழ்ச்சியொன்றினைப் பதிவுசெய்தன. அதேவேளை, கணனிப் பணிகள் துறையானது 2019இல் அதன் வளர்ச்சி உத்வேகத்தினைத் தொடர்ந்தது. இவ் அபிவிருத்திகளைப் பிரதிபலித்து, பணிகள் கணக்கின் மிகையானது 2018இல் பதிவாகிய ஐ.அ.டொலர் 3,766 மில்லியன் மிகையொன்றுடன் ஒப்பிடுகையில் 2019இல் ஐ.அ.டொலர் 2,849 மில்லியனுக்கு வீழ்ச்சியடைந்தது.

## போக்குவரத்துப் பணிகள்

**2019இல் குறைந்த விமானப் பயணிகள் போக்குவரத்துப் பணிகளின் காரணமாக போக்குவரத்துப் பணிகளின் மிகை சுருக்கமடைந்தது.** பயணிகள் கட்டணங்கள், சரக்குக் கட்டணங்கள், துறைமுக மற்றும் விமான நிலையம் தொடர்புபட்ட நடவடிக்கைகளை உள்ளடக்குகின்ற போக்குவரத்துப் பணிகளின் மொத்தப் உட்பாய்ச்சல்கள் 2018இல் ஐ.அ.டொலர் 2,486 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2019இல் ஐ.அ.டொலர் 2,339 மில்லியனாகவிருந்தது. இக்குறைவிற்கு உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல்களின் பின்னர் விமானப் பயணிகள் போக்குவரத்துப் பணிகளில் வீழ்ச்சி பெருமளவில் காரணமாக அமைந்தது. எவ்வாறாயினும், சரக்குக் கட்டண வருவாய்களில் வளர்ச்சியொன்றுக்கு மத்தியில் கடல் போக்குவரத்துப் பணிகள் மிதமான வளர்ச்சியொன்றினைப் பதிவுசெய்தன. அதேவேளை, போக்குவரத்துப் பணிகள் கணக்கின் வெளிப்பாய்ச்சலும் 2018இல் ஐ.அ.டொலர் 1,737 மில்லியனிலிருந்து 2019இல் ஐ.அ.டொலர் 1,710 மில்லியனாக வீழ்ச்சியடைந்தது. இதன் விளைவாக, போக்குவரத்துத் துறையிலிருந்தான தேறிய உட்பாய்ச்சல்கள், 2018இன் ஐ.அ.டொலர் 750 மில்லியன் இலிருந்து 2019இல் ஐ.அ.டொலர் 630 மில்லியனுக்கு வீழ்ச்சியடைந்தது. 2019 ஏப்பிறல் தொடக்கம் பல மாதங்களுக்கு விமானப் பயணச்சீட்டுக் கட்டணங்களைக் குறைப்பதற்கும் கழிவு விலைகளில் வழங்குவதற்கும் சிறிலங்கன் எயார்லைன்ஸ் நிறுவனத்தையும் தூண்டிய 2019இன் உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களின் விளைவுக்குப் பின்னர் இலங்கைக்கான பயணிகள் வருகையின் வீழ்ச்சியுடன் வான்வழிப் பயணிகள் கட்டணங்களிலிருந்தான வருவாய்கள், 2018இன் ஐ.அ.டொலர் 1,227 மில்லியனிலிருந்து 2019இல் ஐ.அ.டொலர் 1,056 மில்லியனுக்கு வீழ்ச்சியடைந்தது. எனினும், குளிர்கால சுற்றுலாப் பயணிகள் பருவகாலம் மற்றும் விமானப் பயணச் சீட்டுக் கட்டணங்கள் இயல்புநிலைக்குத் திரும்பியமை என்பவற்றுக்குச் இசைவாக சுற்றுலாப் பயணிகளின் வருகையில் எதிர்பார்க்கப்பட்டதை விட விரைவான மீட்சியுடன் ஆண்டின் பிந்திய பகுதியில் வான்வழிப் பயணிகள் கட்டணங்களிலிருந்தான வருவாய்கள் மேம்பட்டன. துறைமுகம் தொடர்புபட்ட நடவடிக்கைகளில் சில விரிவாக்கங்களின் மூலம் கொழும்புத் துறைமுகத்தில் கையாளப்பட்ட அதிகரித்த கப்பற் சரக்கு, கொள்கலன் மற்றும் மாற்றிக் கப்பலேற்றல்

அளவுகள் என்பவற்றைப் பிரதிபலித்து கடல் போக்குவரத்துப் பணிகள் தொடர்பிலான சரக்குக் கட்டணங்கள் மீதான உட்பாய்ச்சல்கள் 2019இல் மிதமானளவு அதிகரித்த அதேவேளை, விமான நிலையத்துடன் தொடர்புபட்ட சரக்குப் பணிகளும் 2019இல் அதிகரித்து, சரக்குப் பணிகளிலிருந்தான வருவாய்கள் ஐ.அ.டொலர் 1,283 மில்லியனுக்கு 1.9 சதவீத வளர்ச்சியொன்றினை ஏற்படுத்தின.


## பயணம் மற்றும் சுற்றுலா

**உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களினால் மோசமாகப் பாதிக்கப்பட்ட சுற்றுலாக் தொழிற்துறையானது தொடர்புடைய அதிகாரிகளினால் எடுக்கப்பட்ட துரிதமான நடவடிக்கைகளின் மூலம் துணையளிக்கப்பட்டு 2019இன் இறுதியளவில் எதிர்பார்க்கப்பட்டதை விட விரைவாக மீட்சியடைந்தது.** 2019இன் முதலாவது காலாண்டில் போது ஒருபோதுமில்லாதவாறு உயர்வான காலாண்டு ரீதியான வருகைகளைப் பதிவுசெய்த சுற்றுலாப் பயணிகளின் வருகைகள், 2018இல் பதிவாகிய 2,333,796 வருகைகளுடன் ஒப்பிடுகையில் 2019 இல் 1,913,702 வருகைகளுக்கு 18.0 சதவீதம் கொண்ட ஒட்டுமொத்த வீழ்ச்சியொன்றினைப் பதிவுசெய்தன. உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களின் பின்னர் சுற்றுலாப் பயணிகளின் முக்கிய மூல நாடுகளினால் பயண ஆலோசனைகள் விடுக்கப்பட்டதைத் தொடர்ந்து சுற்றுலாப் பயணிகளின் வருகையில் குறிப்பிடத்தக்களவு வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. எவ்வாறாயினும், கொள்கைப் பக்கத்திலிருந்து எடுக்கப்பட்ட பரிகார வழிமுறைகள், பாதுகாப்பு நிலைமைகளில் ஏற்பட்ட மேம்பாடு, சுற்றுலாத் துறையிலுள்ள வியாபாரங்களிற்கான நிதியியல் உதவி, சுற்றுலா ஊக்குவிப்பு மற்றும் 2019இன் நடுப்பகுதியளவில் பயண ஆலோசனைகள் தளர்த்தப்பட்டமை என்பன ஆண்டின் இறுதியளவில் சுற்றுலாப் பயணிகளின் வருகைகள் எதிர்பார்க்கப்பட்டதை விட விரைவாக மீட்சியடைவதற்கு உதவின. அதற்கமைய, சுற்றுலாப் பயணிகளின் வருகையானது 2019 மே மாதத்தில் 70.8 சதவீத வீழ்ச்சியிலிருந்து 2019 திசெம்பரில் ஆண்டுக்கு ஆண்டு அடிப்படையில் 4.5 சதவீத வீழ்ச்சியினை மாத்திரம் பதிவுசெய்து படிப்படியாக மீட்சியடைந்தது.

**அனைத்து முக்கிய பிராந்தியங்களிலிருந்தான சுற்றுலாப் பயணிகளின் வருகைகள் 2019இல் வீழ்ச்சியடைந்தன.** மொத்த சுற்றுலாப் பயணிகள் வருகைகளின் 46.4 சதவீதத்திற்கு வகைகூறி 887,572 வருகைகளுடன் இலங்கைக்கான பாரியளவு சுற்றுலாப் பயணிகளின் மூலப் பிராந்தியமாக ஐரோப்பா தொடர்ந்தும் விளங்கியது. எனினும், ருசியாவிலிருந்தான வருகைகளின் கவர்ச்சிகரமான வளர்ச்சியொன்றுடன் மத்திய மற்றும் கிழக்கு ஐரோப்பாவிலிருந்தான வருகைகளில் பதிவாகிய அதிகரிப்புக்கு மத்தியில், மேற்கு, வடக்கு, தெற்கு மற்றும் மத்தியதரைத் துணைப் பிராந்தியங்களிலிருந்தான வருகைகளின் வீழ்ச்சியினால் தூண்டப்பட்டு ஐரோப்பாவிலிருந்தான சுற்றுலாப் பயணிகளின் வருகைகள் 2018 உடன் ஒப்பிடுகையில் 2019இல் 12.8 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தன. ஆசிய பசுபிக் பிராந்தியமானது மொத்த சுற்றுலாப் பயணிகள் வருகைகளின் 43.9 சதவீதத்திற்கு வகைகூறி 23.1 சதவீத வீழ்ச்சிக்கு மத்தியில் 839,470 சுற்றுலாப் பயணிகளுடன் 2019இல் இரண்டாவது அதிகூடிய வருகைகளைப் பதிவுசெய்தது. ஆசிய பசுபிக் பிராந்தியத்திலிருந்தான சுற்றுலாப் பயணிகளின் இவ்வீழ்ச்சியே 2019இல் மொத்த வருகைகளின் வீழ்ச்சிக்கு அனேகமாகப் பங்களித்தது. நாடுகளின் அடிப்படையில் சுற்றுலாப் பயணிகள் வருகைகள் நியதிகளில் இந்தியா 355,002 வருகைகளுடன் சுற்றுலாப் பயணிகள் இருந்து வரும் முக்கிய நாடாக தொடர்ந்தும் இருந்ததுடன், அதனைத் தொடர்ந்து ஐக்கிய இராச்சியம், சீனா, ஜேர்மனி, அவுஸ்திரேலிய என்பன காணப்பட்டன. சுற்றுலாப் பயணிகளின் முதல் ஐந்து மூல நாடுகள் கூட்டாக மொத்த வருகைகளின் ஏறத்தாழ 50 சதவீதத்திற்கு வகைகூறின. சுற்றுலாப் பயணிகளின் முதல் பத்து மூல நாடுகள் மத்தியில் ருசியாவிலிருந்தான வருகைகள் மாத்திரம் 34.2 சதவீதத்தினால் வளர்ச்சியொன்றினைக் காண்பித்தன. இதற்கு வாடகை விமானப் பயணங்கள் மூலம் சுற்றுலாப் பயணிகளின் வருகைகள் முக்கிய காரணமாக அமைந்தது. வருகையின் நோக்கம் என்ற நியதிகளில் சுற்றுலாப் பயணிகளின் 83 சதவீதத்திற்கு மேற்பட்டோர் ஓய்வுக்காக நாட்டிற்கு வருகைதந்த அதேவேளை, 3.7 சதவீதமானோர் வியாபார நோக்கங்களுக்காக வருகை தந்தனர். 2 சதவீதத்திலும் குறைவானோர் கூட்டங்கள், ஊக்குவிப்புக்கள், மாநாடுகள், கண்காட்சிகள் மற்றும் விளையாட்டு நிகழ்வுகளுக்காக வருகை தந்திருந்தனர். நண்பர்கள் மற்றும் உறவினர்களைக் காணச்செல்லுதல், சமய மற்றும் மருத்துவ அத்துடன் கல்வி நோக்கங்களுக்கான வருகைகள் போன்ற வேறு நோக்கங்களுக்கான பல்வேறு வருகைகள் மொத்த வருகைகளில் 11.4 சதவீதத்திற்கு வகைகூறின.


வரைபடம் 5.9

நாடுகளின்படி சுற்றுலாப் பயணிகளின் வருகை - 2019




*மூலம் :* இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை

வரைபடம் 5.10
சுற்றுலாப் பயணிகளின் வருகைகள் மற்றும் சுற்றுலாவிலிருந்தான வருவாய்கள்




*மூலம்* : இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை

**உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களின் பின்னர் சுற்றுலாப் பயணிகளின் வருகைகள் குறைந்ததன் விளைவாக சுற்றுலாப் பயண வருவாய்களில் குறிப்பிடத்தக்க வீழ்ச்சியொன்று பதிவாகியது.** இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையினால் நடாத்தப்பட்ட சுற்றுலாப் பயணிகள் செலவிடல் மீதான வருடாந்த அளவீட்டின் பிரகாரம் 2019இல் சுற்றுலாப் பயணி ஒருவருக்கான சராசரி செலவிடல் 2018இல் நாளொன்றுக்கு ஐ.அ.டொலர் 173.8 இலிருந்து 2019இல் நாளொன்றுக்கு ஐ.அ.டொலர் 181.23 ஆக உயர்வடைந்தது. உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களின் பின்னர் விலையிடல் மீதான சில பாதகமான தாக்கங்களுக்கு மத்தியில் தங்குமிடத்திற்கான செலவிடலின் அதிகரிப்பு சுற்றுலாப் பயணி ஒருவருக்கான சராசரி செலவிடலின் அதிகரிப்புக்கான பிரதான காரணமாக அமைந்ததென இலங்கைச் சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபையின் அளவீடு குறிப்பிடுகின்றது. சுற்றுலாப் பயணி ஒருவரின் சராசரி தங்கியிருப்புக் காலமானது 2018இன் 10.8 நாட்களுடன் ஒப்பிடுகையில் 2019இல் 10.4 நாட்களென மதிப்பிடப்பட்டிருந்தது. இதன் விளைவாக, சுற்றுலாப் பயணிகள் மூலமான சராசரி செலவிடலின் அதிகரிப்புக்கு மத்தியில் சுற்றுலாப் பயணி வருகைகளின் குறிப்பிடத்தக்க வீழ்ச்சி மற்றும் தங்கியிருக்கும் சராசரிக் காலத்தில் சிறிய வீழ்ச்சி என்பவற்றின் காரணமாக சுற்றுலாவிலிருந்தான வருவாய்கள் 2018இன் ஐ.அ.டொலர் 4,381 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2019இல் ஐ.அ.டொலர் 3,607 மில்லியனுக்கு 17.7 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தன. அதேவேளை, உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களின் விளைவுகளினால் வெளிநாடுகளுக்கு இலங்கையர் குறைவாக பயணித்ததன் பிரதான காரணமாக சுற்றுலாத் துறையிலிருந்தான வெளிப்பாய்ச்சல்களும் 2019இல் 1.3 சதவீதம் கொண்ட குறைவொன்றைப் பதிவுசெய்து ஐ.அ.டொலர் 1,638 மில்லியனுக்கு வீழ்ச்சியடைந்தது. இதன் விளைவாக, பயணம் மற்றும் சுற்றுலாத் துறையின் தேறிய மிகையானது 2018இன் ஐ.அ.டொலர் 2,721 மில்லியனிலிருந்து 2019இல் ஐ.அ.டொலர் 1,969 மில்லியனாக கணிசமாக வீழ்ச்சியடைந்தது.

**உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களின் விளைவிற்குப் பின்னர் சுற்றுலாப் பயணிகளின் வருகையின் பின்னடைவுக்கு மத்தியிலும் சுற்றுலாக் தொழிற்துறை, 2019இல் தொடர்ந்தும் குறிப்பிடத்தக்க முதலீடுகளை ஈர்த்துக்கொண்டது.** இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையின் முதலீட்டாளர் உறவுகள் பிரிவானது (ஒரே கூரையிலான பிரிவு என முன்னர் அறியப்பட்ட) 2,237 கொண்ட அறைகள் கூட்டான கொள்ளளவுடன் கூடிய 59 சுற்றுலா விடுதிச் செயற்றிட்டங்களுக்காக 2019இல் ஒப்புதல் வழங்கியது. 2019 காலப்பகுதியில் 132 சுற்றுலா விடுதிகளுக்காக ஐ.அ.டொலர் 189 மில்லியன் பெறுமதியுடைய புதிய முன்மொழிவுகள் முதலீட்டாளர் உறவுகள் பிரிவிற்கு ஆற்றுப்படுத்தப்பட்டதுடன் இச்செயற்றிட்டங்கள் நிறைவடையும்

5

அட்டவணை 5.8
சுற்றுலாத் துறையின் செயலாற்றம்

| விடயம் | 2015 | 2016 | 2017 | 2018 | 2019 (அ) | ஆண்டுக்காண்டு மாற்றம் (%) 2019 |
|---|---|---|---|---|---|---|
| சுற்றுலா பயணிகளின் வருகைகள் (எண்ணிக்கை) | 1,798,380 | 2,050,832 | 2,116,407 | 2,333,796 | 1,913,702 | -18.0 |
| வருகையின் நோக்கத்தின் அடிப்படையில் | | | | | | |
| பொழுதுபோக்கு | 1,198,240 | 1,710,027 | 1,744,149 | 1,979,819 | 1,592,212 | -19.6 |
| வியாபாரம் | 23,323 | 37,121 | 70,683 | 71,255 | 70,068 | -1.7 |
| ஏனையவை | 576,817 | 303,684 | 301,575 | 282,722 | 251,422 | -11.1 |
| சுற்றுலா விருந்தாளிகளின் இரவுகள் ('000) | 18,163 | 20,918 | 23,068 | 25,205 | 19,903 | -21.0 |
| தங்கும் அறை குடியிருப்பு வீதம் (%) | 74.5 | 74.8 | 73.3 | 72.8 | 57.1 | -21.6 |
| மொத்தச் சுற்றுலா பெறுகைகள் (ரூ.மில்லியன்) | 405,492 | 512,373 | 598,143 | 711,961 | 646,362 | -9.2 |
| தலைக்குரிய சுற்றுலா பெறுகைகள் (ரூ) | 225,476 | 249,837 | 282,622 | 305,066 | 337,755 | 10.7 |
| மொத்த தொழில்நிலை (எண்ணிக்கை) (ஆ) | 319,436 | 335,659 | 359,215 | 388,487 | 402,607 | 3.6 |
| நேரடி தொழில்நிலை | 135,930 | 146,115 | 156,369 | 169,003 | 173,592 | 2.7 |
| மறைமுக தொழில்நிலை | 183,506 | 189,544 | 202,846 | 219,484 | 229,015 | 4.3 |

(அ) தற்காலிகமானது
(ஆ) மதிப்பீடுகள்

*மூலங்கள்* : இலங்கைச் சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை
இலங்கை மத்திய வங்கி

## சிறப்புக்குறிப்பு 09
## உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களின் தாக்கம்

2019 ஏப்பிறல் 21 அன்று, உயிர்த்த ஞாயிறு தினக் கொண்டாட்ட நாளன்று நீர்கொழும்பு, மட்டக்களப்பு, கொழும்பு ஆகிய பிரதேசங்களில் அமைந்துள்ள மூன்று கிறிஸ்தவ தேவாலயங்களிலும் கொழும்பில் மூன்று சொகுசு விடுதிகளிலும் வெளிநாட்டு பயங்கரவாத அமைப்பொன்றுக்கு விசுவாசம் மிக்கதென பிரகடனப்படுத்தப்பட்ட உள்நாட்டு போராளிக் குழுவொன்றினால் திட்டமிடப்பட்ட ஒருங்கிணைக்கப்பட்ட குண்டுத் தாக்குதல் நடாத்தப்பட்டது. இத்துயர்மிக்க நிகழ்வின் காரணமாக வெளிநாட்டவர்கள் உட்பட 250 இற்கும் மேற்பட்ட பொதுமக்கள் கொல்லப்பட்டதுடன் 500 இற்கும் மேற்பட்டோர் காயம் அடைந்துள்ளனர் என கணிப்பிடப்பட்டது.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களுக்கு பதிலிறுத்தி இலங்கை அரசாங்கமானது அவசரகால நிலையினைப் பிரகடனப்படுத்தியதுடன் சூத்திரதாரிகளைக் கைதுசெய்வதற்கும் ஏற்படக்கூடிய இனரீதியான பதற்றங்களைத் தணிப்பதற்கும் பல நாட்களாக இரவு பொலிஸ் ஊரடங்குச் சட்டத்தினை அமுல்படுத்தியது. நிகழ்வினைத் தொடர்ந்து நாட்டின் அனைத்து பாடசாலைகளும் அரசாங்கப் பல்கலைக்கழகங்களும் இரண்டு வாரங்களுக்கு மூடப்பட்டன. சமூகங்கள் மத்தியில் வன்செயல்களைத் தூண்டக்கூடிய தவறான தகவல்கள் பரவுவதைத் தடுப்பதற்கு அரசாங்கம் முக்கிய சமூக வலைத்தளங்களை முடக்கியது. கொழும்பு பங்குப் பரிவர்த்தனைத் தொழிற்பாடுகளும் 2019 ஏப்பிறல் 22 அன்று தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டன. சிவில் சமூக வாழ்க்கையும் பொருளாதார நடவடிக்கைகளும் இயல்புநிலைக்குத் திரும்புவதற்கான சமிக்ஞை தென்படுவதற்கு சுமார் இரண்டு வாரங்கள் எடுத்தன. அதேவேளை உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களினால் மேலும் பாதிப்படைந்த மந்தமான பொருளாதார வளர்ச்சி, மெதுவடைகின்ற தனியார் துறைக் கொடுகடன், முடங்கிய பணவீக்க எதிர்பார்க்கைகள் மற்றும் பணவீக்கத் தோற்றப்பாடு என்பவற்றுக்கு மத்தியில் மத்திய வங்கியும் 2019 மே தொடக்கம் தளர்த்தப்பட்ட நாணயக் கொள்கை நிலையினை பின்பற்றியது.


தொடர் தாக்குதல்கள் குறிப்பாக சுற்றுலாக் கைத்தொழிலினை அபரிமிதமாகப் பாதித்த அதேவேளை, விமானப் போக்குவரத்துப் பணிகள், உள்நாட்டு போக்குவரத்து, மொத்த மற்றும் சில்லறை வர்த்தகம் அத்துடன் தங்குமிடம், உணவு மற்றும் குடிபான பணி நடவடிக்கை, ஓய்வு மற்றும் பொழுதுபோக்கு, உணவு மற்றும் குடிபானத் தயாரிப்பு அத்துடன் வேளாண்மை போன்ற பல ஏனைய துறைகள் மீதும் எதிர்மறையான கசிவுத் தாக்கங்களை ஏற்படுத்தின. தாக்குதல்களின் உடனடி விளைவாக அரசாங்கப் பிணையங்கள் சந்தையிலிருந்து வெளிநாட்டு முதலீடுகள் மீளப்பெறப்பட்டமையினால் செலாவணி வீதமும் சில அழுத்தங்களை எதிர்கொண்டது. விலைச் சுட்டெண்களிலும் சந்தை மூலதனமாக்கலிலும் ஏற்பட்ட வீழ்ச்சியினால் கொழும்பு பங்குப் பரிவர்த்தனையும் பின்னடைவொன்றினை எதிர்கொண்டது. எவ்வாறாயினும், உலகளாவிய பொருளாதார மற்றும் நிதியியல் சந்தை அபிவிருத்திகள், 2019இன் இரண்டாம் காலாண்டு முழுவதும் நிலவிய பாதகமான வானிலை நிலைமைகள் மற்றும் ஆண்டின் பிந்திய பகுதியில் சனாதிபதி தேர்தல் முடிவுயும்வரை நிலவிய நிச்சயமற்ற தன்மைகள் போன்ற ஏனைய முக்கிய நிகழ்வுகளும் உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களை தொடர்ந்து பாதிக்கப்பட்ட பொருளாதாரம் மெதுவடைந்தமையை பாதித்தமையினால் பயங்கரவாதத் தாக்குதல்களின் மிகச்சரியான பொருளாதாரத் தாக்கத்தை அளவிடமுடியாதுள்ளது. எது எவ்வாறிருப்பினும், ஏற்கனவே மந்தமடைகின்ற பொருளாதார வளர்ச்சியினை தாக்குதல்கள் பாதித்தன என்றும் 2019இன் 2.3 சதவீதம் கொண்ட மெதுவான வளர்ச்சிக்குப் பெரும்பான்மையாக பங்களிப்புச் செய்தன என்றும் தீர்மானிக்கமுடியும்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களின் பகுதியளவான தாக்கத்தின் காரணமாக ஒட்டுமொத்த பொருளாதார நடவடிக்கையும் மெதுவடைந்ததன் விளைவாக குறைவான அரசிறைச் சேகரிப்பினால் இறைச் செயலாற்றுகை 2019இல் சீர்குலைந்தது. இதற்கு மேலதிகமாக, பாதிக்கப்பட்ட தரப்பினர்கள் மீட்சியடைவதனை வசதிப்படுத்துகின்ற நிவாரணப் பொதிகளை நடைமுறைப்படுத்தல், பாதுகாப்பு வழிமுறைகளை வலுப்படுத்தல், வட்டி உதவுதொகைகள் வழங்குதல் மற்றும் பாதிக்கப்பட்ட பொதுக் கட்டமைப்பினை மீள்நிர்மாணித்தல் என்பன மூலம் அரசாங்கச் செலவினமும் அதிகரித்திருந்தது என மதிப்பிடப்பட்டிருந்தது. எனினும், உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களின் பின்னரும்கூட இலங்கை அரசாங்கமானது 2019 யூனில் ஐ.அ.டொலர் 2 பில்லியன் பெறுமதியுடைய நாட்டிற்கான பன்னாட்டு முறியொன்றினை வழங்கியதுடன் பன்னாட்டு முதலீட்டாளர் சமூகத்தின் இலங்கைக்கான அவர்களது தொடர்ச்சியான ஆதரவினையும் நாட்டின் நீண்டகால வளர்ச்சி எதிர்பார்க்கை மீதான நம்பிக்கையும் பிரதிபலித்தது.

இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையின் மதிப்பீடுகளுக்கமைவாக, சுற்றுலாத் துறையில் நேரடி மற்றும் நேரடியற்ற தொழில்நிலையானது இலங்கையின் மொத்த தொழிற்படையின் 4.6 சதவீதமாகும். மேலும், நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் பங்கொன்றாக சுற்றுலா வருவாய்கள் ஏறத்தாழ 4-5 சதவீதமாகும். பயங்கரவாதத் தாக்குதலின் பின்னர் இலங்கையில் அதிகளவு சுற்றுலாப் பயணிகள் இருந்துவரும் நாடுகள் உள்ளடங்கலாக 37 நாடுகள் பல்வேறு இடர்நேர்வு மட்டங்களில் பயண ஆலோசனைகளை விடுத்திருந்த போதிலும் நாட்டின் பாதுகாப்பு நிலைமைகள் மேம்பட்டதுடன் தொடர்ந்து வந்த மாதங்களில் அவற்றில் அநேகமானவை ஆலோசனைகளைத் தளர்த்தின. நாளொன்றுக்கு 17 மில்லியனுக்கும் அதிகமான விமானப் பயண ஒதுக்கீட்டு கொடுக்கல்வாங்கல்களை பகுப்பாய்வு செய்வதன் மூலம் எதிர்கால பயண விதங்களை எதிர்வுகூறுகின்ற போவேட்கீஸின் பகுப்பாய்வின் பிரகாரம் தாக்குதல்களின் பின்னர் உடனடியாக மூன்று நாட்களில் ஏற்கனவேயிருந்த விமானப் பயண ஒதுக்கீடுகள் 86.2 சதவீதத்தினால் சடுதியாக இரத்துச்செய்யப்பட்ட அதேவேளை புதிய ஒதுக்கீடுகள் துரிதமாக வீழ்ச்சியடைந்தன. 2019 காலப்பகுதியில் 7,600 இற்கு சராசரியாகவிருந்த நாளொன்றுக்கான சுற்றுலாப் பயணிகளின் வருகை தாக்குதலின் பின்னரான இரண்டு மாத காலப்பகுதியில் ஏறத்தாழ 1,700 இற்கு கணிசமாக வீழ்ச்சியடைந்தது. எனினும், ஆண்டின் கடைசி இரு மாதங்களில் ஏறத்தாழ 6,900 இற்கு நாளொன்றுக்கான சராசரி வருகை அதிகரித்ததுடன் ஆண்டின் இரண்டாம் அரைப்பகுதியின் போது இலங்கையின் சுற்றுலாக் கைத்தொழில் விரைவான மீட்சியொன்றினை அவதானித்தது. எது எவ்வாறிருப்பினும், திரண்ட அடிப்படையில் சுற்றுலாப் பயணிகளின் வருகைகள் 1,913,702 இற்கு 18.0 சதவீதத்தினால் (ஆண்டிற்கு ஆண்டு) வீழ்ச்சியடைந்து 2019இல் சுற்றுலாத் துறையிலிருந்தான வருவாய்கள் ஐ.அ.டொலர் 3,607 மில்லியனுக்கு 17.7 சதவீதத்தினால் வீழ்ச்சியடைவதற்கு வழிவகுத்தது.

உலகம் முழுவதும் சில முக்கிய சுற்றுலாப் பயண அடைவிடங்களும் அண்மைய ஆண்டுகளில் இதனையொத்த பயங்கரவாதத் தாக்குதலை அனுபவித்தன. அண்மைக்கால உதாரணங்களாக 2015 நவெம்பரில் பரிஸ் நகர தாக்குதல்கள் மற்றும் 2016 மாச்சில் இடம்பெற்ற பிரஸ்ஸெல்ஸ் நகர குண்டுத் தாக்குதல்கள் என்பவற்றைக் குறிப்பிடலாம். எவ்வாறாயினும், இந்நாடுகள் பொருத்தமான வழிமுறைகளை உரிய காலத்தில் நடைமுறைப்படுத்தியதன் மூலம் இறுதியில் மீட்சியடைந்தன. பிரான்ஸ் பெருநகர்ப் பகுதியில் சுற்றுலாவானது பயங்கரவாதத் தாக்குதலின் பின்னர் ஒரு வருடத்தையும் விட குறைந்த காலத்தில் 2016[1] ஒத்தோபர் மாதம் தொடக்கம் வலுவான விதத்தில் வழமை நிலைக்குத் திரும்பிய அதேவேளை பிரஸ்ஸெல்ஸ் பிராந்தியமும் பயங்கரவாத தாக்குதலின் பின்னர் ஏழு மாதங்களில் 2016[2] ஒத்தோபர் தொடக்கம் மீட்சியடைவதற்கான சமிக்ஞைகளை காண்பித்தது. உலக பயண மற்றும் சுற்றுலா சபையின் கணிப்புகளுக்கமைய, பயங்கரவாத தாக்குதல்களின் தாக்கத்திலிருந்து இவ் அடைவிடங்கள் மீட்சிபெற எடுத்துக்கொண்ட காலம் 13 மாதங்களாகவுள்ள அதேவேளை அவர்கள் குறிப்பிடுவதற்கிணங்க அரசியல் குழப்பங்களிலிருந்து மீட்சிபெறுவதற்கு சுமார் 27 மாதங்கள் வரை செல்லலாம். உலகலாவிய நோய்ப்பரம்பல் மற்றும் சூழல் அனர்த்தம் போன்றவற்றின் பின்னர் மீட்சிபெறுவதற்கான சராசரி காலமானது பயங்கரவாத தாக்குதலொன்றினை விட மிக நீண்டதாக முறையே 21 மாதங்களாகவும் 24 மாதங்களாகவும் இருக்குமென கணிப்பிடப்படுகின்றது.

வரைபடம் சி.கு. 9.1
உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல்களுக்கு முன்னரும் பின்னரும் மாதாந்த சுற்றுலாப் பயணிகளின் வருகைகள்




*மூலம் :* சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை

*குறிப்பு :* நிழற்படுத்தப்பட்ட (சாம்பல் நிறம்) காலப்பகுதியின் போது சுற்றுலாப் பயணிகளின் வருகைகள் கொவிட் - 19 உலகளாவிய தொற்றுநோய்ப் பரவலினால் பாதிக்கப்பட்டிருந்தது.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களுக்கு பின்னர் மாதாந்த சுற்றுலாப் பயணிகளின் வருகைகள் மீண்ட விதத்தினை வரைபடம் சி.கு. 9.1 காண்பிக்கின்றது. 2019 மே காலப்பகுதியில் சுற்றுலாப் பயணிகளின் வருகை 71 சதவீதம் கொண்ட (ஆண்டுக்கு ஆண்டு) திடீர் வீழ்ச்சியொன்றினை அனுபவித்தது. எனினும், தொடர்ந்து வந்த 3 மாதங்களில் வருகைகள் படிப்படியாக அதிகரித்து சுற்றுலாப் பயணி பருவகாலம் தொடங்கியமையினால் ஆண்டின் இறுதியில் துரிதமாக அதிகரிப்பதற்கு முன்னர் செத்தெம்பரில் வீழ்ச்சியொன்றினை எடுத்துக்காட்டியது. அதற்கமைய, நவெம்பர் மாத வருகைகள் 9.5 சதவீதம் கொண்ட வீழ்ச்சியொன்றினை மாத்திரம் பதிவுசெய்த அதேவேளை, இவ்வீழ்ச்சியானது திசெம்பரில் 4.5 சதவீதத்திற்கு மேலும் குறைவடைந்தது. பயங்கரவாதத் தாக்குதல்களின் பின்னர் இலங்கையின் சுற்றுலாத் துறை 7 மாத காலப்பகுதியினுள் அநேகமாக முழுமையாக மீட்சியடைந்தது என்பதனை புள்ளிவிரங்கள் எடுத்துக்காட்டுகின்றமை உலக பயண மற்றும் சுற்றுலாச் சபையினால் மதிப்பிடப்பட்டவாறான 13 மாதங்களைக் கொண்ட சராசரி காலப்பகுதியினை விட குறைவானதாகும். எனினும், உலகளாவிய மற்றும் உள்நாட்டு சுற்றுலா மீதான கொவிட் - 19 உலகளாவிய நோய்ப் பரம்பலின் எதிர்மறையான தாக்கம் 2020இல் சுற்றுலாப் பயணி வருகை எண்ணிக்கையில் பிரதிபலிக்கும்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களின் பின்னர் சுற்றுலாக் கைத்தொழிலினை மீளக் கட்டியெழுப்புவதற்கு இலங்கை அரசாங்கம் பல வழிமுறைகளை மேற்கொண்டது. சுற்றுலா ஊக்குவிப்பு, சுற்றுலாத் துறையுடன் நேரடியாகத் தொடர்புடைய துறைகளுக்கு நிதியியல் மற்றும் இறை ஆதரவினை வழங்குதல் என்பன மீது விசேட கவனம் செலுத்தப்பட்டது. அதற்கமைய, படுகடனின் சட்ட ரீதியான இசைவுத் தாமதம் உள்ளடங்கலாக சுற்றுலாக் கைத்தொழிலில் பதிவுசெய்யப்பட்ட வர்த்தகங்களினால் பெற்றுக்கொண்ட கொடுகடன் வசதிகளுடன் தொடர்புடைய மூலதன மற்றும் வட்டிக் கொடுப்பனவுகள் இரண்டின் மீதும் பொருளாதார நிவாரணப் பொதியொன்று 2019 மேயில், அறிமுகப்படுத்தப்பட்டது. 2020 மாச்சு இறுதிவரை செல்லுபடியாகவிருந்த இப்படுகடனின் சட்ட ரீதியான இசைவுத் தாமதம் கொவிட் - 19 உலகளாவிய நோய்ப் பரம்பல் காரணமாக நீடிக்கப்பட்டது. படுகடனின் சட்ட ரீதியான இசைவுத் தாமதத்திற்கு மேலதிகமாக சுற்றுலாத் துறையின் முறைசாராத் துறை ஆர்வலர்களைப் பிரதானமாக மையப்படுத்தி 2019 மேயில் தனியான நிவாரணப் பொதியொன்று அரசாங்கத்தினால் அறிமுகப்படுத்தப்பட்டது. மேலும், சுற்றுலாக் கைத்தொழில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு தொழிற்பாட்டு மூலதன வசதிகளை வழங்குவதற்கு அரசாங்கத்தின் என்ரபிறைஸ் சிறிலங்கா நிகழ்ச்சித்திட்டதின் கீழ் ஜய இசுறு கடன் திட்டம் மற்றும் இலங்கை மத்திய வங்கியின் சௌபாக்கியா கடன் திட்டம் என்பவற்றின் நிதியங்களைப் பயன்படுத்துவதற்கு உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளும் அனுமதிக்கப்பட்டன. மேலும், பதிவுசெய்யப்பட்ட விடுதிகள் மற்றும் பயணத் தொழிற்படுத்துநர்கள் மீதான பெறுமதி சேர்க்கப்பட்ட வரி 2019 யூன் 01 தொடக்கம் 2019 நவெம்பர் 30 வரையான காலப்பகுதிக்கு 15 சதவீதத்திலிருந்து 7 சதவீதமாகக் குறைக்கப்பட்ட அதேவேளை பாதுகாப்புடன் தொடர்புபட்ட உற்பத்திகள் மீதான இறக்குமதித் தீர்வை அகற்றப்பட்டது. 2019 திசெம்பர் 01ஆம் திகதி தொடக்கம் நடைமுறைக்குவரும் வகையில் இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையின் கீழ் பதிவுசெய்யப்பட்ட விடுதிகள் மற்றும் அதனையொத்த பணிகளை வழங்குகின்ற அதனையொத்த தொழில்கள் மூலம் வழங்கப்படும் பணிகள் மீது, அவற்றுக்கான உள்ளீடுகளின் மொத்தப் பெறுமதியின் 60 சதவீதம் உள்நாட்டு வழங்குநர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளப்படுமாயின் பூச்சிய சதவீதம் கொண்ட பெறுமதி சேர்வரி வீதம் அறவிடப்படும் அதேவேளை ஏனைய தொழில்கள் 8 சதவீதம் கொண்ட வீதமொன்றில் அறவிடப்படும். இலங்கையின் வர்த்தகநாமம் பற்றிய எண்ணப்பாங்கினை மீளக் கட்டியெழுப்பும் பொருட்டு இலங்கை சுற்றுலா ஊக்குவிப்பு பணியகமானது இலக்கிடப்பட்ட ஊக்குவிப்புப் பிரசாரங்களை மேற்கொண்டது. இவை பல்வேறு சர்வதேச பயண ஊக்குவிப்பாளர்களுடனான ஊடக பயணங்களை ஒழுங்கமைத்தல்,

1 பிரான்ஸ் தேசிய புள்ளிவிபர மற்றும் பொருளாதார ஆய்வுகள் நிறுவனம், 2017

2 பிரஸ்ஸெல்ஸ் சுற்றுலா அவதானிப்பகத்தின் ஆண்டறிக்கை, 2016

5

பயண அமைப்புகளின் வருகைகளை ஏற்பாடுசெய்தல் மற்றும் சீனா மற்றும் இந்தியா போன்ற நாடுகளில் ஊடக மாநாடுகளை நடாத்துதல் போன்வற்றை உள்ளடக்கியிருந்தது. இலங்கை சுற்றுலா ஊக்குவிப்பு பணியகமானது இந்தியாவில் பயண முகவர் வலையமைப்பின் ஊடாக மேற்கொள்ளப்படுகின்ற ஒதுக்கீடுகளுக்காக 15 விசேட ஊக்குவிப்பு பொதிகளையும் தொடங்கியது. பயண மற்றும் சுற்றுலாச் சந்தைகள் அத்துடன் வீதிக் கண்காட்சிகள் வாயிலான இனங்காணப்பட்ட சந்தைகளில் வழமையான ஊக்குவிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்ட அதேவேளை வெளிநாடுகளிலுள்ள நிலக்கீழ் புகையிரத நிலையங்களில் வெளியிட ஊக்குவிப்புப் பிரசாரங்களும் மேற்கொள்ளப்பட்டன. இம்முயற்சிகளுக்கு டிஜிட்டல் விளம்பரப் பிரசாரம் நிறைவளித்ததுடன் சிஎன்என் உடனான கூட்டிணைப்புடன் தொலைக்காட்சிப் பிரசாரமும் துணையளித்தது. நாட்டில் பாதுகாப்பு நிலைமைகள் மேம்பட்டமை மற்றும் சுற்றுலாத் துறையின் தனியார் துறை மற்றும் அரசாங்க ஆர்வலர்கள் இருதரப்பினர்களினதும் தொடர்ச்சியான ஊக்குவிப்பு நடவடிக்கைகள் சுற்றுலாத் துறை விரைவான வேகத்தில் மீட்சிபெறுவதற்கு பங்களித்தன.

பயங்காரவாதத் தாக்குதலொன்றின் அல்லது ஏதேனும் நெருக்கடியான சூழ்நிலையின் பின்னர் பொருளாதார நடவடிக்கையின் உத்வேகத்தினை மீட்டிக்கொள்வதற்கான நாட்டின் இயலுமையானது வலுவான அவசரகாலத் திட்டங்கள், அனர்த்த மீட்பு நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் இடர்நேர்வு முகாமைத்துவ நெறிமுறைகள் என்பன கிடைக்கப்பெறும் தன்மையின் மீதே சார்ந்துள்ளது. எனவே, நெருக்கடியான நிகழ்வொன்றில் எதிர்வினையாக்கத்தினை விட முன்மதியுடையதாக இருப்பதே முக்கியத்துவம் வாய்ந்ததாகும். இந்நோக்கில் அத்தகைய நெருக்கடியினை எதிர்கொள்வதற்கு சட்ட மற்றும் அமுலாக்க அதிகாரிகள், சிவில் சமூகம், சுற்றுலா அதிகாரிகள் மற்றும் ஊடகம் என்பன ஒரே அணியில் சேர்வது வியாபாரம் மற்றும் சுற்றுலாவின் தாக்குப்பிடிக்கக்கூடிய தன்மையை மேம்படுத்துவதற்கு அத்தியாவசியமாக விளங்குகின்றது. இலங்கை நாடானது 30 வருடகால ஆயுத நெருக்கடி, சுனாமியின் பேரழிவு அத்துடன் உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் உள்ளடங்கலாக பல எண்ணிக்கையான துர்ப்பாக்கிய நிகழ்வுகளுகெதிராக எழுந்து நிற்பதற்கான அதன் இயலுமையினை காலத்திற்குக் காலம் நிரூபித்துள்ளது. படிப்படியாக மீட்சியடைதலுக்கு புறம்பாக பிந்திய கொவிட் -19 உலகளாவிய நோய்ப்பரவல் போன்ற பல உலகளாவிய பாதிக்கப்படக்கூடிய தன்மைகள் நாட்டின் சுற்றுலாத் துறையினையும் ஏனைய பொருளாதார நடவடிக்கைகளையும் பாதிப்படையச் செய்பவையாகக் காணப்படுகின்றன. எனவே, பேரண்டப் பொருளாதார கொள்கை உள்ளடங்கலாக அனைத்து நோக்கங்களிலும் அவசரகால தயார்நிலையானது அத்தகைய எதிர்பாராத நிகழ்வுகளைக் கையாள்வதற்கும் இதன் மூலம் அவற்றின் பாதகமான பொருளாதார மற்றும் சமூகத் தாக்கங்களைக் குறைப்பதற்கும் நாட்டின் தாக்குப்பிடிக்கும் தன்மையினை மேம்படுத்துவதில் இன்றியமையாதவையாகக் காணப்படுகின்றன.


உசாத்துணைகள்

1. Misrahi, T. (2016) How destinations can bounce back after terrorist attacks, https://www.weforum.org/agenda/2016/03/how-destinations-can-bounce-back-after-terrorist-attacks/
2. National Institute of Statistics and Economic Studies, France.(2017) Tourism occupancy in hotels, campsites and holiday and other short-stay accommodation in metropolitan France – Q4 2016. https://www.insee.fr/en/statistiques/2578079
3. Sri Lanka Tourism Development Authority. (2018)Annual Statistical Report 2018,
4. Visit Brussels. (2016)Annual Report of the Brussels Tourism Observatory 2016,
5. Wong, J. (2019) Sri Lanka suffers cancellation tsunami,https://forwardkeys.com/sri-lanka-easter-attacks/




பொழுது 2,584 அறைகள் இத்தொழிற்துறைக்கு சேர்க்கப்படும். இவற்றில் ஐ.அ.டொலர் 81.6 மில்லியன் பெறுமதியுடைய 66 புதிய முன்மொழிவுகள் 2019இன் இரண்டாம் அரைப் பகுதியில் கிடைக்கப்பெற்று இலங்கையின் சுற்றுலாக் கைத்தொழிலின் உள்ளார்ந்த ஆற்றல் மீதான முதலீட்டாளர்களின் தொடர்ச்சியான ஆர்வத்தினைக் குறித்துக்காட்டுகின்றது.

**உயிர்த்த ஞாயிறன்று மேற்கொள்ளப்பட்ட பயங்கரவாதத் தாக்குதல்களின் பின்னர் இலங்கையின் சுற்றுலாக் கைத்தொழிலின் உள்ளார்ந்த ஆற்றலினைப் பயன்படுத்திக் கொள்வதற்கு மேற்கொள்ளப்பட்டு வருகின்ற விசேட நடவடிக்கைகளுடன் சேர்த்து 2019இல் பல்வேறு கொள்கை வழிமுறைகளும் பல எண்ணிக்கையிலான ஊக்குவிப்புப் பிரசாரங்களும் நடைமுறைப்படுத்தப்பட்டன.** அதற்கமைய, 2019 மே இல் படுகடன் சட்ட இசைவுத் தாமதம் உள்ளடங்கலாகப் பொருளாதார நிவாரணப் பொதியொன்று அறிமுகப்படுத்தப்பட்டது. தொடக்கத்தில் இந்நிவாரணப் பொதி 2020 மாச்சு 31 வரை செல்லுபடியாகவிருத்ததாயினும், அதனைத் தொடர்ந்து சுற்றுலாக் கைத்தொழிலில் பதிவுசெய்யப்பட்ட வியாபாரங்களினால் பெற்றுக்கொள்ளப்பட்ட கடன்கள் மீதான மூலதனம் மற்றும் வட்டி இரண்டினையும் உள்ளடக்கி 2020 மாச்சு 31 வரை நீடிக்கப்பட்டது. சுற்றுலாத் துறை மீதான பேரழிவுத் தாக்கமொன்றினைக் கொண்டுள்ள தற்போது இடம்பெற்றுவருகின்ற கொவிட் - 19 உலகளாவிய நோய்ப்பரவல் மூலம் அத்தகைய நிவாரணம் மேலும் வலுப்படுத்தப்பட வேண்டிய சாத்தியம் காணப்படுகின்றது. சுற்றுலாத் துறையின் முறைசாரத் துறை ஆர்வலர்களை பிரதானமாக மையப்படுத்தி 2019 மே இல் நிதி அமைச்சினால் தனியான நிவாரணப் பொதியொன்று அறிமுகப்படுத்தப்பட்டது. பதிவுசெய்யப்பட்ட வியாபாரங்களுக்கு சலுகை வீதங்களில் தொழிற்பாட்டு மூலதனக் கடன்களை வழங்குவதற்கான திட்டங்களும் என்ரபிறைஸ் சிறிலங்கா முயற்சிகளின் கீழ் அறிமுகப்படுத்தப்பட்டன. மேலும், பதிவுசெய்யப்பட்ட சுற்றுலா விடுதிகள் மற்றும் சுற்றுலாத் தொழிற்பாட்டாளர் மீதான பெறுமதிசேர் வரி 2019 யூன் இல் 7 சதவீதமாகக் குறைக்கப்பட்டதுடன் 2019 திசெம்பரில் இல்லாதொழிக்கப்பட்டது. சுற்றுலாப் பயணிகள் மத்தியில் நம்பிக்கையினைக் கட்டியெழுப்பும் பொருட்டு நாட்டில் பாதுகாப்பு நிலைமையினை மேம்படுத்துவதற்கும் வழிமுறைகள் எடுக்கப்பட்டன. மேலும், பாதுகாப்புத் தொடர்புபட்ட

உற்பத்திகள் மீதான இறக்குமதித் தீர்வையும் அகற்றப்பட்டது. உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களின் பின்னர் சுற்றுலா ஊக்குவிப்பு மீது விசேட கவனம் செலுத்தப்பட்டது. இதில், இலங்கைச் சுற்றுலா ஊக்குவிப்புப் பணியகமானது பல்வேறு பன்னாட்டுப் பயண ஊக்குவிப்பாளர்களுடனான ஊடகப் பயணங்களை ஒழுங்கமைத்தல், பயண அமைப்புக்களின் விஜயங்களை ஏற்பாடு செய்தல் மற்றும் இலங்கையின் சுற்றுலாத் துறை பற்றிய விம்பத்தினை மீட்டெடுப்பதற்கு சீனா மற்றும் இந்தியா போன்ற நாடுகளில் ஊடக நிகழ்வுகளை நடாத்துதல் என்பவற்றினூடாக உடனடி நடவடிக்கைகளை எடுத்தது. அதேவேளை, இலங்கைச் சுற்றுலா ஊக்குவிப்புப் பணியகமானது இனங்காணப்பட்ட சந்தைகளில் அதன் வழமையான ஊக்குவிப்பு நடவடிக்கைகளைத் தொடர்ந்தும் முன்னெடுத்தது. அதற்கமைய, இலங்கைச் சுற்றுலா ஊக்குவிப்புப் பணியகமானது உள்நாட்டுப் பயண அமைப்புக்கள் நேரடி வியாபாரத் தொடர்புகளை ஏற்படுத்திக்கொள்ளும் வாய்ப்பினை வழங்கி 59 பயண மற்றும் சுற்றுலாச் சந்தைகளையும் 18 சாலை நிகழ்வுகளையும் கொண்டு நடாத்தியது. இதற்கு மேலதிகமாக, 2019இல் ஆறு மாத டிஜிட்டல் விளம்பரப் பிரசாரங்கள் மூலம் சுரங்கப்பாதை புகையிரத நிலையங்கள் மற்றும் நன்கு பிரபல்யமான வெளிநாட்டு சுற்றுலாப் பயண ஈர்ப்பு மையங்கள் போன்றனவற்றை உள்ளடக்கி வெளியிட விளம்பரப் பிரசாரங்கள் மேற்கொள்ளப்பட்டன. சிஎன்என் தொலைக்காட்சியில் மூன்று மாத தொலைக்காட்சிப் பிரசாரமொன்று நடாத்தப்பட்டதுடன் முக்கிய சுற்றுலாப் பயணிகளின் சந்தைகளில் அச்சுப் பிரசாரங்களும் மேற்கொள்ளப்பட்டன. இலங்கைச் சுற்றுலா ஊக்குவிப்புப் பணியகமானது 57 இணைய வழி சஞ்சிகைக் கருத்துப் பகிர்பவர்கள் மற்றும் சமூக வலைத்தள ஊக்குவிப்பாளர்களுடன் சேர்த்து 2019இல் வருகைதரு இணையத்தள சஞ்சிகைக் கருத்துத் தெரிவிப்பாளர்கள் நிகழ்ச்சித்திட்டத்தினை தொடர்ந்தும் முன்னெடுத்த அதேவேளை, வருகைதரு ஊடகவியலாளர் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 62 ஊடகவியலாளர்களுக்கு வசதியளித்தது. அதேவேளை, 2019இல் 53 உல்லாசப் பயணிகள் கப்பல்களிலிருந்து ஏறத்தாழ 99,000 பயணிகள் கொழும்புத் துறைமுகத்திற்கு வருகை தந்தனர். மேலும், அயன்மென் 70.3 மற்றும் ட்ரெயிட் அமேசன்ஸ் போன்ற சர்வதேச ரீதியாகப் பிரபல்யமிக்க பல்வேறு சாகச விளையாட்டுகளின் நிகழ்வுகளின் இரண்டாம் கட்டம் 2019இல் இடம்பெற்று பிராந்தியத்தில் மாறுபட்ட சாகசச் சுற்றுலாப் பயணி அடைவிடமாக இலங்கையினை ஊக்குவித்தன. இதற்கு மேலதிகமாக, 2025ஆம் ஆண்டளவில் ஐ.அ.டொலர் 10 பில்லியன் கொண்ட வருவாய் இலக்கினை எய்தும் குறிக்கோளொன்றுடன் இலங்கையின் முக்கிய சந்தை மூலங்களை உள்ளடக்கி ஐந்தாண்டு உலகளாவிய தொடர்பூட்டல் பிரசாரமொன்றினை மேற்கொள்வதற்கும் முன்மொழியப்பட்டது.

**நாட்டின் சுற்றுலாத் துறைக்கு பாரிய பின்னடைவை ஏற்படுத்திய உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களின் பின்னர் துறையினை மீட்சிபெறச் செய்வதற்கு சுற்றுலாக் கைத்தொழிலின் அனைத்து ஆர்வலர்களுடனான நெருங்கிய ஆலோசனையுடன் கூடிய ஒத்திசைவுமிக்க மீட்புத் திட்டமொன்று தேவைப்படுத்தப்பட்டது.** எவ்வாறாயினும், 2009ஆம் ஆண்டுவரை மூன்று தசாப்த காலத்திற்கும் மேல் பயங்கரவாதத்தினை எதிர்த்து நின்ற நாடாக இலங்கை, எதிர்பார்க்காத நிகழ்வுகளின் விளைவுகளைக் கையாளுவதில் அனுபவத்தினைக் கொண்டுள்ளது. எனவே, பாதுகாப்பினை வலுப்படுத்தல், முதலீட்டாளர் நம்பிக்கையினை மீட்டெடுத்தல், முக்கிய சந்தைகளிலிருந்து சுற்றுலாப் பயணிகளைக் கவருதல், சிறந்த தங்குமிட விலையிடல் மற்றும் பணி நியமங்கள் மீதான பயிற்சி என்பனவற்றிற்கான மேலதிக உபாயங்கள் தேவையாகும். அடைவிடங்களின் பாதுகாப்பு மற்றும் இயல்புநிலை என்பனவற்றில் சுற்றுலாப் பயணிகளின் நம்பிக்கையினை மீட்டெடுக்கும் பொருட்டு இலங்கை, வலுவான அவசரகாலத் திட்டங்கள், அனர்த்த மீட்பு நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் இடர்நேர்வு முகாமைத்துவ நெறிமுறைகள் என்பவற்றைப் பின்பற்ற வேண்டும். சுற்றுலாப் பயணிகளைக் கவருவதற்கும் தக்கவைப்பதற்கும் ஆக்கபூர்வமான ஊடகப் பிரசாரங்களை உருவாக்குவதன் மூலம் சுற்றுலாப் பயணிகளின் மனப்பாங்குகளை மாற்றுவதற்கான வழிமுறையொன்றாக சுற்றுலாத் துறை அபிவிருத்தி அதிகாரிகளும் அனைத்து ஆர்வலர்களும் பல்வேறு சமூக வலைத்தளங்களுக்கு விசேட கவனஞ்செலுத்தி ஊடகங்களுடன் இணைந்து பணியாற்ற வேண்டும். மேலும், சுற்றுலாப் பயணிகளின் வருகையில் தொடங்கி நாட்டிலிருந்து அவர்கள் புறப்படும் வரை சுற்றுலாப் பயணி ஒருவரின் ஒட்டுமொத்த சுற்றுலா வாழ்க்கைச் சுழற்சியினையும் கருத்திற்கொண்டு சுற்றுலாத் துறையினைத் தரமுயர்த்துவதற்கு திறன்வாய்ந்த தொழில்நுட்பத்தின் அடிப்படையிலமைந்த தீர்வுகளை அறிமுகப்படுத்துவது அத்தியாவசியமானதாகும். இத்திறன்வாய்ந்த தீர்வுகள், நாட்டை வந்தடைகின்ற போது கவனத்தை ஈர்க்கும் விதத்தில் செய்தி அனுப்புதல், வீசா வழங்கும் செயன்முறை மற்றும் எல்லைக் கட்டுப்பாட்டினை தன்னியக்கப்படுத்தல், நாடு முழுவதும் பிரபல்யமிக்க சுற்றுலாப் பயணிகளைக் கவரும் இடங்களுக்கு இலவச இணைப்புக்களை இயலச்செய்தல், வரலாற்றுச் சிறப்புமிக்க பிரதேசங்கள் மற்றும் நூதனசாலைகளில் பயன்படுத்தப்படுவதற்கு புதிய பயணம் குறித்த தகவல் செயலிகளை உருவாக்குதல் அத்துடன் இறுதியாக தமது அனுபவங்களைப் பகிர்ந்துகொள்வதற்காக சுற்றுலாப் பயணிகளை ஊக்குவித்தல் என்பன மீது கவனம் செலுத்தக்கூடியதாக இருத்தல் வேண்டும். சீனாவில் தோற்றம்பெற்று ஏனைய பல நாடுகளுக்கும் வியாபித்துள்ள கொவிட் - 19 நோய்ப்பரவலின் பின்னர் எதிர்வரவிருக்கும் காலங்களின் போது சுற்றுலாத்துறை மேலும் பின்னடைவுகளை எதிர்நோக்கலாம். இந்நோயின் பரவல் கட்டுப்படுத்தப்பட்டு

இதனூடாக வதிகின்றவர்கள் அதேபோன்று சுற்றுலாப் பயணிகள் நோய்த்தாக்கத்திலிருந்து காக்கப்பட்டுள்ளனர் என்பதனை உறுதி செய்துகொள்வதற்கு 2020 மாச்சு இலிருந்து பண்டாரநாயகா சர்வதேச விமான நிலையத்தில் அனைத்து நாடுகளிலுமிருந்தான பயணிகள் வருகையினை இடைநிறுத்தல், உள்நோக்கி வருகின்ற வர்த்தக ரீதியிலான பன்னாட்டு பயணிகளின் தொழிற்பாட்டிற்காக அனைத்து சர்வதேச விமான நிலையங்களையும் மூடிவிடுதல் உள்ளடங்கலாகத் தொடர்புடைய அதிகாரிகளால் தடுப்பு வழிமுறைகள் எடுக்கப்பட்டன.

### தொலைத்தொடர்பூட்டல், கணனி மற்றும் தகவல் பணிகள்

**2019இல் தொலைத்தொடர்பூட்டல், கணனி மற்றும் தகவல் பணிகளிலிருந்தான வருவாய்கள் தொடர்ந்தும் விரிவடைந்தன.** தொலைத்தொடர்பூட்டல், கணனி மற்றும் தகவல் பணிகளின் ஏற்றுமதிகளிலிருந்தான மொத்த வருவாய்கள் 2019இல் ஐ.அ.டொலர் 1,054 மில்லியனுக்கு 5.9 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தன. தொலைத்தொடர்பூட்டல் பணிகள் துணைத் துறைகளிலிருந்தான வருவாய்கள் 2018இன் ஐ.அ.டொலர் 147 மில்லியனிலிருந்து ஆண்டு காலப்பகுதியில் ஐ.அ.டொலர் 155 மில்லியனாக அதிகரித்தன. இவ்வளர்ச்சியானது பிரதானமாக அகலக்கற்றைத் தரவுப் பணிகளினால் துணையளிக்கப்பட்டு இணையத்தள அடிப்படையிலமைந்த தொடர்பூட்டல் வசதிகளின் அதிகரித்த பயன்பாட்டிலிருந்து தோற்றம்பெற்றது. விதிக்கப்பட்ட தொலைத்தொடர்புத் தீர்வையினை 2019 திசெம்பர் தொடக்கம் குறைப்பதற்கு அரசாங்கம் வழிமுறைகளை எடுத்தமை தொலைத்தொடர்பூட்டல் துறையில் மேலும் வளர்ச்சியைத் தூண்டுமென எதிர்பார்க்கப்படுகின்றது. தரவுகளினால் தூண்டப்படும் தொலைத்தொடர்பூட்டல்கள் துறையின் வளர்ச்சியானது கணிசமான வேகத்தில் வளர்ச்சியடையுமென்றும் 4ஜி திறன் பேசிகளின் ஊடுருவல் குறிப்பிடத்தக்களவு அதிகரிக்கும் என்றும் எதிர்பார்க்கப்படுகின்றது. தொலைத்தொடர்பூட்டல் தொழிற்துறையின் முக்கிய செயற்பாட்டாளர்களும் தொலைத்தொடர்பூட்டல் உட்கட்டமைப்பினை மேலும் அபிவிருத்தி செய்கின்ற விதத்தில் 5ஜி வலையமைப்பொன்றினைத் தொடங்குவதற்கான சாத்தியப்பாடுகளையும் ஆராய்கின்றனர். இது 4ஜி நீண்ட கால பரிணாம வலையமைப்புகளினால் வசதிப்படுத்துவதை விட பத்து மடங்கிற்கும் அதிகமான வேகத்தில் தரவு மாற்றல் வேகத்தினை வசதிப்படுத்துமென எதிர்பார்க்கப்படுகின்றது.

**தொலைத்தொடர்பூட்டல், கணனி மற்றும் தகவல் பணிகள் துணைத் துறையின் மிகை அதன் வளர்ச்சி உத்வேகத்தினை 2019இல் தொடர்ந்தது.** அதற்கமைய, கணனி மற்றும் தகவல் பணிகளுக்கான உட்பாய்ச்சல்கள், 2018இன் ஐ.அ.டொலர் 848 மில்லியனிலிருந்து 2019இல் ஐ.அ.டொலர் 899 மில்லியனுக்கு அதிகரித்தன. முன்னெடுக்கப்பட்ட வியாபாரச் செயன்முறையினை வெளியிலிருந்து பெற்றுக்கொள்ளல் மற்றும் அறிவுசார் செயன்முறையினை வெளியிலிருந்து பெற்றுக்கொள்ளல் என்பனவற்றின் தொடர்ச்சியான விரிவாக்கமானது இத்துறையின் வளர்ச்சிக்குப் பங்களிப்புச்செய்தன. உலகளாவிய வெளியிலிருந்து சேவைபெற்றுக்கொள்ளல் தொழிற்துறைக்கான தொழிற்துறைசார்ந்த அமைப்பும் தொழில்சார் நிறுவனமுமான ஐக்கிய இராச்சியத்தின் உலகளாவிய வெளியிலிருந்து சேவைப்பெற்றுக்கொள்ளல் அமைப்பினால் 2019 ஆம் ஆண்டுக்காக இலங்கைக்கு டெலிவரி டெஸ்ரினேஷன் என்ற விருது வழங்கப்பட்டது. இலங்கையில் தகவல் தொழில்நுட்பத்தினை அடிப்படையாகக் கொண்ட அறிவு மற்றும் தகவல் தொழிற்துறைக்கான தேசிய சம்மேளனமான இலங்கை மென்பொருள் மற்றும் பணிகள் கம்பனிகளின் அமைப்பானது துறையுடன் தொடர்புடைய பல எண்ணிக்கையிலான நிகழ்வுகளை ஏற்பாடுசெய்வதனூடாக துறையின் வர்த்தக வசதிப்படுத்தல், கல்வி மற்றும் தொழில்நிலை அதிகரிப்பு அதேபோன்று ஆராய்ச்சி, புத்தாக்கம் என்பனவற்றில் அதன் முயற்சிகளை தொடர்ந்தும் முன்னெடுத்த அதேவேளை, ஆர்வலர் கூட்டிணைப்புடன் வளர்ச்சி மற்றும் புத்தாக்கம் பற்றிய முக்கிய விடயப்பரப்புக்களை ஊக்குவித்தது.

### 5.4.2 முதலாந்தர வருமானம்

முதலாந்தர வருமானக் கணக்கின் பற்றாக்குறை 2019இல் மிதமானளவு விரிவடைந்தது. முதலாந்தர வருமானக் கணக்கின் பற்றாக்குறையானது வெளிநாட்டு முதலீட்டுத் தொழில்முயற்சிகள் பங்கிலாபங்களையும் மீள்முதலிடப்பட்ட வருவாய்களையும் அதிகளவில் சொந்த நாட்டிற்கு அனுப்புதல் என்பன மூலம் 2018இன் ஐ.அ.டொலர் 2,385 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2019இல் ஐ.அ.டொலர் 2,426 மில்லியனுக்கு அதிகரித்தது. உயர்வான பங்கிலாபக் கொடுப்பனவுகளை இலாபகரமான வெளிநாட்டு நேரடி முதலீட்டுத் தொழில்முயற்சிகள் தெரிவுசெய்தமை மூலம் பங்கிலாபக் கொடுப்பனவுகள் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2019இல் அதிகரித்தன. சில பாரிய வெளிநாட்டு நேரடி முதலீட்டுத் தொழில்முயற்சிகளினால் குறிப்பாக பகிரங்கமாகப் பட்டியலிடப்பட்ட கம்பனிகளினால் அறிக்கையிடப்பட்ட ஒப்பீட்டுளவில் உயர்வான இலாப அடைவுகளின் மூலம் 2019இல் மீள்முதலிடப்பட்ட வருவாய்களும் அதிகரித்தன. சொத்துப் பட்டியல் முதலீடு மீதான வட்டிக் கொடுப்பனவுகளில் மிதமான அதிகரிப்பொன்று அவதானிக்கப்பட்டமைக்கு நாட்டுக்கான பன்னாட்டு முறிகளின் வெளிநின்ற இருப்புகள் மீதான கூப்பன் கொடுப்பனவுகளின் அதிகரிப்பு முக்கிய காரணமாக அமைந்த அதேவேளையில் ஆண்டு காலப்பகுதியில் திறைசேரி முறிகளில் வெளிநின்ற வெளிநாட்டு முதலீடுகளில் குறிப்பிடத்தக்க குறைப்பொன்றின் மூலம் திறைசேரி முறிகளின் கூப்பன் கொடுப்பனவுகள்

குறிப்பிடத்தக்களவு குறைவடைந்தன. 2019இன் இறுதியளவில் வைப்புக்களை ஏற்கின்ற கூட்டுத்தாபனங்களினால் வழங்கப்பட்ட அனைத்து வெளிநின்ற பன்னாட்டு முறிகளினதும் முதிர்ச்சியின் மூலம் வைப்புக்களை ஏற்கின்ற கூட்டுத்தாபனங்கள் மூலமான கூப்பன் கொடுப்பனவுகளில் குறிப்பிடத்தக்க குறைவொன்று காணப்பட்டது. முதலாந்தர வருமானக் கணக்கின் ஏனைய முதலீடுகளின் வட்டிக் கொடுப்பனவுகளின் கீழ் பதிவுசெய்யப்படுகின்ற அரசாங்க வெளிநாட்டுக் கடன்கள் மீதான வட்டிக் கொடுப்பனவுகள் சிறிதளவு அதிகரிப்பொன்றினைப் பதிவுசெய்த அதேவேளை வைப்புக்களை ஏற்கின்ற கூட்டுத்தாபனங்கள் மூலமான வெளிநாட்டு கடன்கள் மீதான வட்டிக் கொடுப்பனவுகள் ஆண்டு காலப்பகுதியில் சிறிதளவு வீழ்ச்சியொன்றினைப் பதிவுசெய்தன. அதேவேளை, வைப்புக்களை ஏற்கும் நிறுவனங்களின் வட்டி வருமானத்தின் அதிகரிப்பினை முக்கிய காரணமாக கொண்டு முதலாந்தர வருமானக் கணக்கிற்கான உட்பாய்ச்சல்கள், 2018இல் பதிவாகிய ஐ.அ.டொலர் 249 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2019இல் ஐ.அ.டொலர் 252 மில்லியனாகக் காணப்பட்டன.

### 5.4.3 இராண்டாந்தர வருமானம்

தொழிலாளர் பணவனுப்பல்கள் 2019இல் தொடர்ந்தும் மிதமடைந்தன. இராண்டாந்தர வருமானக் கணக்கின் பெரும்பாலான உட்பாய்சல்களுக்கு வகைகூறுகின்ற தொழிலாளர் பணவனுப்பல்கள், 2018இல் 2.1 சதவீத வீழ்ச்சியின் பின்னர் 2019இல் ஐ.அ.டொலர் 6,717 மில்லியனுக்கு 4.3 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தன. பன்னாட்டுப் பெற்றோலிய விலைகளில் தளம்பல்களுக்கு மத்தியில் அனேகமான தொழிலாளர் பணவனுப்பல்கள் தோற்றம்பெறுகின்ற மத்திய கிழக்கு பொருளாதாரங்களில் புவிசார்அரசியல் அபிவிருத்திகளினால் தொழிலாளர் பணவனுப்பல்கள் பாதிக்கப்பட்டன. மேலும், இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் பிரகாரம் வெளிநாட்டுத் தொழிலுக்கான ஒட்டுமொத்தத் தொழிலாளர் புலம்பெயர்வானது 2019இலும் தொடர்ந்தும் அதன் வீழ்ச்சிப் போக்கினைக் காண்பித்தது. வெளிநாட்டுத் தொழிலுக்கான புறப்படுகைகளின் வீழ்ச்சிக்கு உள்நாட்டுத் தொழிலாளர் சந்தையில் அதிகரித்த வாய்ப்புகள் மற்றும் தேர்ச்சியற்ற பெண் தொழிலாளர்களின் புலம்பெயர்வுகளை ஊக்கமிழக்கச் செய்வதற்கான அரசாங்கத்தின் தொடர்ச்சியான வழிமுறைகள் என்பனவும் பிரதான காரணிகளாக அமைந்திருக்கக் கூடும். விளைவாக, இரண்டாந்தர வருமானக் கணக்கிற்கான உட்பாய்ச்சல்கள் 2018இன் ஐ.அ.டொலர் 7,023 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2019இல் ஐ.அ.டொலர் 6,726 மில்லியனுக்கு வீழ்ச்சியடைந்தன. அதேவேளை, இலங்கையில் வதிகின்ற இலங்கையர் அல்லாதவர்கள் மூலமான வெளிநாட்டுக்கான தனிப்பட்ட மாற்றல்கள் மற்றும் தொடர்புபட்ட கொடுப்பனவுகள் 2019இல் அதிகரிப்பொன்றினைப் பதிவுசெய்தன. இவ்வபிவிருத்திகளுடன் இரண்டாந்தர வருமான கணக்கிற்கான தேறிய உட்பாய்ச்சல்கள் 2018இல் பதிவாகிய ஐ.அ.டொலர் 6,163 மில்லியன் கொண்ட தேறிய உட்பாய்ச்சலென்றுடன் ஒப்பிடுகையில் 2019இல் ஐ.அ.டொலர் 5,766 மில்லியனுக்கு வீழ்ச்சியடைந்தன.

## 5.5 நடைமுறைக் கணக்கு மீதி

வெளிநாட்டு நடைமுறைக் கணக்குப் பற்றாக்குறையானது 2018இல் எடுக்கப்பட்ட கொள்கை வழிமுறைகளுக்கு பதிலிறுத்தி 2019இல் குறிப்பிடத்தக்களவு குறுக்கமடைந்தது. முதலாந்தர வருமானக் கணக்கின் பற்றாக்குறை சிறிதளவு விரிவடைதல் மற்றும் பணிகள் அதேபோன்று இரண்டாந்தர வருமானக் கணக்குகளின் மிகைகள் மிதமடைதல் என்பனவற்றிற்கு மத்தியில் நடைமுறைக் கணக்குப் பற்றாக்குறையானது பிரதானமாக வர்த்தகப் பற்றாக்குறையின் குறிப்பிடத்தக்களவு சுருக்கத்தின் விளைவாக வீழ்ச்சியடைந்தது. ஆண்டு காலப்பகுதியில் இறக்குமதிச் செலவினத்தில் துரிதமான சுருக்கமொன்றின் மூலம் தூண்டப்பட்டு வர்த்தகப் பற்றாக்குறை குறிப்பிடத்தக்களவு சுருக்கமடைந்த அதேவேளை, வணிகப் பொருட்கள் ஏற்றுமதிகள் சிறிதளவு வளர்ச்சியொன்றினைப் பதிவுசெய்தன. உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல்களின் விளைவாக சுற்றுலா வருவாய்கள் குறைவடைந்தமையின் முக்கிய காரணமாக பணிகள் கணக்கின் மிகையானது மிதமடைந்தது. வெளிநாட்டு நேரடி முதலீட்டுத் தொழில்முயற்சிகளின் பங்கிலாபக் கொடுப்பனவுகள் மற்றும் மீள்முதலிடப்பட்ட வருவாய்கள் என்பன மூலம் ஆண்டு காலப்பகுதியில் முதலாந்தர வருமானக் கணக்கின் பற்றாக்குறை மிதமானளவுவிரிவடைந்தது. ஆண்டு காலப்பகுதியில் தொழிலாளர் பணவனுப்பல்கள் சுருக்கமடைந்து இரண்டாந்தர வருமானக் கணக்கின் மிகைகளை மிதப்படுத்தின. இதன் விளைவாக நடைமுறைக் கணக்கு பற்றாக்குறையானது 2018இன் ஐ.அ.டொலர் 2,799 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2019இல் ஐ.அ.டொலர் 1,808 மில்லியனுக்கு குறுக்கமடைந்ததுடன் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமொன்றாக நடைமுறைக் கணக்குப் பற்றாக்குறையானது 2018இன் 3.2 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2019இல் 2.2 சதவீதமாக மேம்பட்டது.

## 5.6 மூலதனக் கணக்கு மீதி

**2019இல் மூலதனக் கணக்கிற்கான உட்பாய்ச்சல்கள், சிறிதளவாலேனும் அதிகரித்தன.** அரசாங்கம் மற்றும் தனியார் துறைக்கான மூலதனப் பெறுகைகளின் சிறிய அதிகரிப்பின் காரணமாக தேறிய அடிப்படையில் மூலதனக் கணக்கிற்கான உட்பாய்ச்சல்கள், 2018இன் ஐ.அ.டொலர் 14 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2019இல் ஐ.அ.டொலர் 23 மில்லியனுக்கு அதிகரிப்பொன்றினைப் பதிவுசெய்தன.

## 5.7 நிதியியல் கணக்கு

**நிதியியல் கணக்கிற்கான குறிப்பிடத்தக்க உட்பாய்ச்சல்களின் விளைவாக தேறிய நிகழத்தக்க பொறுப்புகள் மற்றும் சொத்துக்களின் தேறிய கையேற்பு இரண்டும் 2018 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2019இல் அதிகரித்தன.** படுகடன் மீள்கொடுப்பனவுகளுடன் ஒப்பிடுகையில் அரசாங்கத்தின் அதிகரித்த வெளிநாட்டு கடன்பாடுகளினால் தூண்டப்பட்டு நிதியியல் கணக்கிற்கான உயர்வான தேறிய உட்பாய்ச்சல்கள் 2019இல் தேறிய நிகழத்தக்கப் பொறுப்புகளில் அதிகரிப்பொன்றினை விளைவித்தன. அதற்கமைய, தேறிய நிகழத்தக்க பொறுப்புகள், 2018இன் ஐ.அ.டொலர் 2,816 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2019இல் ஐ.அ.டொலர் 2,947 மில்லியனாகக் காணப்பட்டன. தேறிய சொத்துக்கள் கையேற்பும் 2018இன் சொத்துக்களின் தேறிய வீழ்ச்சியொன்றுடன் ஒப்பிடுகையில் 2019இல் ஐ.அ.டொலர் 514 மில்லியனால் அதிகரித்தமைக்கு மொத்த அலுவல்சார் ஒதுக்குகளின் அதிகரிப்பு முக்கிய காரணமாக அமைந்தது. 2019 மாச்சு மற்றும் யூன் மாதங்களில் அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட ஐ.அ.டொலர் 4.4 பில்லியன் கொண்ட இரு நாட்டிற்கான பன்னாட்டு முறிகளிலிருந்தான பெறுகைகள் அத்துடன் பன்னாட்டு நாணய நிதியத்தின் விரிவுபடுத்தப்பட்ட நிதிய வசதியின் ஆறாவது மற்றும் ஏழாவது தொகுதிகளின் கிடைப்பனவு என்பன 2019இல் நிதியியல் கணக்கிற்கான முக்கிய உட்பாய்ச்சல்களாக அமைந்திருந்தன. இவ்வாண்டானது குறிப்பாக உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல்களின் விளைவுகளினால் பலவீனமான முதலீட்டாளர் எண்ணப்பாங்கு மற்றும் 2019இன் பிந்திய பகுதியில் சனாதிபதி தேர்தல் வரை இட்டுச்சென்ற நிச்சயமற்றதன்மை என்பவற்றினால் தூண்டப்பட்டு வெளிநாட்டு நேரடி முதலீடுகள் வடிவில் பங்குரிமைச் சந்தைகளுக்கான உட்பாய்ச்சல்களின் மிதமடைதலையும், கொழும்புப் பங்குப் பரிவர்த்தனையிலிருந்து வெளிநாட்டு முதலீடுகளின் வெளிப்பாய்ச்சலினையும் கொண்டதாகவிருந்தது. 2019இன் ஏப்பிறல் தொடக்கம் ஓகத்து மாதங்கள் வரையிலும் 2019இன் திசெம்பரிலும் பாரிய தேறிய வெளிப்பாய்ச்சல்களுடன் இணைந்து அவ்வப்போது ரூபாயில் குறித்துரைக்கப்பட்ட அரசாங்கப் பிணையங்கள் சந்தையிலிருந்து வெளிநாட்டு முதலீடுகளின் வெளிப்பாய்ச்சல்களும் காணப்பட்டன. இத்தளம்பல்களுக்கு மாறாக, உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையில் சில காலப்பகுதிகளில் மிதமான தேறிய உட்பாய்ச்சல்களும் அவதானிக்கப்பட்டமை தேறிய அடிப்படையொன்றில் வெளிநாட்டுச் செலாவணியினைக் கொள்வனவு செய்வதற்கு மத்திய வங்கியினை இயலச்செய்தது. அரசாங்கமானது 2019இல் ஐ.அ.டொலர் 1.5 பில்லியன் தொகையுடைய இரு முதிர்ச்சியடைகின்ற நாட்டிற்கான பன்னாட்டு முறிகளை மீள்கொடுப்பனவு செய்தும் அதேபோன்று வெளிநாட்டு நாணய கால நிதியிடல் வசதிகளினதும் இலங்கை அபிவிருத்தி முறிகளினதும் மீள்கொடுப்பனவினையும் கொண்ட

அட்டவணை 5.9 அ

**நிதியியல் கணக்கு**

ஐ.அ.டொ.மில்லியன்


| விடயம் | 2018 (அ) | | 2019 (ஆ) | |
|---|---|---|---|---|
| | நிதியியல் சொத்துக்களின் தேறிய கையகப்படுத்தல் | பொறுப்புக்களின் தேறிய உறப்படல் | நிதியியல் சொத்துக்களின் தேறிய கையகப்படுத்தல் | பொறுப்புக்களின் தேறிய உறப்படல் |
| **நிதியியல் கணக்கு** | **-562** | **2,816** | **514** | **2,947** |
| **நேரடி முதலீடு** | **68** | **1,614** | **77** | **758** |
| பங்கு மூலதனம் மற்றும் முதலீட்டு நிதியப்பங்குகள் | 58 | 463 | 65 | 384 |
| வருவாய்களின் மீள் முதலீடு தவிர்ந்த பங்கு மூலதனம் | 48 | 238 | 52 | 120 |
| நேரடி முதலீட்டு தொழில் முயற்சிகளில் நேரடி முதலீட்டாளர் | 48 | 238 | 52 | 120 |
| வருவாய்களின் மீள் முதலீடு | 10 | 225 | 13 | 264 |
| படுகடன் கருவிகள் | 10 | 1,151 | 13 | 374 |
| நேரடி முதலீட்டு தொழில் முயற்சிகளில் நேரடிமுதலீட்டாளர் | 10 | 1,151 | 13 | 374 |
| **சொத்துப்பட்டியல் முதலீடு** | **-** | **129** | **-** | **2,303** |
| பங்கு மூலதனம் மற்றும் முதலீட்டு நிதியப் பங்குகள் | - | -4 | - | -15 |
| படுகடன் பிணையங்கள் | - | 134 | - | 2,317 |
| வைப்புக்களை ஏற்கும் கூட்டுத்தாபனங்கள் | - | -1,350 | - | -250 |
| நீண்ட காலம் | - | -1,350 | - | -250 |
| பொது அரசாங்கம் | - | 1,484 | - | 2,567 |
| குறுங்காலம் (திறைசேரி உண்டியல்கள்) | - | -96 | - | 55 |
| நீண்டகாலம் | - | 1,580 | - | 2,513 |
| திறைசேரி முறிகள் | - | -894 | - | -388 |
| இலங்கை அபிவிருத்தி முறிகள் | - | -26 | - | 1 |
| நாட்டுக்கான முறிகள் | - | 2,500 | - | 2,900 |
| **நிதியியல் பெறுதிகள்** | - | - | - | - |
| **ஏனைய முதலீடு** | **372** | **1,073** | **100** | **-114** |
| நாணயமும் வைப்புக்களும் | 80 | -632 | -93 | 167 |
| மத்திய வங்கி | - | -1 | - | ... |
| குறுங்காலம் | - | -1 | - | ... |
| வைப்புக்களை ஏற்கும் கூட்டுத்தாபனங்கள் | 80 | -631 | -93 | 168 |
| குறுங்காலம் | -189 | -631 | 6 | 168 |
| நீண்ட காலம் | 268 | - | -99 | - |
| **ஞாபகார்த்த விடயங்கள்** | | | | |
| **வெளிநாட்டு நேரடி முதலீடுகள்** | | | | |
| பங்கு மூலதனம் | | 238 | | 120 |
| வருவாய்களின் மீள் முதலீடு | | 225 | | 264 |
| கம்பனிகளுக்கிடையிலான கடன்கள் | | 1,581 | | 391 |
| கம்பனிகளுக்கிடையிலானகடன்களுக்கான மீள்கொடுப்பனவு | | -430 | | -17 |
| **மொத்த வெளிநாட்டு நேரடி முதலீடு (1)** | | **1,614** | | **758** |
| முதலீட்டுச்சபை கம்பனிகளுக்கான கடன்கள் (2) | | 525 | | 445 |
| **முதலீட்டுச்சபை கம்பனிகளுக்கான கடன்கள் உள்ளடங்கலாக மொத்த வெளிநாட்டு நேரடி முதலீடு (1+2) (இ)** | | **2,139** | | **1,204** |
| **கொழும்பு பங்கு பரிவர்த்தனைக்கான மொத்த தேறிய உட்பாய்ச்சல்கள்** | | **-55** | | **-35** |
| நேரடி முதலீடுகள் | | -51 | | -20 |
| சொத்துப்பட்டியல் முதலீடுகள் | | -4 | | -15 |
| **ரூபாயில் குறித்துரைக்கப்பட்ட அரச பிணையங்கள் (திறைசேரி உண்டியல்கள் மற்றும் முறிகள்) மீதான தேறிய வெளிநாட்டு முதலீடு** | | **-990** | | **-334** |
| வெளிநாட்டு கொள்வனவுகள் | | 706 | | 596 |
| வெளிநாட்டு விற்பனைகள் | | 1,696 | | 930 |

பக்கம் 205 இல் தொடர்கிறது.

(அ) திருத்தப்பட்டது
(ஆ) தற்காலிகமானது
(இ) முதலீட்டு சபையின் மதிப்பீடுகளுடனான வித்தியாசம் விடயப்பரப்பு மற்றும் தொகுப்பு முறைமைகளிலான வேறுபாட்டினாலானது.

*மூலம்:* இலங்கை மத்திய வங்கி

வரைபடம் 5.11
**நிதியியல் கணக்கு**




*மூலம்* : இலங்கை மத்திய வங்கி

பாரிய படுகடன் மீள்கொடுப்பனவு கடப்பாடுகளை பூர்த்திசெய்தது. உயர்வான படுகடன் தீர்ப்பனவின் விளைவொன்றாக தேறிய வெளிப்பாய்ச்சல்களின் மூலம் வங்கித்தொழில் துறை, தனியார் துறை மற்றும் அரசிற்குச் சொந்தமான தொழில் முயற்சிகள் என்பவற்றிற்கான நிதிப் பாய்ச்சல்கள் மிதமடைந்தன. வைப்புக்களை ஏற்கின்ற கூட்டுத்தாபனங்களும் 2019இற்கு முன்னர் வழங்கப்பட்ட பன்னாட்டு முறியொன்றின் மீள்கொடுப்பனவினை நிறைவுசெய்தன. இவ்வபிவிருத்திகள் மூலம் மொத்த அலுவல்சார் ஒதுக்குகள், 2018இன் இறுதியில் காணப்பட்ட ஐ.அ.டொலர் 6.9 பில்லியனிலிருந்து 2019 இறுதியில் ஐ.அ.டொலர் 7.6 பில்லியனுக்கு அதிகரித்த அதேவேளை 2019இன் இறுதியில் சென்மதி நிலுவையின் ஒட்டுமொத்த மீதி ஐ.அ.டொலர் 377 மில்லியன் கொண்ட மிகையொன்றினைப் பதிவுசெய்தது.

## 5.7.1 நேரடி முதலீடு

**முதலீட்டுச் சபையில் பதிவுசெய்த கம்பனிகளின் வெளிநாட்டுக் கடன்பாடுகளை உள்ளடக்குகின்ற வெளிநாட்டு நேரடி முதலீட்டு உட்பாய்ச்சல்கள் 2019இல் குறிப்பிடத்தக்களவு வீழ்ச்சியடைந்தன.** முதலீட்டுச் சபை கம்பனிகளினால் பெறப்பட்ட வெளிநாட்டுக் கடன்கள் உள்ளடங்கலாக மொத்த வெளிநாட்டு நேரடி உட்பாய்ச்சல்கள் 2019இல் ஐ.அ.டொலர் 1,204 மில்லியன் தொகையாக காணப்பட்டன. 2019இல் வெளிநாட்டு நேரடி முதலீட்டு உட்பாய்ச்சல்கள், 2018இன் ஐ.அ.டொலர் 2,139 மில்லியன் உட்பாய்ச்சல்களையும் (அரசாங்கத்தினால் பெற்றுக் கொள்ளப்பட்ட அம்பாந்தோட்டை துறைமுகப் பெறுகைகள் நீங்கலாக ஐ.அ.டொலர் 1,457 மில்லியன்) 2017இன் ஐ.அ.டொலர் 1,910 மில்லியனையும் விடக் குறைவானதாகக் காணப்பட்டன. வெளிநாட்டு நேரடி முதலீட்டு உட்பாய்ச்சல்களின் மிதமடைதலுக்கு உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களின் தாக்கம் மற்றும் அரசியல் ரீதியான அபிவிருத்திகள் என்பவற்றினால் அதிகரித்த நிச்சயமின்மைகளினால் முதலீட்டாளர் எண்ணப்பாங்குகள் பலவீனமடைந்தமை முக்கிய காரணமாக அமைந்திருக்கக்கூடும். 2019ஆம் ஆண்டு காலப்பகுதியில் ஐ.அ.டொலர் 758 மில்லியன் கொண்ட முதலீட்டுச் சபைக் கம்பனிகளுக்கான வெளிநாட்டுக் கடன்கள் நீங்கலாக வெளிநாட்டு நேரடி முதலீட்டு உட்பாய்ச்சல்கள், கம்பனிகளுக்கிடையிலான தேறிய படுகடனின் ஐ.அ.டொலர் 374 மில்லியன், ஐ.அ.டொலர் 264 மில்லியன் கொண்ட மீள்முதலிடப்பட்ட வருவாய்கள் மற்றும் ஐ.அ.டொலர் 120 மில்லியன் பங்குரிமை மூலதனத்தின் தேறிய முதலீடுகள் என்பவற்றை உள்ளடக்கியிருந்தது. ஒப்பீட்டளவில், 2018இல் முதலீட்டுச் சபைக் கம்பனிகள் மூலம் பெற்றுக்கொள்ளப்பட்ட வெளிநாட்டுக் கடன் நீங்கலாக வெளிநாட்டு நேரடி முதலீடுகள் ஐ.அ.டொலர் 1,614 மில்லியனாகக் காணப்பட்டன. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2019இல் பங்குரிமை மூலதனத்திலும் கம்பனிகளுக்கிடையிலான கடன்பாடுகளிலும் குறிப்பிடத்தக்க குறைவொன்று பதிவாகியிருந்தது. எவ்வாறாயினும், ஒரு சில பாரிய பகிரங்கமாகப் பட்டியலிடப்பட்ட வெளிநாட்டு நேரடி முதலீட்டுக் கம்பனிகளிலிருந்து ஆரோக்கியமான மீள்முதலீட்டு வருவாய்கள் மட்டமொன்று காணப்பட்டது. துறைசார்ந்த அடிப்படையில், பெரும்பான்மையான வெளிநாட்டு நேரடி முதலீடுகள் துறைமுக உட்கட்டமைப்பு, ஆதன அபிவிருத்தி மற்றும் சுற்றுலா விடுதிகளுடன் தொடர்புடைய செயற்றிட்டங்களுக்கும் அத்துடன் தொலைத்தொடர்புத் துறைக்கும் கிடைக்கப்பெற்றன. நேரடி முதலீட்டாளரின் உடனடி முதலீட்டு நாட்டின் அடிப்படையில் 2019இல் இந்தியா, சிங்கப்பூர், கனடா, ஹொங்கொங், மற்றும் சீனா ஆகிய நாடுகள் முதல் ஐந்து மூல நாடுகளாகக் விளங்கின. அண்மைய காலத்தில் வெளிநாட்டு நேரடி முதலீட்டு உட்பாய்ச்சல்களில் சில மிதமடைதலுக்கு மத்தியில், அம்பாந்தோட்டை கைத்தொழில் வலயம், கொழும்புத் துறைமுக நகரம், சுற்றுலா விடுதித் துறை மற்றும் கலப்பு அபிவிருத்தித் துறை என்பன வரவிருக்கும் ஆண்டுகளில் குறிப்பிடத்தக்க உட்பாய்ச்சல்களை ஈர்க்குமென எதிர்பார்க்கப்படுகின்றது. இலங்கையில் தகவல் மற்றும் தொடர்பூட்டல் தொழில்நுட்பத் துறை அபிவிருத்தியினை முதன்மை இலக்காகக் கொண்டு தொலைத்தொடர்பூட்டல் துறையும் குறிப்பிடத்தக்க வெளிநாட்டு நேரடி முதலீட்டு உட்பாய்ச்சல்களைப் பெற்றுக்கொள்ளுமென எதிர்பார்க்கப்படுகின்றது. உபாயச் செயற்றிட்ட அபிவிருத்திச் சட்டத்தின் நடைமுறைப்படுத்தலும் அதேபோன்று வரிக் கட்டமைப்பிற்கான அண்மைய திருத்தங்களும் வெளிநாட்டு நேரடி முதலீடுகளைக் கவருவதற்கு ஊக்கமளிக்கும் எனவும் எதிர்பார்க்கப்படுகின்றது. எவ்வாறாயினும், ஒப்பீட்டளவில் வியாபாரம் செய்யுங்கள் சுட்டெண்ணின் குறைவான தரப்படுத்தல், பிராந்திய அயல் நாடுகளுடன் ஒப்பிடுகையில் உயர்வான கூலி வீதங்கள் மற்றும் பயன்பாட்டுச் செலவுகள், உயர்வான காணிக் கையேற்புச் செலவுகள், இறுக்கமான தொழிலாளர் சட்டங்கள் மற்றும் அரசாங்க நடைமுறைகள் போன்ற தொடர்ந்து காணப்படுகின்ற பிரச்சனைகள் நாட்டிற்கு வெளிநாட்டு நேரடி முதலீடுகளைக் கவருவதில் முக்கிய தடைகளாகக் காணப்படுகின்றன.

### 5.7.2 சொத்துப் பட்டியல் முதலீடு

#### பங்குரிமை மூலதனம்

**நேரடி முதலீடு நீங்கலாக கொழும்புப் பங்குப் பரிவர்த்தனையில் வெளிநாட்டுப் பங்குரிமை முதலீடுகளைப் பிரதிபலிக்கின்ற பங்குரிமை மூலதனத்தின் வெளிநாட்டு முதலீடுகள் 2019இல் தேறிய வெளிப்பாய்ச்சலொன்றினைப் பதிவுசெய்தன.** பங்குரிமை மீதான சொத்துப்பட்டியல் முதலீடுகளானவை நேரடி முதலீட்டுக் கொடுக்கல்வாங்கல்கள் மற்றும் இலங்கைத் தொழில் முயற்சியொன்றின் மொத்த பங்குடமையின் 10 சதவீதத்திற்கும் குறைவான உடமை கொண்ட வதிவற்றோர்களினால் மேற்கொள்ளப்பட்ட முதலீடுகள் என்பன தவிர்ந்த கொழும்புப் பங்குப் பரிவர்த்தனையில் வெளிநாட்டு வதிவோரின் முதலீடுகளை உள்ளடக்குகின்றது. பங்குரிமை மூலதன வடிவிலான சொத்துப்பட்டியல் முதலீடானது 2019இல் ஐ.அ.டொலர் 15 மில்லியன் கொண்ட தேறிய வெளிப்பாய்ச்சலொன்றினைப் பதிவுசெய்தது. இது, இரண்டாந்தரச் சந்தையிலிருந்து ஐ.அ.டொலர் 45 மில்லியன் கொண்ட தேறிய வெளிப்பாய்ச்சலொன்றினையும் முதலாந்தரச் சந்தைக்கான ஐ.அ.டொலர் 30 மில்லியன் கொண்ட உட்பாய்ச்சலினையும் உள்ளடக்கியிருந்தது.

#### படுகடன் பிணையங்கள்

**அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட இரு புதிய நாட்டுக்கான பன்னாட்டு முறிகளின் வழங்கல் மூலம் படுகடன் பிணையங்கள் வடிவிலான நிதியியல் உட்பாய்ச்சல்கள் 2019இல் குறிப்பிடத்தக்களவு அதிகரித்தன.** பன்னாட்டு முறிகள் சந்தையில் இலங்கையின் பதின்மூன்றாவது மற்றும் பதின்நான்காவது ஐ.அ.டொலர் அடிப்படை அளவு குறியீட்டு வழங்கல், முறையே 2019 மாச்சு மற்றும் யூன் மாதங்களில் வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டன. ஐந்தாண்டு மற்றும் பத்தாண்டு முதிர்ச்சிகளுடன் கூடிய ஐ.அ.டொலர் 2.4 பில்லியன் கொண்ட பெறுமதிக்கான இரு நாட்டிற்கான பன்னாட்டு முறிகள் 2019 மாச்சில் வழங்கப்பட்ட அதேவேளை ஐ.அ.டொலர் 2 பில்லியன் பெறுமதியுடைய ஐந்தாண்டு மற்றும் பத்தாண்டு முதிர்ச்சிகளுடன் கூடிய இரு நாட்டிற்கான பன்னாட்டு முறிகள் 2019 யூனில் வழங்கப்பட்டன. இலங்கையில் பேரண்டப் பொருளாதாரத் தோற்றப்பாடு மீதான உலகளாவிய முதலீட்டாளர்களின் தொடர்ச்சியான நம்பிக்கையினைப் பிரதிபலித்து பரந்தளவில் முதலீட்டாளர்களிடமிருந்து மிதமிஞ்சிய ஆர்வம் இவ் ஏலங்களில் அவதானிக்கப்பட்டது. 2019 சனவரியில் முதிர்ச்சியடைந்த ஐ.அ.டொலர் 1.0 பில்லியன் 2019 ஏப்பிறலில் முதிர்ச்சியடைந்த ஐ.அ.டொலர் 500 மில்லியன் தொகைக்கான இரு நாட்டிற்கான பன்னாட்டு முறிகளையும் அரசாங்கம் தீர்ப்பனவு செய்தது. ஆண்டு காலப்பகுதியில் ஐ.அ.டொலர் 388 மில்லியன் கொண்ட தேறிய வெளிப்பாய்ச்சலொன்றினைப் பதிவுசெய்து 2019இல் திறைசேரி முறிச் சந்தையிலிருந்து கணிசமான வெளிநாட்டு வெளிப்பாய்ச்சலொன்றும் காணப்பட்டது. அதேவேளை, 2019இல் திறைசேரி உண்டியல் சந்தைக்கு வெளிநாட்டு முதலீட்டின் ஐ.அ.டொலர் 55 மில்லியன் கொண்ட சிறியளவிலான தேறிய உட்பாய்ச்சலொன்றும் காணப்பட்டது. வைப்புக்களை ஏற்கின்ற கூட்டுத்தாபனங்களும் ஆண்டு காலப்பகுதியில் ஐ.அ.டொலர் 250 மில்லியன் தொகையுடைய பன்னாட்டு முறி வழங்கலொன்றின் இறுதிப் பாகத்தினை மீள்கொடுப்பனவு செய்தன.

### 5.7.3 ஏனைய முதலீடு

#### நாணயம் மற்றும் வைப்புகள்

**வைப்புக்களை ஏற்கும் கூட்டுத்தாபனங்கள் தொடர்பில் 2019இல் சொத்துக்கள் வடிவிலான நாணயம் மற்றும் வைப்புக்கள் குறைவொன்றைப் பதிவுசெய்த அதேவேளை, நாணயம் மற்றும் வைப்புப் பொறுப்புகள் அதிகரித்தன.** அதற்கமைய, 2019இல் வைப்புக்களை ஏற்கும் கூட்டுத்தாபனங்களின் சொத்துக்களின் வடிவில் நாணயம் மற்றும் வைப்புகள் ஐ.அ.டொலர் 93 மில்லியனால் குறைவடைந்த அதேவேளை நாணயம் மற்றும் வைப்புப் பொறுப்புகள் ஐ.அ.டொலர் 167 மில்லியனால் அதிகரித்தன. ஆண்டு காலப்பகுதியில் ஒப்பீட்டுரீதியாக மிதமான தேறிய கொடுக்கல்வாங்கல்கள், உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையின் உறுதிப்பாட்டினை ஓரளவுக்குப் பிரதிபலித்தன.

#### கடன்கள்

**நிதியியல் கணக்கிற்கான தேறிய கடன் உட்பாய்ச்சல்கள் 2019இல் வீழ்ச்சியடைந்தன.** 2019 காலப்பகுதியில் தேறிய கடன் உட்பாய்ச்சல்களில் குறைவிற்கு வைப்பு ஏற்கும் கூட்டுத்தாபனங்கள், அரசாங்கம் மற்றும் அரசுக்குச் சொந்தமான தொழில்முயற்சிகள் மற்றும் தனியார் கூட்டுத்தாபனங்களின் தேறிய கடன் மீள்கொடுப்பனவுகள் முக்கிய காரணமாக அமைந்த அதேவேளை மத்திய வங்கிக்கான தேறிய கடன் உட்பாய்ச்சல்கள் அதிகரித்தன. அதற்கமைய, நிதியியல் கணக்கிற்கான வெளிநாட்டுக் கடன்கள் 2018இன் ஐ.அ.டொலர் 1,620 மில்லியன் கொண்ட தேறிய உட்பாய்ச்சலொன்றுக்கு மாறாக ஐ.அ.டொலர் 277 மில்லியன் கொண்ட தேறிய வெளிப்பாய்ச்சலொன்றினைப் பதிவுசெய்தன.

**வெளிநாட்டு கடன்கள் வடிவிலான அரசாங்கத்திற்கான தேறிய உட்பாய்ச்சல்கள் 2019இல் வீழ்ச்சியொன்றினைப் பதிவுசெய்தன.** அதற்கமைய, அரசாங்கத்திற்கான வெளிநாட்டுக் கடன் பாய்ச்சல்கள், 2018இன் ஐ.அ.டொலர் 557 மில்லியன் கொண்ட தேறிய உட்பாய்ச்சலொன்றுடன் ஒப்பிடுகையில் 2019இல் ஐ.அ.டொலர் 97 மில்லியன்

கொண்ட தேறிய வெளிப்பாய்ச்சலொன்றினைப் பதிவுசெய்தன. இத்தேறிய வெளிப்பாய்ச்சலானது ஆண்டு காலப்பகுதியில் ஐ.அ.டொலர் 1,662 மில்லியன் கொண்ட வெளிநாட்டுக் கடன் மீள்கொடுப்பனவுகளினதும் ஐ.அ.டொலர் 1,565 மில்லியன் கொண்ட வெளிநாட்டுக் கடன் உட்பாய்ச்சல்களினதும் பெறுபேறாக அமைந்திருந்தது. அரசாங்கத்திற்கான முக்கிய செயற்றிட்டக் கடன் உட்பாய்ச்சல்கள், கெரவலப்பிட்டியவிலிருந்து கடவத்தைக்கான வெளிச்சுற்று நெடுஞ்சாலைக் கட்டம் III இனை நிர்மாணித்தல் செயற்றிட்டம், மாத்தறையிலிருந்து பெலியத்தை வரை தெற்கு அதிவேகப் பாதையின் பிரிவு 1 இனை நீடிக்கும் நிர்மாணச் செயற்றிட்டம் மற்றும் பெலியத்தையிலிருந்து வெட்டிய வரை தெற்கு அதிவேகப் பாதை பிரிவு 2இனை நீடிக்கும் நிர்மாணச் செயற்றிட்டம் என்பவற்றிற்காக பெற்றுக்கொள்ளப்பட்ட கடன்களை உள்ளடக்கியிருந்தது. 2019இல் வெளிநாட்டு நாணய கால நிதியிடல் வடிவில் உட்பாய்ச்சல்கள் எதுவும் காணப்படாதிருந்த அதேவேளை, அரசாங்கமானது வெளிநாட்டு நாணய கால நிதியிடல் வசதிக் கடப்பாடுகளில் 2018இன் ஐ.அ.டொலர் 613 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2019இல் ஐ.அ.டொலர் 473 மில்லியனை மீளச் செலுத்தியது.

வைப்புக்களை ஏற்கும் கூட்டுத்தாபனங்கள், தனியார் கூட்டுத்தாபனங்கள் மற்றும் அரசுக்குச் சொந்தமான தொழில்முயற்சிகள் மூலம் பெற்றுக்கொள்ளப்பட்ட வெளிநாட்டுக் கடன்கள் 2019இல் தேறிய மீள்கொடுப்பனவொன்றைப் பதிவுசெய்த அதேவேளை, மத்திய வங்கிக்கான கடன் உட்பாய்ச்சல்கள் அதிகரித்தன. உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள், உரிமம்பெற்ற சிறப்பியல்புவாய்ந்த வங்கிகள், உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள் என்பவற்றை உள்ளடக்கிகுகின்ற வைப்புக்களை ஏற்கின்ற கூட்டுத்தாபனங்களுக்கான தேறிய வெளிநாட்டு கடன் உட்பாய்ச்சல்கள், 2018இன் ஐ.அ.டொலர் 697 மில்லியன் கொண்ட தேறிய உட்பாய்ச்சலொன்றுடன் ஒப்பிடுகையில் 2019இல் ஐ.அ.டொலர் 281 மில்லியன் கொண்ட தேறிய மீள்கொடுப்பனவொன்றினைப் பதிவுசெய்தன. மேலும், சென்மதி நிலுவையின் நிதியியல் கணக்கில் ஏனைய துறைகளின் கீழ் வகைப்படுத்தப்பட்ட தனியார் கூட்டுத்தாபனங்களும் அரசுக்குச் சொந்தமான தொழில்முயற்சிகளும் ஐ.அ.டொலர் 226 மில்லியன் கொண்ட வெளிநாட்டுக் கடன்களின் தேறிய மீள்கொடுப்பனவொன்றைப் பதிவுசெய்தன. ஆண்டு காலப்பகுதியில் தனியார் துறையினால் பெற்றுக்கொள்ளப்பட்ட அனைத்துக் கடன் உட்பாய்ச்சல்களுடன் தனியார் கூட்டுத்தாபனங்களுக்கும் அரசுக்குச் சொந்தமான தொழில்முயற்சிகளுக்குமான மொத்த வெளிநாட்டுக் கடன் உட்பாய்ச்சல்கள் ஐ.அ.டொலர் 450

அட்டவணை 5.9 ஆ

நிதியியல் கணக்கு

ஐ.அ.டொ.மில்லியன்

| விடயம் | 2018 (அ) | | 2019 (ஆ) | |
|---|---|---|---|---|
| | நிதியியல் சொத்துக்களின் தேறிய கையகப்படுத்தல் | பொறுப்புக்களின் தேறிய உறப்படல் | நிதியியல் சொத்துக்களின் தேறிய கையகப்படுத்தல் | பொறுப்புக்களின் தேறிய உறப்படல் |
| ஏனைய முதலீடு (பக்கம் 202 இலிருந்து தொடர்கிறது) | | | | |
| கடன்கள் | - | 1,620 | - | -277 |
| மத்திய வங்கி | - | 252 | - | 327 |
| ப.நா.நி. உடனான கொடுகடன் மற்றும் கடன்கள் | - | 252 | - | 327 |
| விரிவாக்கப்பட்ட நிதிய வசதி | - | 252 | - | 327 |
| வைப்புக்களை ஏற்கும் கூட்டுத்தாபனங்கள் | - | 697 | - | -281 |
| குறுங்காலம் | - | 844 | - | -1 |
| நீண்ட காலம் | - | -146 | - | -280 |
| பொது அரசாங்கம் | - | 557 | - | -97 |
| நீண்ட காலம் | - | 557 | - | -97 |
| ஏனைய துறைகள் (இ) | - | 114 | - | -226 |
| நீண்ட காலம் | - | 114 | - | -226 |
| வர்த்தக கொடுகடன் மற்றும் முற்பணங்கள் | 177 | 247 | -4 | -28 |
| வைப்புக்களை ஏற்கும் கூட்டுத்தாபனங்கள் | -10 | - | -8 | - |
| குறுங்காலம் | -10 | - | -8 | - |
| ஏனைய துறைகள் (ஈ) | 186 | 247 | 4 | -28 |
| குறுங்காலம் | 186 | 247 | 4 | -28 |
| ஏனைய பெறத்தக்க/ கொடுபடத்தக்க கணக்குகள் | 116 | -162 | 196 | 24 |
| மத்திய வங்கி | - | -162 | - | 24 |
| குறுங்காலம் (உ) | - | -162 | - | 24 |
| வைப்புக்களை ஏற்கும் கூட்டுத்தாபனங்கள் | 116 | - | 196 | - |
| குறுங்காலம் | 116 | - | 196 | - |
| சிறப்பு எடுப்பனவு உரிமைகள் | - | - | - | - |
| **ஒதுக்குச் சொத்துக்கள்** | **-1,002** | | **337** | |
| நாணய தங்கம் | -103 | | -14 | |
| சிறப்பு எடுப்பனவு உரிமைகள் | -3 | | 6 | |
| பா.நா. நிதியத்தில் ஒதுக்கு நிலைமை | - | | - | |
| ஏனைய ஒதுக்குச் சொத்துக்கள் | -895 | | 346 | |
| நாணயமும் வைப்புக்களும் | -1,011 | | 361 | |
| நாணய அதிகார சபைகள் மீதான கோரல்கள் | 466 | | -174 | |
| ஏனைய நிறுவனங்கள் மீதான கோரல்கள் | -1,477 | | 535 | |
| பிணையங்கள் | 122 | | -19 | |
| படுகடன் பிணையங்கள் | 122 | | -19 | |
| நீண்ட காலம் | 122 | | -19 | |
| ஏனைய கோரல்கள் | -6 | | 3 | |
| **நிதியியல் கணக்கு (தேறிய)** | **-3,378** | | **-2,432** | |
| **ஞாபகார்த்த விடயங்கள்** | | | | |
| **அரசாங்கத்திற்கான நீண்டகால கடன்கள் (தேறிய)** | | **557** | | **-97** |
| உட்பாய்ச்சல்கள் (பகிர்ந்தளிப்புக்கள்) | | 2,328 | | 1,565 |
| செயற்திட்டக்கடன்கள் | | 1,203 | | 1,565 |
| வெளிநாட்டு நாணய கால நிதியிடல் வசதிகள் | | 1,000 | | - |
| நிகழ்ச்சித்திட்ட நிதியிடல் கடன்கள் | | 125 | | - |
| மீள்கொடுப்பனவுகள் | | 1,771 | | 1,662 |

(அ) திருத்தப்பட்டது

(ஆ) தற்காலிகமானது

(இ) அரசுக்குச் சொந்தமான வியாபாரத் தொழில்முயற்சிகள் மற்றும் தனியார்துறை கம்பனிகளை உள்ளடக்குகின்றது.

(ஈ) இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் மற்றும் ஏனைய தனியார் கம்பனிகளினால் பெற்றுக்கொள்ளப்பட்ட வர்த்தக கொடுகடன்களை உள்ளடக்குகின்றது.

(உ) ஆசிய தீர்ப்பனவு ஒன்றிய பொறுப்புக்களின் தேறிய கொடுக்கல்வாங்கல்கள்

*மூலம்* : இலங்கை மத்திய வங்கி

மில்லியன் தொகையாக காணப்பட்டது. 2019 காலப்பகுதியில் ஐ.அ.டொலர் 676 மில்லியன் கொண்ட வெளிநாட்டுக் கடன் மீள்கொடுப்பனவுகளில் தனியார் கூட்டுத்தாபனங்களின் மீள்கொடுப்பனவுகள் ஐ.அ.டொலர் 465 மில்லியனாகவிருந்தன. அதேவேளை, ஆண்டு காலப்பகுதியில் பன்னாட்டு நாணய நிதியத்தின் விரிவுபடுத்தப்பட்ட நிதிய வசதிகளின் கீழ்

அட்டவணை 5.10
**2019 இல் வெளிநாட்டுக் கடன் பெறுகைகளின் மூலம் நிதியிடப்பட்ட பிரதான செயற்றிட்டங்கள்**

| கடன் வழங்குநரும் செயற்றிட்டமும் | பகிர்ந்தளிக்கப்பட்ட தொகை ஐ.அ.டொ. மில்லியன் |
|---|---|
| **அரசாங்க செயற்றிட்டங்கள் - மொத்தம்** | 1,565 |
| இதில், | |
| **சீன ஏற்றுமதி இறக்குமதி வங்கி** | 637 |
| இதில், | |
| கெரவலப்பிட்டியவிலிருந்து கடவத்தை வரையான வெளிச் சுற்றுவட்ட நெடுஞ்சாலை கட்டுமானச் செயற்றிட்டம் - கட்டம் III | 169 |
| மாத்தறையிலிருந்து பெலியத்தை வரையான தெற்கு விரைவுப்பாதையின் விரிவாக்கள் கட்டுமானம் - பகுதி 1 | 164 |
| பெலியத்தையிலிருந்து வற்றிய வரையான தெற்கு விரைவுப்பாதையின் விரிவாக்கள் கட்டுமானம் - பகுதி 2 | 71 |
| அந்தரவேவ திட்டம் ஊடாக மத்தளையிலிருந்து அம்பாந்தோட்டை வரையான தெற்கு விரைவுப்பாதையின் விரிவாக்கள் கட்டுமானம் - பகுதி 4 | 58 |
| அம்பாந்தோட்டை துறைமுக அபிவிருத்திச் செயற்றிட்டம் - கட்டம் III | 46 |
| **ஆசிய அபிவிருத்தி வங்கி** | 280 |
| இதில், | |
| இரண்டாவது ஒருங்கிணைக்கப்பட்ட வீதி முதலீடு நிகழ்ச்சித்திட்டம் - தொகுதி 1 | 53 |
| சிறிய நடுத்தரளவு தொழில்முயற்சிகளுக்கு கடன் வசதி - மேலதிக நிதியிடல் | 38 |
| ஒருங்கிணைக்கப்பட்ட வீதி முதலீட்டு நிகழ்ச்சித்திட்டம் - தொகுதி 4 | 27 |
| கூரை மீதான சூரிய கல வலு உருவாக்கல் செயற்றிட்டம் | 19 |
| **யப்பானிய அரசாங்கம்** | 178 |
| இதில், | |
| களனி ஆற்றிற்கு மேலான புதிய பாலக் கட்டுமானச் செயற்றிட்டம் | 68 |
| கபரணை - வியாங்கொடை கடத்தல் வழி செயற்றிட்டம் | 28 |
| தேசிய வீதி வலையமைப்பின் நிலச்சரிவு அனர்த்த பாதுகாப்பு செயற்றிட்டம் | 20 |
| பெரும் கொழும்பு கடத்தல் மற்றும் வழங்கல் இழப்புக்களை குறைத்தல் செயற்பாடு | 14 |
| கண்டி நகர கழிவுநீர் முகாமைத்துவ செயற்றிட்டம் | 13 |
| கொழும்பில் இலகு ரயில் போக்குவரத்து செயற்றிட்ட அமைப்பை நிறுவுதல் | 11 |
| **பன்னாட்டு அபிவிருத்திச் சபை** | 116 |
| இதில், | |
| நீர் வழங்கல் மற்றும் சுகாதார மேம்பாடு செயற்றிட்டம் | 24 |
| வானிலை மீட்டெழுச்சி மேம்படுத்தல் முகாமைத்துவம் | 15 |
| வேளாண்மை துறை நவீனமயமாக்கல் செயற்றிட்டம் | 11 |
| வானிலை மீட்டெழுச்சி மேம்படுத்தல் செயற்றிடத்திற்கான மேலதிக நிதியிடல் | 10 |
| **மீள்கட்டுமானம் மற்றும் அபிவிருத்திக்கான பன்னாட்டு வங்கி** | 62 |
| இதில், | |
| ஆரம்ப சுகாதார பராமரிப்பு முறைமையின் வலுப்படுத்தல் செயற்றிட்டம் | 25 |
| மெட்றோ கொழும்பு நகர அபிவிருத்தி செயற்றிட்டம் | 25 |
| **கூட்டுறவு மத்திய ரைப்பைசென் போரென்லீன்பேங்க்** | 57 |
| இதில், | |
| கிராமிய பாலங்களின் மீள்கட்டுமானம் | 36 |
| **கல்யொன் விவசாயக் கடன்** | 48 |
| இதில், | |
| பெரும்பாக மாத்தளை நீர் வழங்கல் செயற்றிட்டத்தினை நடைமுறைப்படுத்தல் | 34 |
| களனி வலது கிளை நீர் வழங்கல் செயற்றிட்டம் - கட்டம் II இனை நடைமுறைப்படுத்தல் | 14 |
| **டொயிச் வங்கி ஏஜி** | 42 |
| இதில், | |
| கிராமிய பாலங்களின் மீள்கட்டுமானம் | 38 |
| **சீன அபிவிருத்தி வங்கிக் கூட்டுத்தாபனம்** | 40 |
| இதில், | |
| முன்னுரிமை வீதிகளின் செயற்றிட்டம் 3-கட்டம் II | 20 |
| முன்னுரிமை வீதிகளின் செயற்றிட்டம் 3-கட்டம் I | 14 |

*மூலம்:* நிதி, பொருளாதாரம் மற்றும் கொள்கை அபிவிருத்தி அமைச்சின் வெளிநாட்டு வளங்கள் திணைக்களம்



ஆறாம் மற்றும் ஏழாம் தொகுதிகளின் கிடைப்பனவுடன் மத்திய வங்கிக்கான வெளிநாட்டுக் கடன்கள் ஐ.அ.டொலர் 327 மில்லியன் கொண்ட தேறிய உட்பாய்ச்சலொன்றைப் பதிவுசெய்தன.

## பெறத்தக்க/ கொடுபடத்தக்க வர்த்தகக் கொடுகடன் மற்றும் முற்பணங்கள் மற்றும் ஏனைய கணக்குகள்

**வதிவோர்களுக்குக் கிடைக்கப்பெற்ற வர்த்தகக் கொடுகடன் மற்றும் முற்பணங்கள் அதேபோன்று வதியாதோருக்கு வழங்கப்பட்ட வர்த்தகக் கொடுகடன் மற்றும் முற்பணங்கள் 2019இல் குறைவடைந்தன.** தேறிய நிகழத்தக்க வர்த்தகக் கொடுகடன் பொறுப்புக்களும் முற்பணங்களும் 2018இன் ஐ.அ.டொலர் 247 மில்லியன் கொண்ட அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 2019இல் ஐ.அ.டொலர் 28 மில்லியனால் வீழ்ச்சியடைந்தன. அதேவேளை, தமது வெளிநாட்டு வர்த்தகப் பங்காளர்களுக்கும் வைப்புக்களை ஏற்கும் கூட்டுத்தாபனங்களுக்கும் இலங்கை ஏற்றுமதியாளர்களினால் வழங்கப்படும் வர்த்தகக் கொடுகடன் மற்றும் முற்பணங்களைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற வர்த்தகக் கொடுகடன் மற்றும் முற்பணங்கள் மீதான தேறிய சொத்துக்களின் கையேற்பானது 2018இன் ஐ.அ.டொலர் 177 மில்லியன் கொண்ட அதிகரிப்பொன்றுடன் ஒப்பிடுகையில் 2019இல் ஐ.அ.டொலர் 4 மில்லியனுக்குக் குறைவடைந்தது. மேலும், மத்திய வங்கியினால் முகாமை செய்யப்படுகின்ற ஆசியத் தீர்ப்பனவு ஒன்றியப் பொறுப்புகளைப் பிரதானமாக உள்ளடக்குகின்ற ஏனைய கொடுபடத்தக்க கணக்குகள் ஆண்டு காலப்பகுதியில் ஐ.அ.டொலர் 24 மில்லியன் கொண்ட சிறிய அதிகரிப்பொன்றினை பதிவுசெய்த அதேவேளை, உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளின் ஏனைய பெறத்தக்க கணக்குகள் ஐ.அ.டொலர் 196 மில்லியன் கொண்ட தேறிய அதிகரிப்பொன்றைப் பதிவுசெய்தன.

### 5.7.4 ஒதுக்குச் சொத்துக்கள்

**ஒதுக்குச் சொத்துக்களுடன் தொடர்புடைய கொடுக்கல்வாங்கல்கள் 2019இல் அதிகரிப்பொன்றினைப் பதிவுசெய்தன.** ஒதுக்குச் சொத்துக்கள் கொடுக்கல்வாங்கல்கள் தேறிய அடிப்படையில் 2018இல் பதிவாகிய ஐ.அ.டொலர் 1,002 மில்லியன் கொண்ட வீழ்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2019இல் ஐ.அ.டொலர் 337 மில்லியனினால் அதிகரித்தன. ஆண்டு காலப்பகுதியில் மத்திய வங்கியின் நாணயம் மற்றும் வைப்புக்கள் ஐ.அ.டொலர் 361 மில்லியனால் அதிகரித்த அதேவேளை, வெளிநாட்டுப் படுகடன் பிணையங்களில் மத்திய வங்கியின் முதலீடானது ஐ.அ.டொலர் 19 மில்லியனால் வீழ்ச்சியடைந்தது. மேலும், 2019 ஆண்டு காலப்பகுதியில் மத்திய வங்கியானது ஐ.அ.டொலர் 14 மில்லியன் கொண்ட தேறிய விற்பனைகளின் மூலம் அதன் நாணயத் தங்க உரித்துக்களைக் குறைத்துக்கொண்டது.

## 5.8 திரண்ட நிலுவை

**தேறிய பன்னாட்டு ஒதுக்குகளின் மாற்றத்திற்குச் சமமானதாகக் காணப்படுகின்ற திரண்ட நிலுவையானது 2018இல் பதிவாகிய பற்றாக்குறைக்கு மாறாக 2019இல் மிகையொன்றினைப் பதிவுசெய்தது.** நாட்டிற்கான பன்னாட்டு முறிகளின் பெறுகை நியதிகளில் ஆண்டு காலப்பகுதியில் நிதியியல் கணக்கிற்கான கணிசமான உட்பாய்ச்சல்கள் தேறிய பன்னாட்டு ஒதுக்குகளில் 2018இன் இறுதியிலிருந்த ஐ.அ.டொலர் 5,495 மில்லியனிலிருந்து 2019இன் இறுதியில் ஐ.அ.டொலர் 5,871 மில்லியனுக்கு அதிகரிப்பொன்றினைத் தோற்றுவித்தன. இதன் விளைவாக, திரண்ட நிலுவையானது 2018இல் பதிவாகிய ஐ.அ.டொலர் 1,103 மில்லியன் கொண்ட பற்றாக்குறையுடன் ஒப்பிடுகையில் 2019இல் ஐ.அ.டொலர் 377 மில்லியன் மிகையொன்றினைப் பதிவுசெய்தது.

## 5.9 பன்னாட்டு முதலீட்டு நிலைமை

**பன்னாட்டு முதலீட்டு நிலைமை நியதிகளில் இலங்கையின் வெளிநாட்டு பொறுப்பு நிலைமையும் அதேபோன்று சொத்து நிலைமையும் 2018 இறுதியிலிருந்து 2019 இறுதியில் அதிகரித்தன.** பன்னாட்டு முதலீட்டு நிலைமையானது உலகின் ஏனைய நாடுகளுடன் நாட்டின் வெளிநாட்டுச் சொத்துக்களினதும் பொறுப்புக்களினதும் கையிருப்பு நிலைமையின் பெறுமதியினையும் உள்ளடக்கத்தினையும் பதிவுசெய்கின்றது. வெளிநாட்டுச் சொத்துக்களின் இருப்பு நிலைமையானது 2018 இறுதியிலிருந்த ஐ.அ.டொலர் 12,098 மில்லியனிலிருந்து 2019 இறுதியில் ஐ.அ.டொலர் 12,985 மில்லியனுக்கு சிறிதளவால் அதிகரித்தமைக்கு மொத்த அலுவல்சார் ஒதுக்குகளின் அதிகரிப்பு பிரதான காரணமாக அமைந்தது. மொத்த அலுவல்சார் ஒதுக்குகள் 2018இன் இறுதியில் காணப்பட்ட ஐ.அ.டொலர் 6.9 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 2019இன் இறுதியில் ஐ.அ.டொலர் 7.6 பில்லியனாகக் காணப்பட்டன. இலங்கைக் கம்பனிகளினால் வெளிநாடுகளில் மேற்கொள்ளப்பட்ட திரண்ட நேரடி முதலீடுகளைப் பிரதிபலிக்கின்ற நேரடி முதலீடுகளின் சொத்து நிலைமையும் ஆண்டு காலப்பகுதியில் அதிகரித்தது. வைப்புக்களை ஏற்கும் கூட்டுத்தாபனங்களின் நாணயம் மற்றும் வைப்புப் பொறுப்புகள் அத்துடன் ஏனைய கொடுபடத்தக்க கணக்குகளில் மிதமான அதிகரிப்பொன்று காணப்பட்ட அதேவேளை, வைப்புக்களை ஏற்கும் கூட்டுத்தாபனங்களினால் வழங்கப்பட்ட வர்த்தகக் கொடுகடன்கள் மற்றும் முற்பண நியதிகளில் மிதமான வீழ்ச்சியொன்று பதிவாகியிருந்தது. இலங்கையின் மொத்த வெளிநாட்டுப் பொறுப்பு நிலைமையும் 2018இன் இறுதியிலிருந்த ஐ.அ.டொலர் 61,390 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2019இன் இறுதியளவில் ஐ.அ.டொலர் 65,252 மில்லியனுக்கு ஏறத்தாழ ஐ.அ.டொலர் 3,862 மில்லியனால் கணிசமாக அதிகரித்தது.

அட்டவணை 5.11
### பன்னாட்டு முதலீட்டு நிலைமை

ஐ.அ.டொ.மில்லியன்
(கால முடிவிலான நிலைமை)

| வகை | 2018 (அ) | | 2019 (ஆ) | |
|---|---|---|---|---|
| | சொத்துக்கள் | பொறுப்புக்கள் | சொத்துக்கள் | பொறுப்புக்கள் |
| **நேரடி முதலீடு (இ)** | **1,433** | **12,575** | **1,497** | **13,058** |
| பங்கு மூலதனம் மற்றும் முதலீட்டு நிதியப் பங்குகள் | 1,414 | 8,166 | 1,466 | 8,280 |
| படுகடன் கருவிகள் | 19 | 4,410 | 31 | 4,778 |
| **சொத்துப்பட்டியல் முதலீடுகள்** | … | **13,617** | … | **16,998** |
| பங்கு மூலதனம் மற்றும் முதலீட்டு நிதியப் பங்குகள் | | 812 | | 1,056 |
| ஏனைய துறைகள் | | 812 | | 1,056 |
| படுகடன் பிணையங்கள் (ஈ) | … | 12,805 | … | 15,942 |
| வைப்புக்களை ஏற்கும் கூட்டுத்தாபனங்கள் | … | 249 | … | - |
| நீண்ட காலம் | … | 249 | … | - |
| பொது அரசாங்கம் | | 12,385 | | 15,768 |
| குறுங்காலம் | | 60 | | 119 |
| நீண்ட காலம் | | 12,326 | | 15,649 |
| ஏனைய துறைகள் | | 171 | | 174 |
| நீண்ட காலம் | | 171 | | 174 |
| **நிதியியல் பெறுதிகள்** | - | - | - | - |
| **ஏனைய முதலீடு** | **3,746** | **35,198** | **3,846** | **35,196** |
| **நாணயமும் வைப்புக்களும்** | **864** | **1,581** | **771** | **1,748** |
| மத்திய வங்கி | | … | | … |
| குறுங்காலம் | | … | | … |
| வைப்புக்களை ஏற்கும் கூட்டுத்தாபனங்கள் | 864 | 1,580 | 771 | 1,748 |
| குறுங்காலம் | 357 | 1,580 | 363 | 1,748 |
| நீண்ட காலம் | 507 | | 408 | |
| **கடன்கள்** | | **30,450** | | **30,288** |
| மத்திய வங்கி | | 992 | | 1,315 |
| ப.நா.நி. உடனான கொடுகடன் மற்றும் கடன்கள் | | 992 | | 1,315 |
| வைப்புக்களை ஏற்கும் கூட்டுத்தாபனங்கள் | | 5,530 | | 5,249 |
| குறுங்காலம் | | 3,772 | | 3,771 |
| நீண்ட காலம் | | 1,758 | | 1,478 |
| பொது அரசாங்கம் | | 19,626 | | 19,609 |
| நீண்ட காலம் | | 19,626 | | 19,609 |
| ஏனைய துறைகள் (உ) | | 4,302 | | 4,116 |
| நீண்ட காலம் | | 4,302 | | 4,116 |
| **வர்த்தக கொடுகடன்கள் மற்றும் முற்பணங்கள்** | **1,182** | **2,184** | **1,178** | **2,156** |
| வைப்புக்களை ஏற்கும் கூட்டுத்தாபனங்கள் | 100 | | 92 | |
| குறுங்காலம் | 100 | | 92 | |
| ஏனைய துறைகள் (ஊ) | 1,082 | 2,184 | 1,086 | 2,156 |
| குறுங்காலம் | 1,082 | 2,184 | 1,086 | 2,156 |
| **ஏனைய பெறத்தக்க/ கொடுபடத்தக்க கணக்குகள்** | **1,700** | **432** | **1,896** | **456** |
| மத்திய வங்கி (எ) | | 432 | | 456 |
| குறுங்காலம் | | 432 | | 456 |
| வைப்புக்களை ஏற்கும் கூட்டுத்தாபனங்கள் | 1,700 | | 1,896 | |
| குறுங்காலம் | 1,700 | | 1,896 | |
| **சிறப்பு எடுப்பனவு உரிமைகள்** | | **550** | | **547** |
| **ஒதுக்குச் சொத்துக்கள்** | **6,919** | | **7,642** | |
| நாணய தங்கம் | 819 | | 955 | |
| சிறப்பு எடுப்பனவு உரிமைகள் | 1 | | 7 | |
| ப.நா.நி. இல் ஒதுக்கு நிலைமை | 67 | | 66 | |
| ஏனைய ஒதுக்குச் சொத்துக்கள் | 6,032 | | 6,614 | |
| நாணயமும் வைப்புக்களும் | 2,026 | | 2,387 | |
| நாணய அதிகார சபைகள் மீதான கோரல்கள் | 2,126 | | 1,952 | |
| ஏனைய நிறுவனங்கள் மீதான கோரல்கள் | -100 | | 435 | |
| பிணையங்கள் | 4,006 | | 4,227 | |
| படுகடன் பிணையங்கள் | 4,006 | | 4,227 | |
| **மொத்த சொத்துக்கள்/பொறுப்புக்கள்** | **12,098** | **61,390** | **12,985** | **65,252** |
| **தேறிய பன்னாட்டு முதலீட்டு நிலைமை** | | **-49,292** | | **-52,266** |
| **ஞாபகார்த்த விடயங்கள்** | | | | |
| பமுநி-முதிர்ச்சி அடிப்படையிலான பகுப்பாய்வு | 12,098 | 61,390 | 12,985 | 65,252 |
| குறுங்காலம் | 6,151 | 8,841 | 6,846 | 9,306 |
| நீண்ட காலம் | 5,947 | 52,548 | 6,139 | 55,946 |

(அ) திருத்தப்பட்டது
*மூலம்* : இலங்கை மத்திய வங்கி
(ஆ) தற்காலிகமானது
(இ) முதலீட்டு சபை, கொழும்புப் பங்கு பரிவர்த்தனை மற்றும் ஏனைய தனியார் கம்பனிகளின் நேரடி முதலீட்டு நிலைமைகளினை உள்ளடக்குகின்றது.
(ஈ) உள்நாட்டு நாணய வழங்கல்கள் புத்தகப் பெறுமதியை அடிப்படையாகக் கொண்ட அதேவேளை வெளிநாட்டு நாணய படுகடன் வழங்கல்கள் சந்தைப் பெறுமதியை அடிப்படையாகக் கொண்டுள்ளன.
(உ) அரசிற்கு சொந்தமான வியாபார தொழில் முயற்சிகளால் பெறப்பட்ட செயற்திட்ட கடன்களின் வெளிநின்ற நிலைகளை உள்ளடக்குகின்றது.
(ஊ) இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் மற்றும் தனியார் துறை கம்பனிகள் என்பவற்றின் வெளிநின்ற வர்த்தக கொடுகடன் நிலைமையை உள்ளடக்குகின்றது.
(எ) மத்திய வங்கியினால் முகாமைத்துவம் செய்யப்படும் ஆசிய தீர்ப்பனவு ஒன்றிய பொறுப்புக்களின் வெளிநின்ற நிலைமை

5

இவ்வதிகரிப்புக்கு நாட்டிற்கான பன்னாட்டு முறிகளின் வெளிநின்ற பொறுப்புகளில் தேறிய அதிகரிப்பின் காரணமாக அரசாங்கத்தின் வெளிநின்ற வெளிநாட்டுப் பொறுப்புக்களின் அதிகரிப்பு, மத்திய வங்கியின் வெளிநின்ற பொறுப்பு நிலைமையின் அதிகரிப்பு அத்துடன் வங்கித்தொழில் துறையின் வெளிநின்ற நாணய மற்றும் வைப்பு நிலைமையில் மிதமான அதிகரிப்பு என்பன முக்கிய காரணங்களாக அமைந்தன. எவ்வாறாயினும், தனியார் கூட்டுத்தாபனங்கள் மற்றும் அரசுக்குச் சொந்தமான தொழில்முயற்சிகள் மூலம் வெளிநின்ற வெளிநாட்டுக் கடன்கள் பொறுப்பு நிலைமையில் வீழ்ச்சியொன்று காணப்பட்டது. அதற்கமைய, வதியாதோர்களுடனான இலங்கையின் மொத்தச் சொத்து மற்றும் பொறுப்பு நிலைமைகள் என்பவற்றிற்கிடையிலான வேறுபாடாக காணப்படுகின்ற இலங்கையின் தேறிய பன்னாட்டு முதலீட்டு நிலைமையானது 2018இன் இறுதியில் ஐ.அ.டொலர் 49,292 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2019இன் இறுதியில் ஐ.அ.டொலர் 52,266 மில்லியன் கொண்ட உயர்வான தேறிய பொறுப்பு நிலைமையாகப் பதிவாகியது.

### 5.9.1 நேரடி முதலீட்டு நிலைமை

**நேரடி முதலீட்டு சொத்து நிலைமையும் பொறுப்பு நிலைமையும் 2019இல் அதிகரித்தன.** ஆண்டு காலப்பகுதியில் பதிவாகிய நேரடி முதலீட்டு உட்பாய்ச்சல்கள் மூலம் நேரடி முதலீட்டுப் பொறுப்பு நிலைமையானது 2018இன் இறுதியிலிருந்த ஐ.அ.டொலர் 12,575 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2019இன் இறுதியில் ஐ.அ.டொலர் 13,058 மில்லியனுக்கு அதிகரித்தது. தேறிய சாதகமான வெளிநாட்டு நேரடி முதலீட்டுப் பாய்ச்சலொன்றுக்கு மத்தியில், குறைவான சந்தை விலைகளின் விளைவொன்றாக கொழும்புப் பங்குப் பரிவத்தனையில் பட்டியலிடப்பட்ட அனேகமான வெளிநாட்டு நேரடி முதலீட்டுக் கம்பனிகள் ஆண்டு காலப்பகுதியில் குறிப்பிடத்தக்க விலைமதிப்பீட்டு இழப்புகளை பதிவுசெய்தன. எனினும், சில பகிரங்கமாகப் பட்டியலிடப்பட்ட கம்பனிகளும் தனியார் முதலீட்டுச் சபைக் கம்பனிகளும் மீளமுதலிடப்பட்ட வருவாய்களில் குறிப்பிடத்தக்களவு அதிகரிப்பொன்றைப் பதிவுசெய்தமை சந்தை விலைமதிப்பீட்டு இழப்புகளில் மிதமான தாக்கமொன்றிற்கு வழிவகுத்தது. உடனடி முதலீட்டு நாடுகளின் அடிப்படையில் சீனா, இந்தியா, நெதர்லாந்து, சிங்கப்பூர் மற்றும் மலேசியா என்பன 2019இன் இறுதியில் அதிஉயர்வான நேரடி முதலீட்டுப் பொறுப்பு இருப்பு நிலைமைகளுடன் கூடிய முதல் ஐந்து நாடுகளாக விளங்கின. அதேவேளை, வதிகின்ற இலங்கையர்களின் வெளிநாட்டிலான நேரடி முதலீடானது முன்னைய ஆண்டிலிருந்து 4.5 சதவீத அதிகரிப்பொன்றுடன் 2019இன் இறுதியளவில் ஐ.அ.டொலர் 1,497 மில்லியன் கொண்ட வெளிநின்ற சொத்து நிலைமையொன்றினைப் பதிவுசெய்தது.

### 5.9.2 சொத்துப்பட்டியல் முதலீட்டு நிலைமை

**பன்னாட்டு முதலீட்டு நிலைமையில் சொத்துப்பட்டியல் முதலீட்டுப் பொறுப்பு நிலைமையானது 2019இன் இறுதியளவில் குறிப்பிடத்தக்களவு அதிகரித்தது.** சொத்துப்பட்டியல் முதலீட்டுப் பொறுப்பு நிலைமையானது 2018இன் இறுதியிலிருந்த ஐ.அ.டொலர் 13,617 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2019இன் இறுதியில் ஐ.அ.டொலர் 16,998 மில்லியனுக்கு கணிசமானளவு அதிகரித்தது. இரு நாட்டிற்கான பன்னாட்டு முறிகளின் முதிர்ச்சி மற்றும் வைப்புக்களை ஏற்கும் கூட்டுத்தாபனங்களினால் வழங்கப்பட்ட பன்னாட்டு முறியொன்றின் முதிர்ச்சி அத்துடன் திறைசேரி முறி சந்தையிலிருந்து வெளிநாட்டு முதலீடுகளின் வெளிப்பாய்ச்சல் என்பவற்றுக்கு மத்தியில் ஆண்டு காலப்பகுதியில் ஐ.அ.டொலர் 4.4 பில்லியன் தொகையுடைய இரு நாட்டிற்கான பன்னாட்டு முறிகள் வழங்கலின் விளைவொன்றாக வெளிநின்ற படுகடன் பிணையங்கள் நிலைமையானது அதிகரித்தது. வதியாதோர் வைத்திருந்த திறைசேரி உண்டியல்களினதும் திறைசேரி முறிகளினதும் வெளிநின்ற நிலைமை, 2019இன் இறுதியில் ஐ.அ.டொலர் 525 மில்லியனாகவிருந்தது. நேரடி முதலீடுகள் அல்லாத கொழும்புப் பங்குப்பரிவர்த்தனை கம்பனிகளில் வெளிநாட்டு முதலீட்டாளர்களின் முதலீடுகளின் வெளிநின்ற பங்குரிமை மூலதனப் பொறுப்புகளுக்கு வகைகூறுகின்ற சொத்துப்பட்டியல் மூலதனப் பங்குரிமை நிலைமையானது பிரதானமாக சனாதிபதித் தேர்தலின் பின்னர் 2019இன் இறுதியினை நோக்கி கொழும்புப் பங்குப் பரிவர்த்தனையிலுள்ள சில கம்பனிகளின் சந்தை விலைகளில் துரிதமான மீட்சியொன்றின் மூலம் 2018இன் இறுதியில் ஐ.அ.டொலர் 812 மில்லியனிலிருந்து 2019இன் இறுதியளவில் ஐ.அ.டொலர் 1,056 மில்லியனுக்கு அதிகரித்தது. அதேவேளை, வைப்புக்களை ஏற்கின்ற கூட்டுத்தாபனங்களின் வெளிநின்ற படுகடன் பிணையங்கள் பொறுப்பு நிலைமையானது தேசிய சேமிப்பு வங்கியினால் வழங்கப்பட்ட ஐ.அ.டொலர் 250 மில்லியன் தொகையுடைய எஞ்சியுள்ள பன்னாட்டு முறியின் முதிர்ச்சியுடன் ஆண்டு காலப்பகுதியில் முழுமையாகத் தீர்ப்பனவு செய்யப்பட்டது.

### 5.9.3 ஏனைய முதலீட்டு நிலைமை

#### நாணயம் மற்றும் வைப்புகள்

**நாணயம் மற்றும் வைப்புச் சொத்து நிலைமையானது 2019இன் இறுதியளவில் வீழ்ச்சியடைந்த அதேவேளை, பொறுப்பு நிலைமை அதிகரிப்பொன்றினைப் பதிவுசெய்தது.** நாணய மற்றும் வைப்புப் பொறுப்பு நிலைமையானது 2018இன் இறுதியில் ஐ.அ.டொலர் 1,581 மில்லியனிலிருந்து 2019இன் இறுதியில் ஐ.அ.டொலர் 1,748 மில்லியனுக்கு அதிகரித்தமைக்கு வங்கித்தொழில் துறையில் வதியாதோரின் வைப்புப் பொறுப்புகளின் அதிகரிப்பு முக்கிய காரணமாக அமைந்தது. வைப்புக்களை ஏற்கின்ற கூட்டுத்தாபனங்களின் நாணய மற்றும்

5

வைப்புச் சொத்துக்களை முற்றுமுழுதாக உள்ளடக்குகின்ற நாணய மற்றும் வைப்புச் சொத்து நிலைமையானது 2018இன் இறுதியில் ஐ.அ.டொலர் 864 மில்லியனிலிருந்து 2019இன் இறுதியில் ஐ.அ.டொலர் 771 மில்லியனுக்கு சிறிதளவு வீழ்ச்சியடைந்தது.

### கடன்கள்

**வெளிநாட்டு நாணயப் பொறுப்பு நிலைமையானது 2019இன் இறுதியில் சிறிய வீழ்ச்சியொன்றினைப் பதிவுசெய்தது.** மத்திய வங்கியின் வெளிநாட்டுக் கடன் பொறுப்பு நிலைமையில் அதிகரிப்புக்கு மத்தியில் அரசாங்கத்தினதும் வைப்புக்களை ஏற்கின்ற கூட்டுத்தாபனங்களினதும் தனியார் கூட்டுத்தாபனங்களினதும் அரசுக்குச் சொந்தமான வியாபார தொழில்முயற்சிகளினதும் வெளிநாட்டுக் கடன் பொறுப்பு குறைவடைந்தமையின் காரணமாக மொத்த வெளிநின்ற கடன் பொறுப்புக்கள் வீழ்ச்சியடைந்தன. அதற்கமைய, வெளிநாட்டுக் கடன் பொறுப்பு நிலைமையானது 2018 இறுதியில் ஐ.அ.டொலர் 30,450 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2019இன் இறுதியில் ஐ.அ.டொலர் 30,288 மில்லியனாகக் காணப்பட்டது. 2019 மே மற்றும் நவெம்பர் மாதங்களில் பன்னாட்டு நாணய நிதியத்தின் விரிவுபடுத்தப்பட்ட நிதிய வசதிகளின் இரு தொகுதிகள் கிடைத்தமை மூலம் மத்திய வங்கியின் வெளிநாட்டுக் கடன் பொறுப்பு நிலைமை அதிகரித்தது. சில முக்கிய கூட்டுநிறுவனங்களுக்கும் முதலீட்டுச் சபைக் கம்பனிகளுக்குமான வெளிநாட்டு கடன்களின் குறைவின் மூலம் தனியார் துறையின் வெளிநின்ற கடன் பொறுப்பு நிலைமை சிறிதளவு வீழ்ச்சியடைந்தது. ஆண்டு காலப்பகுதியில் வெளிநாட்டுச் செயற்றிட்டக் கடன் மற்றும் வெளிநாட்டு நாணய கால நிதியிடல் வசதிகளின் தொடர்ச்சியான மீள்கொடுப்பனவுகளுக்கு மத்தியில் கடன் உட்பாய்ச்சல்கள் மிதமடைந்தமை மூலம் அரசாங்கத்தின் வெளிநாட்டு கடன் பொறுப்பு நிலைமை சிறிதளவு வீழ்ச்சியடைந்தது. வைப்புக்களை ஏற்கின்ற கூட்டுத்தாபனங்களின் வெளிநாட்டுக் கடன் பொறுப்பு நிலைமையின் வீழ்ச்சிக்கு நீண்ட கால வெளிநாட்டுக் கடன்களின் குறைவு காரணமாக அமைந்தது. மேலும், அரசுக்குச் சொந்தமான வியாபார தொழில்முயற்சிகளின் வெளிநாட்டுக் கடன் பொறுப்பின் நிலைமையும் 2019 காலப்பகுதியில் படுகடன் மீள்கொடுப்பனவுகள் மற்றும் புதிய வெளிநாட்டுக் கடன் பகிர்ந்தளிப்புக்களின்மை என்பவற்றின் விளைவாக வீழ்ச்சியடைந்தது.

### வர்த்தகக் கொடுகடன் மற்றும் முற்பணங்கள்

**2019இன் இறுதியில் வர்த்தகக் கொடுகடன் மற்றும் முற்பணங்களின் பொறுப்பு நிலைமை மற்றும் சொத்து நிலைமை இரண்டும் வீழ்ச்சியடைந்தன.** தனியார் துறைக்கும் அரசுக்குச் சொந்தமான வியாபார தொழில்முயற்சிகளுக்குமான வர்த்தகக் கொடுகடனையும் முற்பணங்களையும் உள்ளடக்குகின்ற வெளிநின்ற வர்த்தகக் கொடுக டன் மற்றும் முற்பணங்கள் பொறுப்பு நிலைமையானது 2018இன் இறுதியில் ஐ.அ.டொலர் 2,184 மில்லியனிலிருந்து 2019இன் இறுதியில் ஐ.அ.டொலர் 2,156 மில்லியனுக்குக் குறைவடைந்தமைக்கு இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் வெளிநின்ற வர்த்தகக் கொடுகடன்கள் குறைந்தமை பிரதான காரணமாகவிருந்தது. அதேவேளை, வைப்புக்களை ஏற்கின்ற கூட்டுத்தாபனங்களினாலும் தனியார் துறைகளினாலும் வழங்கப்பட்ட வர்த்தகக் கொடுகடன் மற்றும் முற்பணங்களைப் பிரதிபலிக்கின்ற வெளிநின்ற வர்த்தகக் கொடுகடன் மற்றும் முற்பணங்களின் சொத்து நிலைமையும் 2018இன் இறுதியில் ஐ.அ.டொலர் 1,182 மில்லியனிலிருந்து 2019இன் இறுதியில் ஐ.அ.டொலர் 1,178 மில்லியனுக்கு சிறிதளவில் குறைவடைந்தது.

### ஏனைய பெறத்தக்க/ கொடுபடத்தக்க கணக்குகளும் சிறப்பு எடுப்பனவு உரிமைகளும்


**2019இல் பெறத்தக்க ஏனைய கணக்குகளினதும் அதேபோன்று கொடுபடத்தக்க ஏனைய கணக்குகளினதும் வெளிநின்ற நிலைமை அதிகரித்தது.** வைப்புக்களை ஏற்கின்ற கூட்டுத்தாபனங்களின் ஏனைய பெறத்தக்க கணக்குகளின் வெளிநின்ற நிலைமை, 2018இல் இறுதியில் ஐ.அ.டொலர் 1,700 மில்லியனிலிருந்து 2019இன் இறுதியில் ஐ.அ.டொலர் 1,896 மில்லியனுக்கு அதிகரித்தது. அதேவேளை, கொடுபடத்தக்க ஏனைய கணக்குகளின் வெளிநின்ற நிலைமையானது மத்திய வங்கியின் ஆசியத் தீர்ப்பனவு ஒன்றியத்தின் தொடர்புபட்ட பொறுப்புக்களின் அதிகரிப்பொன்றின் மூலம் 2019இன் இறுதியில் ஐ.அ.டொலர் 456 மில்லியனுக்கு சிறிதளவு அதிகரித்தது. மேலும், வெளிநின்ற சிறப்பு எடுப்பனவு உரிமைகள் பொறுப்பு நிலைமையானது செலாவணி வீதத்தின் அசைவுகள் மூலம் 2019இன் இறுதியில் ஐ.அ.டொலர் 547 மில்லியனுக்கு சிறிதளவு வீழ்ச்சியடைந்தது.

5

### 5.9.4 ஒதுக்குச் சொத்து நிலைமை

**நிதியியல் கணக்கிற்கான உயர்வான உட்பாய்ச்சல்கள் மூலம் துணையளிக்கப்பட்டு இலங்கையின் மொத்த அலுவல்சார் ஒதுக்குச் சொத்து நிலைமையானது 2019இன் இறுதியில் அதிகரித்தது.** மொத்த அலுவல்சார் ஒதுக்குகள், 2018இன் இறுதியில் ஐ.அ.டொலர் 6.9 பில்லியனிலிருந்து 2019இன் இறுதியில் ஐ.அ.டொலர் 7.6 பில்லியனுக்கு அதிகரித்தன. இரு நாட்டிற்கான பன்னாட்டு முறிகளின் மீள்கொடுப்பனவு மற்றும் ஏனைய படுகடன் தீர்ப்பனவு கடப்பாடுகளுக்கு மத்தியில் இரண்டு புதிய நாட்டிற்கான பன்னாட்டு முறிகளின் பெறுகைகளின் கிடைப்பனவு, பன்னாட்டு நாணய நிதியத்தின் விரிவுபடுத்தப்பட்ட நிதிய வசதியின் இரண்டு தொகுதிகளின் கிடைப்பனவு அத்துடன் உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையிலிருந்து மத்திய வங்கியின் வெளிநாட்டுச்

வரைபடம் 5.12
காலாண்டுக்கான மொத்த அலுவல்சார் ஒதுக்குகளும் மொத்த வெளிநாட்டுச் சொத்துக்களும்




*மூலம்* : இலங்கை மத்திய வங்கி

செலாவணிக் கொள்வனவு என்பன 2019இன் இறுதியில் மொத்த அலுவல்சார் ஒதுக்கு நிலைமையினை அதிகரிப்பதற்கு முதன்மையாகப் பங்களித்தன. இதற்கு மேலதிகமாக, ஐ.அ.டொலர் 366 மில்லியன் கொண்ட உள்நாட்டு வங்கிகளுடனான வெளிநாட்டுச் செலாவணி பரஸ்பர பரிமாற்றல் ஒழுங்கேற்பாடுகள் இளைப்பாற்றப்பட்டமை ஒதுக்குகளின் தரத்தினை ஆண்டு

அட்டவணை 5.12
மொத்த அலுவல்சார் ஒதுக்குகள், மொத்த வெளிநாட்டுச் சொத்துக்கள் மற்றும் திரண்ட நிலுவை

(கால இறுதியிலான நிலைமை)

| | ஐ.அ.டொலர் மில்லியன் | | | | |
|---|---|---|---|---|---|
| | 2015 | 2016 | 2017 | 2018 | 2019 (அ) |
| 1. அரசின் வெளிநாட்டு சொத்துக்கள் | 470 | 289 | 488 | 817 | 386 |
| 2. மத்திய வங்கியின் வெளிநாட்டு சொத்துக்கள் | 6,834 | 5,730 | 7,470 | 6,102 | 7,256 |
| 3. மொத்த அலுவல்சார் ஒதுக்குகள் (1+2) | 7,304 | 6,019 | 7,959 | 6,919 | 7,642 |
| 4. வைப்புக்களை ஏற்கும் கூட்டுத் தாபனங்களின் வெளிநாட்டு சொத்துக்கள் | 2,033 | 2,414 | 2,478 | 2,664 | 2,760 |
| 5. மொத்த வெளிநாட்டு சொத்துக்கள் (3+4) (ஆ) | 9,337 | 8,433 | 10,436 | 9,583 | 10,402 |
| 6. ஒதுக்குடன் தொடர்புடைய பொறுப்புக்கள் (இ) | 2,275 | 1,490 | 1,361 | 1,425 | 1,771 |
| 7. தேறிய பன்னாட்டு ஒதுக்குகள் (3-6) | 5,029 | 4,529 | 6,597 | 5,495 | 5,871 |
| 8. திரண்ட நிலுவை (ஈ) | -1,489 | -500 | 2,068 | -1,103 | 376 |
| 9. மொத்த அலுவல்சார் ஒதுக்குகள் மாதங்களின்படி | | | | | |
| 9.1 பொருட்களின் இறக்குமதிகள் | 4.6 | 3.8 | 4.6 | 3.7 | 4.6 |
| 9.2 பொருட்கள் மற்றும் பணிகளின் இறக்குமதிகள் | 3.8 | 3.1 | 3.8 | 3.1 | 3.7 |
| 10. மொத்த வெளிநாட்டுச் சொத்துக்கள் மாதங்களின்படி | | | | | |
| 10.1 பொருட்களின் இறக்குமதிகள் | 5.9 | 5.3 | 6.0 | 5.2 | 6.3 |
| 10.2 பொருட்கள் மற்றும் பணிகளின் இறக்குமதிகள் | 4.9 | 4.3 | 4.9 | 4.3 | 5.1 |

(அ) தற்காலிகமானது
(ஆ) 'வெளிநாட்டில் நேரடி முதலீடு' மற்றும் 'வழங்கப்பட்ட வர்த்தக்கடன் மற்றும் முற்பணங்கள்' வடிவிலுள்ள வெளிநாட்டுச் சொத்துக்கள் நீங்கலாக
(இ) வெளிநின்ற சிறப்பு எடுப்பனவு உரிமைகள் நீங்கலாக மத்திய வங்கியின் மொத்த வெளிநின்ற படுகடன்
(ஈ) ஆண்டுக்காலப்பகுதியில் தேறிய பன்னாட்டு ஒதுக்கு நிலைமையின் மாற்றம்

*மூலம்:* இலங்கை மத்திய வங்கி

காலப்பகுதியில் மேம்படுத்தியது. 2019 இறுதியில் வெளிநாட்டுச் செலாவணி பரஸ்பரப் பரிமாற்றல் நிலைமை ஐ.அ.டொலர் 357 மில்லியன் தொகையாகக் காணப்பட்டது. நாட்டின் மொத்த அலுவல்சார் ஒதுக்குகள் 2018இன் இறுதியில் 3.7 மாதங்களுக்கான இறக்குமதிகள் மற்றும் நாட்டின் குறுகிய கால படுகடன் மற்றும் பொறுப்புக்களின் 50 சதவீதத்துடன் ஒப்பிடுமிடத்து 2019இன் இறுதியில் 4.6 மாதங்களுக்கான இறக்குமதிகளுக்கும் நிதியளிக்கப் போதுமானதாகவுள்ள அதேவேளையில், 2019இன் இறுதியிலுள்ள நாட்டின் குறுகிய கால படுகடன் மற்றும் பொறுப்புக்களின் 56.1 சதவீதத்தினை உள்ளடக்கியதாகவிருந்தது. அதேவேளை, மொத்த அலுவல்சார் ஒதுக்குகளையும் வர்த்தக வங்கிகளின் வெளிநாட்டுச் சொத்துக்களையும் உள்ளடக்குகின்ற மொத்த பன்னாட்டு ஒதுக்குகளும் 2018இன் இறுதியிலிருந்த ஐ.அ.டொலர் 9.6 பில்லியனிலிருந்து 2019இன் இறுதியில் ஐ.அ.டொலர் 10.4 பில்லியனாக அதிகரித்தன. மொத்த பன்னாட்டு ஒதுக்குகள் 6.3 மாத இறக்குமதிகளுக்கு நிதியளிப்பதற்கு போதுமானதாகக் காணப்பட்டன.

## 5.10 வெளிநாட்டுப் படுகடனும் படுகடன் தீர்ப்பனவும்

### 5.10.1 வெளிநாட்டுப் படுகடன்

**2019இல் பொது அரசாங்கத்தின் வெளிநாட்டுப் படுகடனின் அதிகரிப்பின் மூலம் இலங்கையின் மொத்த வெளிநாட்டுப் படுகடன் உயர்வடைந்தது.** நாட்டின் மொத்த வெளிநாட்டுப் படுகடன், 2019இன் இறுதியில் ஐ.அ.டொலர் 55.9 பில்லியனுக்கு ஆண்டு காலப்பகுதியில் ஐ.அ.டொலர் 3.5 பில்லியனால் அதிகரித்தது. சந்தைப் பெறுமதியின் அடிப்படையில் நாட்டிற்கான பன்னாட்டு முறிகளின் வெளிநின்ற பொறுப்பு நிலைமையானது 2018இன் இறுதியிலிருந்த ஐ.அ.டொலர் 11.6 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 2019இன் இறுதியில் ஐ.அ.டொலர் 15.2 பில்லியனாகக் காணப்பட்டது. இது இரு நாட்டிற்கான பன்னாட்டு முறிகளை வழங்குவதனூடாக அரசாங்கம் ஐ.அ.டொலர் 4.4 பில்லியனைத் திரட்டிய அதேவேளை, ஆண்டு காலப்பகுதியில் ஐ.அ.டொலர் 1.5 பில்லியன் தொகையுடைய இரு நாட்டிற்கான பன்னாட்டு முறிகளின் மீள்கொடுப்பனவு என்பவற்றின் தேறிய பெறுபேறாக அமைந்திருந்தது. எவ்வாறாயினும், ஆண்டு காலப்பகுதியில் திறைசேரி உண்டியல்களில் வெளிநாட்டு முதலீடுகள் சிறிய அதிகரிப்பொன்றைப் பதிவுசெய்த போதிலும் அரசாங்கப் பிணையங்கள் சந்தையிலிருந்து வெளிநாட்டு முதலீடுகளின் தேறிய வெளிப்பாய்ச்சல் மூலம் வதிவற்றோர் வைத்திருந்த வெளிநின்ற திறைசேரி முறிகள் வீழ்ச்சியடைந்தன. 2019இன் பகிர்ந்தளிப்புகளுடன் ஒப்பிடுகையில் வெளிநின்ற வெளிநாட்டுக் கடன் பொறுப்புக்களின் வரலாற்று ரீதியிலான உயர்வான மீள்கொடுப்பனவுகளின் காரணமாக அரசாங்கத்தின் மொத்த வெளிநின்ற வெளிநாட்டுக் கடன்கள் சிறிய வீழ்ச்சியொன்றினைப்

5

பதிவுசெய்தன. இலங்கையின் வெளிநின்ற வெளிநாட்டுப் படுகடன் நிலைமையானது அரசாங்கத்தின் அதிகரிக்கின்ற வெளிநின்ற வெளிநாட்டுப் படுகடனுடன் தொடர்ந்தும் அதிகரிக்கின்றமை வெளிநாட்டுத் துறையின் மிக முக்கிய பாதிக்கப்படக்கூடிய தன்மையினை எடுத்துரைக்கின்றது.

**2019இல் இலங்கை மத்திய வங்கியின் வெளிநின்ற பொறுப்பு நிலைமை அதிகரித்த அதேவேளை, வைப்புக்களை ஏற்கும் கூட்டுத்தாபனங்கள் மற்றும் தனியார் கூட்டுத்தாபனங்கள் மற்றும் அரசுக்குச் சொந்தமான வியாபாரத் தொழில்முயற்சிகள் என்பவற்றின் வெளிநின்ற படுகடன் வீழ்ச்சியடைந்தது.** இலங்கை மத்திய வங்கியின் வெளிநாட்டுப் பொறுப்பு நிலைமையானது பன்னாட்டு நாணய நிதியத்தின் விரிவுபடுத்தப்பட்ட நிதிய வசதியின் இரு தொகுதிகளின் பெறுகை மற்றும் ஆசியத் தீர்ப்பனவு ஒன்றியத்திற்கு வெளிநின்ற பொறுப்புக்களில் சிறிய அதிகரிப்பு என்பன மூலம் அதிகரித்தது. வைப்புக்களை ஏற்கும் கூட்டுத்தாபனங்களின் வெளிநாட்டுப் பொறுப்பு நிலைமையானது நாணய மற்றும் வைப்புப் பொறுப்புக்களின் அதிகரிப்பொன்றுக்கு மத்தியிலும் முதிர்ச்சியடைகின்ற பன்னாட்டு முறியொன்றினை தேசிய சேமிப்பு வங்கிமீள்கொடுப்பனவுசெய்தமை அதேபோன்று வர்த்தக வங்கிகளின் வெளிநின்ற வெளிநாட்டுக் கடன்களின் குறைவு என்பன மூலம் வீழ்ச்சியடைந்தது. தனியார் துறை மற்றும் அரசுக்குச் சொந்தமான வியாபாரத் தொழில்முயற்சிகளின் வெளிநின்ற வெளிநாட்டுப் படுகடன், தற்போதுள்ள கடன் மீள் செலுத்துகையினால் வீழ்ச்சியடைந்தன. மேலும், ஆண்டு காலப்பகுதியில் சில முக்கிய வெளிநாட்டு நேரடி முதலீட்டுத் தொழில்முயற்சிகள் கம்பனிகளுக்கிடையிலான கடன்களையும் பங்குதாரர்கள் முற்பணங்களையும் பெற்றுக்கொண்டமையினால் வெளிநாட்டு நேரடி முதலீட்டுத் தொழில்முயற்சிகளின் கம்பனிகளுக்கிடையிலான கடன்பாடுகள் ஆண்டு காலப்பகுதியில் அதிகரிப்பொன்றினைப் பதிவுசெய்தன.

**மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமொன்றாக நாட்டின் மொத்த வெளிநின்ற வெளிநாட்டுப் படுகடன் ஆண்டு காலப்பகுதியில் மேலும் அதிகரித்தது.** மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமொன்றாக மொத்த வெளிநின்ற படுகடனானது 2018இன் இறுதியில் 59.2 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2019இன் இறுதியில் 66.6 சதவீதமாகக் காணப்பட்டது. இது 2019 காலப்பகுதியில் வெளிநின்ற வெளிநாட்டுப் படுகடனின் குறிப்பிடத்தக்க அதிகரிப்பொன்றினதும் பெயரளவிலான மொத்த உள்நாட்டு உற்பத்தியின் மெதுவான வளர்ச்சியினதும் விளைவாக காணப்பட்டது. அரசாங்கத்தின் வெளிநின்ற வெளிநாட்டுப் படுகடன் நிலைமையானது 2018இன் இறுதியிலிருந்த 61.1 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2019இன் இறுதியில் 63.3 சதவீதமாக காணப்பட்டது. பெயரளவு நியதிகள் மற்றும் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதம் ஆகிய இரண்டிலும் இலங்கையின் வெளிநாட்டுப் படுகடனின்

அட்டவணை 5.13

**வெளிநின்ற வெளிநாட்டு படுகடனின் நிலை**

ஐ.அ.டொ.மில்லியன்
(கால இறுதியிலான நிலைமை)

| வகை | 2018(அ) | 2019(ஆ) |
|---|---|---|
| **அரசாங்கம்** | **32,011** | **35,377** |
| **குறுங்காலம்** | **60** | **119** |
| படுகடன் பிணையங்கள் | 60 | 119 |
| திறைசேரி உண்டியல்கள் (இ) | 60 | 119 |
| **நீண்ட காலம்** | **31,952** | **35,258** |
| படுகடன் பிணையங்கள் | 12,326 | 15,649 |
| திறைசேரி முறிகள் (இ) | 728 | 406 |
| இலங்கை அபிவிருத்தி முறிகள் (ஈ) | 4 | 5 |
| நாட்டுக்கான பன்னாட்டு முறிகள் (உ) | 11,594 | 15,238 |
| கடன்கள் | 19,626 | 19,609 |
| **மத்திய வங்கி** | **1,975** | **2,318** |
| **குறுங்காலம்** | **432** | **456** |
| ஏனைய கொடுபடத்தக்க கணக்குகள் | 432 | 456 |
| ஆசிய தீர்ப்பனவு ஒன்றிய பொறுப்புக்கள் | 432 | 456 |
| **நீண்ட காலம்** | **1,542** | **1,862** |
| சிறப்பு எடுப்பனவு உரிமை ஒதுக்குகள் | 550 | 547 |
| கடன்கள் | 992 | 1,315 |
| ப.நா.நி உடனான கொடுகடன் மற்றும் கடன்கள் | 992 | 1,315 |
| விரிவாக்கப்பட்ட நிதிய வசதி | 992 | 1,315 |
| **வைப்புக்களை ஏற்கும் கூட்டுத்தாபனங்கள்** | **7,359** | **6,997** |
| **குறுங்காலம்** | **5,353** | **5,519** |
| நாணயம் மற்றும் வைப்புக்கள் (ஊ) | 1,580 | 1,748 |
| வர்த்தக வங்கிகள் | 1,580 | 1,748 |
| கடன்கள் | 3,772 | 3,771 |
| வர்த்தக வங்கிகள் | 3,772 | 3,771 |
| **நீண்ட காலம்** | **2,007** | **1,478** |
| படுகடன் பிணையங்கள் (உ) | 249 | - |
| வைப்புக்களை ஏற்கும் ஏனைய கூட்டுத்தாபனங்கள் | 249 | - |
| கடன்கள் | 1,758 | 1,478 |
| வர்த்தக வங்கிகள் | 1,643 | 1,412 |
| வைப்புக்களை ஏற்கும் ஏனைய கூட்டுத்தாபனங்கள் | 115 | 66 |
| **ஏனைய துறைகள் (எ)** | **6,657** | **6,446** |
| **குறுங்காலம்** | **2,184** | **2,156** |
| வர்த்தக கொடுகடன் மற்றும் முற்பணங்கள் (ஏ) | 2,184 | 2,156 |
| **நீண்ட காலம்** | **4,472** | **4,290** |
| படுகடன் பிணையங்கள் (உ) | 171 | 174 |
| கடன்கள் | 4,302 | 4,116 |
| தனியார் துறை கூட்டுத்தாபனங்கள் | 2,232 | 2,212 |
| அரசிற்கு சொந்தமான வியாபாரத் தொழில்முயற்சிகளும் அரச கூட்டுத்தாபனங்களும் | 2,070 | 1,904 |
| **நேரடி முதலீடு : கம்பனிகளுக்கிடையிலான கடன் வழங்கல் (ஐ)** | **4,410** | **4,778** |
| **மொத்த வெளிநாட்டு படுகடன் நிலைமை** | **52,412** | **55,916** |
| **மொ.உ.உ. சதவீதமாக** | | |
| மொத்த வெளிநாட்டு படுகடன் | 59.2 | 66.6 |
| குறுங்கால படுகடன் | 9.1 | 9.8 |
| நீண்டகால படுகடன் | 50.1 | 56.8 |
| **மொத்த வெளிநாட்டு படுகடனின் சதவீதமாக** | | |
| குறுங்கால படுகடன் | 15.3 | 14.8 |
| நீண்டகால படுகடன் | 84.7 | 85.2 |
| **ஞாபகார்த்த விடயங்கள்** | | |
| **படுகடன் பிணையங்கள்-முகப்பெறுமதியில் துறைவாரியான பகுப்பாய்வு** | **13,448** | **15,803** |
| அரசாங்கம் | 13,023 | 15,628 |
| திறைசேரி உண்டியல்கள் | 65 | 131 |
| திறைசேரி முறிகள் | 804 | 442 |
| இலங்கை அபிவிருத்தி முறிகள் | 4 | 5 |
| நாட்டுக்கான பன்னாட்டு முறிகள் | 12,150 | 15,050 |
| மத்திய வங்கி தவிர்ந்த, வைப்புக்களை ஏற்கும் கூட்டுத்தாபனங்கள் | 250 | - |
| உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகள் | 250 | - |
| ஏனைய துறைகள் | 175 | 175 |

(அ) திருத்தப்பட்டது

(ஆ) தற்காலிகமானது

(இ) புத்தகப் பெறுமதியை அடிப்படையாகக் கொண்டது

(ஈ) முகப் பெறுமதியை அடிப்படையாகக் கொண்டது

(உ) சந்தை விலைகளை அடிப்படையாகக் கொண்டது

(ஊ) வெளிநாட்டு நாணயங்களை வைத்திருக்கும் வதிவற்றோரின் வைப்புக்களை உள்ளடக்கியுள்ளது


(எ) தனியார் துறை மற்றும் அரசுக்கு சொந்தமான தொழில் முயற்சிகளை உள்ளடக்கியுள்ளது

(ஏ) இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் மற்றும் தனியார் துறை கம்பனிகளின் வெளிநின்ற வர்த்தக கொடுகடனை உள்ளடக்கியுள்ளது

(ஐ) முதலீட்டுச்சபையில் பதிவு செய்யப்பட்ட கம்பனிகளின் கம்பனிகளுக்கிடையிலான கடன் பெறுகைகள் மற்றும் பங்குதாரர் முற்பணங்கள் உள்ளடங்கலாக

*மூலம்* : இலங்கை மத்திய வங்கி

வரைபடம் 5.13
வெளிநாட்டுப் படுகடன்




*மூலம்* : இலங்கை மத்திய வங்கி

அதிகரிப்பிற்கு மத்தியில் நீண்ட கால முதிர்ச்சியானது 2018இன் இறுதியில் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 50.1 சதவீதத்திலிருந்து 2019இன் இறுதியளவில் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 56.8 சதவீதத்திற்கு அதிகரித்தமை மூலம் படுகடன் முதிர்ச்சித் தோற்றப்பாட்டில் மேம்பாடொன்று காணப்பட்டது.

### 5.10.2 வெளிநாட்டுப் படுகடன் தீர்ப்பனவுக் கொடுப்பனவுகள்

**இலங்கையின் வெளிநாட்டுப் படுகடன் மீதான மூலதன மீள்கொடுப்பனவுகளையும் வட்டிக் கொடுப்பனவுகளையும் உள்ளடக்குகின்ற வெளிநாட்டுப் படுகடன் தீர்ப்பனவு கொடுப்பனவுகள் 2019இல் சிறியளவில் வீழ்ச்சியடைந்தன.** மூலதன மீள்கொடுப்பனவுகள், 2018இன் ஐ.அ.டொலர் 4,188 மில்லியனிலிருந்து 2019இல் ஐ.அ.டொலர் 4,119 மில்லியனுக்கு சிறிதளவு குறைவடைந்தன. இதில் பொது அரசாங்கம் ஐ.அ.டொலர் 3,176 மில்லியனுக்கு வகைகூறியது. ஆண்டு காலப்பகுதியில் முதிர்ச்சியடைந்த ஐ.அ.டொலர் 1.5 பில்லியன் கொண்ட இரு நாட்டிற்கான பன்னாட்டு முறிகளின் மீள்கொடுப்பனவானது அரசாங்கத்தின் அதிகரித்த படுகடன் கடன்கழிப்புக்கு முக்கிய பங்களிப்புச்செய்தது. ஐ.அ.டொலர் 1,189 மில்லியன் கொண்ட வெளிநாட்டுக் கடன்களையும் வெளிநாட்டு நாணய கால நிதியிடல் வசதிகளின் கீழ் ஐ.அ.டொலர் 473 மில்லியன் கொண்ட கடப்பாடுகளையும் அரசாங்கம் மீளச்செலுத்தியது. மேலும், ஆண்டு காலப்பகுதியில் முதிர்ச்சியடைந்த ஐ.அ.டொலர் 250 மில்லியன் கொண்ட பன்னாட்டு முறியொன்றினை வைப்புக்களை ஏற்கும் கூட்டுத்தாபனங்கள் மீளச்செலுத்தின. அதேவேளை, தனியார் துறை மற்றும் அரசுக்குச் சொந்தமான வியாபாரத் தொழில்முயற்சிகளின் வெளிநாட்டுக் கடன்களின் மூலதன மீள்கொடுப்பனவுகள் 2018ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2019இல் வீழ்ச்சியடைந்தன. ஆண்டு காலத்தில் வட்டிக் கொடுப்பனவுகள் 2018இன் ஐ.அ.டொலர் 1,678 மில்லியனிலிருந்து 2019இல் ஐ.அ.டொலர் 1,653 மில்லியனுக்கு சிறிதளவாலேனும் குறைவடைந்தன. நாட்டிற்கான பன்னாட்டு முறிகளின் கூப்பன் கொடுப்பனவுகள் மீதான வட்டிக் கொடுப்பனவுகளில் ஒரு அதிகரிப்புக் காணப்பட்ட அதேவேளை பாரியளவில் தூண்டப்பட்டிருந்த அதேவேளை, அரசாங்கத்தின் வெளிநாட்டுக் கடன்கள் மீதான வட்டிக் கொடுப்பனவுகளில் மிதமான அதிகரிப்பொன்று காணப்பட்டது. எனினும், ஆண்டு காலத்தில் திறைசேரி முறிகள் சந்தையிலிருந்து வெளிநாட்டு முதலீடுகளின் தேறிய வெளிப்பாய்ச்சல்களின் விளைவொன்றாக திறைசேரி முறிகளின் இருப்பின் வீழ்ச்சியின் மூலம் அரசாங்கத் திறைசேரி முறிகளின் வெளிநாட்டு முதலீடுகள் மீதான வட்டிக் கொடுப்பனவுகள் வீழ்ச்சியடைந்தன. எவ்வாறாயினும், நாட்டிற்கான பன்னாட்டு முறிகளின் வெளிநின்ற இருப்புகளின் அதிகரிப்பின் மூலம் அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட பன்னாட்டு முறிகள் மீதான கூப்பன் கொடுப்பனவுகள் அதிகரித்தன. வணிகப் பொருள் மற்றும் பணிகள் ஏற்றுமதிகளின் வருவாய்கள் கடந்த ஆண்டுடன் ஒப்பிடுமிடத்து கணிசமானளவு குறைவானதாகக் காணப்பட்டமையினால் வணிகப் பொருட்களினதும் பணிகளினதும் ஏற்றுமதியின் சதவீதமொன்றாக மொத்த வெளிநாட்டுப் படுகடன் தீர்ப்பனவு கொடுப்பனவுகள் 2018இன் 28.9 சதவீதத்திலிருந்து 2019இல் 29.7 சதவீதத்திற்கு அதிகரித்தன. மேலும், நாட்டின் படுகடன் இருப்பின் முக்கிய பாகத்தினை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற அரசாங்கத்தின் வெளிநாட்டு படுகடனுடன் அரசாங்கத்தின் படுகடன் தீர்ப்பனவுக் கொடுப்பனவுகள் 2019இல் மொத்தப் படுகடன் தீர்ப்பனவு கொடுப்பனவுகளின் 79 சதவீதத்திற்கு வகைகூறின.

**நடுத்தர காலத்தில் கொடுப்பனவு செய்ய வேண்டியவைகளாக காணப்படுகின்ற நாட்டிற்கான பன்னாட்டு முறிகளின் முதிர்ச்சிகள் மற்றும் வெளிநாட்டு நாணய கால நிதியிடல் வசதிகளின் மூலதன மீள்கொடுப்பனவுகள் உள்ளடங்கலாக உயர்வான வெளிநாட்டு நாணயப் படுகடன் தீர்ப்பனவுக் கடப்பாடுகள், நாட்டின் வெளிநாட்டுப் படுகடன் நீடித்து நிலைத்திருக்கும் தன்மைக்கு முக்கிய சவாலொன்றாகக் இருந்து வருகின்றன.** தொடர்ச்சியாக நிலவுகின்ற உயர் வரவுசெலவுத் திட்டப் பற்றாக்குறைகளுக்கும் பாரிய வெளிநாட்டு நடைமுறைக் கணக்குப் பற்றாக்குறைகளுக்கும் நிதியளிப்பதற்கு வெளிநாட்டுக் கடன்பாடுகள் மீது அதிகரித்தளவில் தங்கியிருக்கின்றமை வருடாந்தம் அதிகரித்து வருகின்ற படுகடன் தீர்ப்பனவினையும் இதனூடாக தொடர்ச்சியாக வெளிநாட்டு வளங்களைத் திரட்டுவதற்கான தேவையினையும் தோற்றுவித்துள்ளது. பெரும்பான்மையான அரசாங்கத்தின் வெளிநாட்டுக் கடன்பாடுகள் நாட்டிற்கான பன்னாட்டு முறிகளை வழங்குவதனூடாக வசதிப்படுத்தப்படுவதனால் அத்தகைய கடன்பாடுகளின் செலவும் அதிகரித்துள்ளன. மறுபுறத்தில்

அட்டவணை 5.14
வெளிநாட்டுப் படுகடன் பணிக்கொடுப்பனவுகள்

| வகை | ஐ.அ.டொலர் மில்லியன் | | | | | ரூபா.மில்லியன் | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 2015 | 2016 | 2017 | 2018 (அ) | 2019 (ஆ) | 2015 | 2016 | 2017 | 2018 (அ) | 2019 (ஆ) |
| **1. படுகடன் பணிக் கொடுப்பனவுகள்** | **4,772** | **4,461** | **4,566** | **5,866** | **5,773** | **648,541** | **648,315** | **695,690** | **954,937** | **1,038,911** |
| **1.1 கடன் தவணைக் கொடுப்பனவு** | **3,580** | **3,243** | **3,167** | **4,188** | **4,119** | **487,275** | **472,270** | **482,750** | **682,359** | **743,171** |
| பொது அரசாங்கம் | 1,976 | 1,040 | 1,354 | 1,815 | 3,176 | 265,662 | 151,236 | 206,531 | 294,845 | 573,830 |
| செயற்றிட்டக் கடன்கள் | 798 | 876 | 1,320 | 1,771 | 1,662 | 107,536 | 127,396 | 201,430 | 287,381 | 295,992 |
| படுகடன் பிணையங்கள் | 1,178 | 164 | 34 | 45 | 1,514 | 158,126 | 23,840 | 5,101 | 7,464 | 277,838 |
| மத்திய வங்கி | 907 | 1,555 | 635 | - | - | 125,686 | 226,118 | 96,584 | - | - |
| பன்னாட்டு நாணய நிதியம் | 507 | 455 | 235 | - | - | 68,775 | 65,956 | 35,601 | - | - |
| சுவப் மற்றும் ஏனைய பொறுப்புகள் | 400 | 1,100 | 400 | - | - | 56,911 | 160,162 | 60,983 | - | - |
| தனியார் துறை மற்றும் வைப்புக்களை ஏற்கும் கூட்டுத்தாபனங்கள் | 698 | 648 | 1,178 | 1,943 | 926 | 95,928 | 94,916 | 179,635 | 314,024 | 166,281 |
| வெளிநாட்டு கடன்கள் | 553 | 559 | 559 | 593 | 676 | 76,199 | 81,944 | 85,242 | 96,640 | 121,737 |
| படுகடன் பிணையங்கள் | - | - | 500 | 1,350 | 250 | - | - | 76,169 | 217,384 | 44,543 |
| நேரடி முதலீட்டு தொழில் முயற்சி கம்பனிகளுக்கிடையிலான படுகடன் | 145 | 88 | 119 | 430 | 17 | 19,729 | 12,972 | 18,225 | 73,490 | 3,061 |
| **1.2 வட்டிக்கொடுப்பனவுகள்** | **1,192** | **1,219** | **1,399** | **1,678** | **1,653** | **161,266** | **176,045** | **212,419** | **270,189** | **295,743** |
| பொது அரசாங்கம் | 870 | 862 | 1,063 | 1,280 | 1,389 | 117,496 | 124,042 | 161,458 | 207,905 | 248,376 |
| செயற்றிட்ட கடன்கள் | 266 | 264 | 332 | 425 | 430 | 36,024 | 38,440 | 50,652 | 68,847 | 76,754 |
| படுகடன் பிணையங்கள் | 604 | 597 | 731 | 855 | 959 | 81,472 | 85,602 | 110,806 | 139,057 | 171,622 |
| மத்திய வங்கி | 13 | 10 | 16 | 30 | 37 | 1,693 | 1,436 | 2,119 | 4,834 | 6,618 |
| பன்னாட்டு நாணய நிதியம் | 10 | 8 | 12 | 24 | 28 | 1,395 | 1,179 | 1,897 | 3,833 | 4,940 |
| சுவப் மற்றும் ஏனைய பொறுப்புகள் | 2 | 2 | 3 | 6 | 9 | 298 | 257 | 222 | 1,001 | 1,677 |
| தனியார் துறை மற்றும் வைப்புக்களை ஏற்கும் கூட்டுத்தாபனங்கள் | 309 | 347 | 311 | 354 | 216 | 42,077 | 50,567 | 47,433 | 57,421 | 38,745 |
| வெளிநாட்டு கடன்கள் | 148 | 179 | 169 | 242 | 199 | 20,128 | 26,121 | 25,775 | 39,479 | 35,613 |
| படுகடன் பிணையங்கள் | 159 | 159 | 142 | 112 | 18 | 21,779 | 23,186 | 21,658 | 17,943 | 3,131 |
| நேரடி முதலீட்டு தொழில் முயற்சி கம்பனிகளுக்கிடையிலான படுகடன் | 1 | 9 | 9 | 15 | 11 | 170 | 1,260 | 1,409 | 2,388 | 2,005 |
| **2. பொருட்கள் மற்றும் பணிகளின் ஏற்றுமதியிலிருந்தான வருவாய்கள்** | **16,943** | **17,448** | **19,084** | **20,264** | **19,414** | | | | | |
| **3. பொருட்கள் மற்றும் பணிகளின் ஏற்றுமதிகள் வருமானம் மற்றும் நடைமுறை மாற்றல்களிலிருந்தான பெறுகைகள்** | **24,078** | **24,835** | **26,432** | **27,535** | **26,392** | | | | | |
| **4. படுகடன் பணி விகிதம்** | | | | | | | | | | |
| 4.1 மேலுள்ள 2இன் சதவீதமாக | | | | | | | | | | |
| ஒட்டு மொத்த விகிதம் | 28.2 | 25.6 | 23.9 | 28.9 | 29.7 | | | | | |
| ப.நா.நி. கொடுக்கல் வாங்கல்கள் நீங்கலாக | 25.1 | 22.9 | 22.6 | 28.8 | 29.6 | | | | | |
| 4.2 மேலுள்ள 3இன் சதவீதமாக | | | | | | | | | | |
| ஒட்டு மொத்த விகிதம் | 19.8 | 18.0 | 17.3 | 21.3 | 21.9 | | | | | |
| ப.நா.நி. கொடுக்கல்வாங்கல்கள் நீங்கலாக | 17.7 | 16.1 | 16.3 | 21.2 | 21.8 | | | | | |
| **5. அரச படுகடன் பணிக் கொடுப்பனவுகள்** | | | | | | | | | | |
| 5.1 அரச படுகடன் பணிக் கொடுப்பனவுகள் (இ) | 2,846 | 1,901 | 2,417 | 3,095 | 4,565 | | | | | |
| 5.2 மேலுள்ள 1இன் சதவீதமாக | 59.6 | 42.6 | 52.9 | 52.8 | 79.1 | | | | | |

(அ) திருத்தப்பட்டது
(ஆ) தற்காலிகமானது
(இ) பன்னாட்டு நாணய நிதியத்துடனான கொடுக்கல்வாங்கல்கள் நீங்கலாக

*மூலம்:* இலங்கை மத்திய வங்கி

அதிகரித்துச் செல்லுகின்ற வெளிநாட்டுப் படுகடன் தீர்ப்பனவுக் கொடுப்பனவுகள், வெளிநாட்டு அதிர்வுகளுக்கு எதிரான தாங்கியிருப்பொன்றாகவும் உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையில் பாரியளவு தளம்பல்களை முகாமை செய்வதற்கான நாட்டின் இயலுமையாகவும் பணியாற்றுகின்ற நாட்டின் பன்னாட்டு ஒதுக்குகளில் தேறிய குறைவடைதலொன்றினை தோற்றுவிக்கின்றன. ஆதலால், வெளிநாட்டுப் படுகடனை நீடித்து நிலைத்திருக்கும் மட்டமொன்றில் பேணுவதற்கான கொள்கை ரீதியான முயற்சிகள், நீண்ட காலத்தில் நடைமுறைக் கணக்குப் பற்றாக்குறை மற்றும் வரவுசெலவுத் திட்டப் பற்றாக்குறை என்பனவற்றின் நீடித்து நிலைத்திருக்கும் தன்மையினை உறுதிசெய்வதனை மையப்படுத்துகின்றவையாக இருக்க வேண்டும். அத்தகைய காலங்கடந்த கட்டமைப்பு சார்ந்த பிரச்சனையைத் தீர்ப்பது குறுகிய காலத்தில் சாத்தியமற்றதாக இருக்குமாயினும் இப்பிரச்சனைகளைத் தீர்ப்பதற்கு அனைத்து ஆர்வலர்களினதும் ஆதரவுடனும் நேர காலத்துடனானதும் நிலையானதுமான நடுத்தர கால கொள்கை ரீதியான கட்டமைப்பொன்றின் நடைமுறைப்படுத்தல் மிகவும் முன்னுரிமையளிக்கப்பட வேண்டியதொன்றாக தோற்றம்பெற்றுள்ளது.

## 5.11 செலாவணி வீத அசைவுகள்

**2019இல் இலங்கை ரூபாவானது ஐ.அ.டொலருக்கெதிராக சிறிய பெறுமதி உயர்வுடன் பரந்தளவில் நிலையானதாகக் காணப்பட்டது.** 2018இல் அவதானிக்கப்பட்ட துரித பெறுமானத் தேய்வின் பின்னர் உலகளாவிய மற்றும் உள்நாட்டு அபிவிருத்திகளின் விளைவொன்றாக அவ்வப்போதான சில தளம்பல்களுக்கு மத்தியில் 2019இல் நாணயமானது திருத்தமொன்றினை எடுத்துக்காட்டியது. செலாவணி வீதமானது உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல்களுக்கு முன்னர் வர்த்தகப் பற்றாக்குறையின் குறிப்பிடத்தக்க சுருக்கம் மற்றும் நிதியியல் பாய்ச்சல்களின் அதிகரிப்பு என்பன மூலம் துணையளிக்கப்பட்டு ஐ.அ.டொலருக்கெதிராக 4.6 சதவீதம் கொண்ட பெறுமதி உயர்வொன்றினை ஏற்படுத்தி 2019இன் முதல் நான்கு மாதங்களில் வலுப்பெற்றது. உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையில் இக்காலப்பகுதியில் நிலவிய சாதகமானத் திரவத்தன்மை நிலைமைகளும் தேறிய அடிப்படையொன்றில் சந்தையிலிருந்து வெளிநாட்டுச் செலாவணியை ஈர்த்துக்கொள்வதற்கு மத்திய வங்கியினை இயலச்செய்தன. எனினும், உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல்களின் விளைவுகளின் பின்னர் உடனடியாக செலாவணி வீதம் சில அழுத்தங்களை அனுபவித்ததுடன் மீண்டும் 2019 ஓகத்தின் பிந்திய பகுதியில் அரசாங்கப் பிணையங்கள் சந்தையிலிருந்து சில வெளிநாட்டு முதலீடுகளின் வெளியேற்றத்திற்கு வழிவகுத்த உலக சந்தையின் கடுமையான நிச்சயமின்மைகளின் தாக்கத்தினைப் பிரதிபலித்து அழுத்தங்களை அனுபவித்தது. எனினும், உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையின் திரவத்தன்மை நிலைமைகள் அதனைத்தொடர்ந்து மேம்பட்டதுடன் செலாவணி வீதத்தினை நிலைப்படுத்துவதற்கு உதவியளித்தன. இதன்விளைவாக, 2019இன் இறுதியளவில் ஐ.அ.டொலருக்கெதிராக 0.6 சதவீதம் கொண்ட உயர்வினை ரூபாய் பதிவுசெய்தது. அதேவேளை, மத்திய வங்கியானது 2018இன் ஐ.அ.டொலர் 1,119.7 மில்லியன் கொண்ட தேறிய வழங்கலொன்றுடன் ஒப்பிடுகையில் 2019இல் தேறிய அடிப்படையொன்றில் ஐ.அ.டொலர் 387.0 மில்லியனை ஈர்த்துக்கொண்டது. குறுக்கு நாணயச் செலாவணி வீத அசைவுகளைப் பிரதிபலித்து இலங்கை ரூபா 2019இன் இறுதியில் இந்திய ரூபா (2.6 சதவீதம்), யூரோ (2.6 சதவீதம்) என்பவற்றிற்கு எதிராக உயர்வடைந்ததுடன் ஸ்ரேலிங் பவுண் (2.8 சதவீதம்) மற்றும் யப்பானிய யென் (1.0 சதவீதம்) என்பவற்றிற்கு எதிராக தேய்வடைந்தது.

**ஐக்கிய அமெரிக்க டொலருக்கெதிராக ஏனைய முக்கிய நாணயங்கள் கலப்பு அசைவுகளைக் காண்பித்தன.** அதற்கமைய, 2019இன் இறுதியில் இந்தியன் ரூபா (1.9 சதவீதம்), யூரோ (1.9 சதவீதம்) என்பன ஐக்கிய அமெரிக்க டொலருக்கெதிராக தேய்வடைந்த அதேவேளை, ஸ்ரேலிங் பவுன் (3.5 சதவீதம்), மற்றும் யப்பானிய யென் (1.6 சதவீதம்) என்பன உயர்வடைந்தன.



அட்டவணை 5.15
செலாவணி வீத அசைவுகள்

| நாணயம் | வெளிநாட்டு நாணய அலகு ஒன்றிற்கான ரூபா | | | | | | முன்னைய ஆண்டுடனான சதவீத மாற்றம் (அ) | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | ஆண்டிறுதி வீதம் | | | ஆண்டுச் சராசரி வீதம் | | | ஆண்டிறுதி | | ஆண்டுச் சராசரி | |
| | 2017 | 2018 | 2019 | 2017 | 2018 | 2019 | 2018 | 2019 | 2018 | 2019 |
| யூரோ | 182.49 | 208.99 | 203.67 | 171.73 | 191.71 | 200.14 | -12.68 | 2.62 | -10.42 | -4.21 |
| இந்திய ரூபா | 2.39 | 2.61 | 2.55 | 2.34 | 2.38 | 2.54 | -8.72 | 2.61 | -1.47 | -6.40 |
| யப்பானிய யென் | 1.36 | 1.65 | 1.67 | 1.36 | 1.47 | 1.64 | -18.05 | -1.02 | -7.58 | -10.36 |
| ஸ்டேர்லிங் பவுண் | 205.54 | 231.86 | 238.46 | 196.47 | 216.67 | 228.20 | -11.35 | -2.77 | -9.32 | -5.05 |
| ஐ.அ.டொலர் | 152.85 | 182.75 | 181.63 | 152.46 | 162.54 | 178.78 | -16.36 | 0.61 | -6.20 | -9.08 |
| சி.எ.உ. | 217.69 | 253.51 | 251.17 | 211.49 | 229.90 | 246.97 | -14.13 | 0.93 | -8.00 | -6.91 |

| தாக்கமுள்ள செலாவணி வீதச் சுட்டெண்கள் (ஆ) (இ) (2017=100) | ஆண்டிறுதி சுட்டெண் | | | ஆண்டுச் சராசரி சுட்டெண் | | | முன்னைய ஆண்டை விட சதவீத மாற்றம் | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | ஆண்டிறுதி சுட்டெண் | | ஆண்டுச் சராசரி சுட்டெண் | |
| | 2017 | 2018 | 2019 | 2017 | 2018 | 2019 | 2018 | 2019 | 2018 | 2019 |
| பெ.தா.செ.வீ 24 - நாணயங்கள் | 97.17 | 85.81 | 86.74 | 100.00 | 94.05 | 88.18 | -11.69 | 1.09 | -5.95 | -6.24 |
| உ.தா.செ.வீ 24 - நாணயங்கள் | 99.34 | 87.81 | 89.86 | 100.00 | 95.45 | 90.30 | -11.60 | 2.34 | -4.55 | -5.40 |

(அ) இலங்கை ரூபாவின் வெளிநாட்டு நாணயங்களிற்கு சமமான அடிப்படையில் மாற்றங்கள் கணிக்கப்பட்டுள்ளன. (-) அடையாளம் என்பது ஒவ்வொரு நாணயத்துக்கும் எதிரான இலங்கை ரூபாவின் தேய்மானத்தை குறிப்பிடுகின்றது.

(ஆ) பெயரளவு தாக்கமுள்ள செலாவணி வீதமென்பது (பெ.தா.செ.வீ) 24 வர்த்தகப் பங்காளர்கள் மற்றும் போட்டி நாடுகளின் பெயரளவுச் நாணயமாற்று வீதத்தின் நிறையேற்றப்பட்ட சராசரியாகும். ஒவ்வொரு நாணய கூடைகளிலுள்ள ஒவ்வொரு நாணயத்தினதும் ஒப்பீட்டு ரீதியான முக்கியத்துவத்தினை பிரதிபலிக்கும் வர்த்தகப் பங்குகளின் அடிப்படையில் நிறையிடப்பட்டது. நாணயக் கூடையிலுள்ள ஒவ்வொரு நாணயத்துடனும் தொடர்புடைய பணவீக்க வேறுபாடுகளுக்காக பெயரளவுத் தாக்கமுள்ள செலாவணி வீதங்களை சீராக்குவதன் மூலமாக உண்மைத் தாக்கமுள்ள செலாவணி வீதம் (உ.தா.செ.வீ) கணிக்கப்படுகின்றது. கழித்தல் அடையாளம் பெறுமானத் தேய்வினைக் குறிப்பிடுகின்றது. கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண் உண்மை தாக்கமுள்ள நாணயமாற்று வீதத்தை கணிப்பிட பயன்படுத்தப்பட்டது.

(இ) நாணயமாற்று வீதமானது சுட்டெண்களின் அடிப்படையில் வரைவிலக்கணப்படுத்தப்பட்டதனால் ஏனைய நாணயங்களுடன் ஒப்பிடும்போது ரூபாவின் பெறுமதி உயர்வு/பெறுமதி தேய்வு என்பது பயனுறுதிவாய்ந்த நாணயமாற்று வீதங்களின் சுட்டெண்களின் பெறுமதிகளின் உயர்ச்சி/வீழ்ச்சியில் நேரடியாக பிரதிபலித்தது.

மூலம்: இலங்கை மத்திய வங்கி

அனேகமாக முக்கிய நாணயங்களுக்கெதிராக ரூபாவின் உயர்வின் இணைந்த தாக்கத்தின் மூலம் இலங்கை ரூபாவானது ஆண்டு காலப்பகுதியில் விசேட எடுப்பனவு உரிமைகளுக்கு எதிராகவும் 0.9 சதவீதத்தினால் உயர்வடைந்தது.

**கொவிட் - 19 உலகளாவிய நோய்ப்பரவலுடன் 2020இன் மாச்சு பின்பகுதியில் செலாவணி வீதம் குறிப்பிடத்தக்க தளம்பலொன்றினை அனுபவித்தது.** மாச்சு மாதத்தின் இரண்டாம் வாரம் வரை 2020இல் ஒப்பீட்டளவில் நிலையாகக் காணப்பட்ட செலாவணி வீதமானது அதன் பின்னர் ஏனைய வளர்ந்துவரும் சந்தை மற்றும் அபிவிருத்திடையந்துவரும் பொருளாதாரங்கள் எதிர்கொண்டதைப்போன்று குறிப்பிடத்தக்கப் பெறுமானத் தேய்விற்குட்பட்டது. உலகளாவிய பொருளாதார மற்றும் நிதியியல் சந்தை நிச்சயமின்மைகள் அரசாங்கப் பிணையங்கள் சந்தையிலிருந்து குறிப்பிடத்தக்க வெளிப்பாய்ச்சல்களை ஏற்படுத்திய அதேவேளை, சுற்றுலா, ஏற்றுமதி பெறுகைகள் மற்றும் தொழிலாளர் பணவனுப்பல்கள் என்பவற்றிலிருந்தான வருவாய்களையும் பாதித்தன. செலாவணி வீத அழுத்தம் ஊக சந்தை நடத்தைகள் மூலமும் மேலும் அதிகரித்தது. இவ்வபிவிருத்திகளுக்கு மத்தியில் சந்தையில் அழுத்தத்தினைத் தணிப்பதற்கு இலங்கை மத்திய வங்கியும் அரசாங்கமும் 2020 மாச்சில் மூன்று மாதங்களுக்கு தெரிவுசெய்யப்பட்ட அனைத்து உந்து ஊர்திகள் மற்றும் அத்தியாவசியமற்ற நுகர்வோர் பொருட்களின் இறக்குமதியினை இடைநிறுத்தல் உள்ளடங்கலாக அவசர வழிமுறைகளை அறிமுகப்படுத்தின. ஆரம்ப சந்தை பதிலிறுத்தலின் பின்னர் செலாவணி வீதத்தின் தளம்பலானது குறைவடையுமென எதிர்பார்க்கப்படுகிறது. ஆயினும், 2020இன் செவாவணி வீத அசைவுகள், எதிர்வருகின்ற காலப்பகுதியில் உலகலாவிய நோய்த்தொற்று மேலும் வியாபிக்கின்றமையுடன் தொடர்புடைய உலகளாவிய அபிவிருத்திகளுக்கு எளிதில் பாதிப்பிற்குள்ளாகும் சாத்தியம் தொடர்ந்தும் காணப்படுகின்றது.

### 5.11.1 பெயரளவு மற்றும் உண்மைத் தாக்கமுள்ள செலாவணி வீதங்கள்


**2019ஆம் ஆண்டு காலத்தில் 5 - நாணய மற்றும் 24 - நாணயங்களை அடிப்படையாகக் கொண்ட பெயரளவு தாக்கமுள்ள செலாவணி வீத மற்றும் உண்மைத் தாக்கமுள்ள செலாவணி வீதச் சுட்டெண்கள் இரண்டும் அதிகரித்தன.** குறுக்கு நாணயச் செலாவணி வீதத்தின் அசைவுடன் சேர்த்து சில முக்கிய நாணயங்களுக்கெதிராக இலங்கை ரூபாயின் பெயரளவிலான உயர்வினைப் பிரதிபலித்து பெயரளவுத் தாக்கமுள்ள செலாவணி வீதச் சுட்டெண்கள் அதிகரித்தன. அதற்கமைய, 5 - நாணய மற்றும் 24 - நாணயங்களை அடிப்படையாகக் கொண்ட பெயரளவுத் தாக்கமுள்ள செலாவணி வீதச் சுட்டெண்கள், 2019ஆம் ஆண்டில் முறையே 1.48 சதவீதத்தினாலும் 1.09 சதவீதத்தினாலும் அதிகரித்தன. அதேவேளை, பெயரளவுச் செலாவணி வீத மாறுபாட்டினைக் கருத்திற் கொள்வதற்கு மேலதிகமாக, கூடையிலுள்ள நாடுகளுக்கெதிராக பணவீக்க வேறுபாடுகளை எடுத்துக்கொள்கின்ற இலங்கையின் வெளிநாட்டுப் போட்டித்தன்மை பற்றிய குறிகாட்டிகளான உண்மைத் தாக்கமுள்ள செலாவணி வீதச் சுட்டெண்கள் 5 - நாணய மற்றும் 24 - நாணயங்களை அடிப்படையாகக் கொண்ட உண்மைத் தாக்கச் செலாவணி வீதச் சுட்டெண்களுக்காக முறையே 2.22 சதவீதத்தினாலும் 2.34 சதவீதத்தினாலும் அதிகரித்தன. எனினும், நாட்டின் வர்த்தகப் போட்டித் தன்மைக்கு துணையளித்து உண்மைத் தாக்கச் செலாவணி வீதக் குறிகாட்டிகள் அடிப்படை ஆண்டு மட்டத்திற்குக் கீழ் காணப்பட்டன.

5

### 5.11.2 உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணிச் சந்தை அபிவிருத்திகள்


**உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையின் கொடுக்கல்வாங்கல்களின் அளவு 2019இல் மேலும் அதிகரித்தது.** அதற்கமைய, ஆண்டு காலப்பகுதியில் உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையில் மொத்தக் கொடுக்கல்வாங்கல்களின்

வரைபடம் 5.14
செலாவணி வீத அசைவுகள்



*மூலம்* : இலங்கை மத்திய வங்கி

வரைபடம் 5.15
காலாண்டுக்கான வங்கிகளுக்கிடையிலான முன்னோக்கிய கொடுக்கல் வாங்கல் அளவுகள்




அளவானது 2018இன் ஐ.அ.டொலர் 17,402 மில்லியனிலிருந்து ஐ.அ.டொலர் 19,377 மில்லியனுக்கு குறிப்பிடத்தக்களவு அதிகரித்தது. உடனடிக் கொடுக்கல்வாங்கல்களின் அளவானது 2018இன் ஐ.அ.டொலர் 10,770 மில்லியனிலிருந்து 2019இல் ஐ.அ.டொலர் 11,643 மில்லியனுக்கு (மொத்தக் கொடுக்கல்வாங்கல்களின் 60.1 சதவீதம்) அதிகரித்தது. மேலும், முன்னோக்கிய கொடுக்கல்வாங்கல்களின் மொத்த அளவு 2018இன் ஐ.அ.டொலர் 6,632 மில்லியனிலிருந்து 2019இல் ஐ.அ.டொலர் 7,734 மில்லியனுக்கு அதிகரித்தது. 2019ஆம் ஆண்டு காலப்பகுதியில் உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையில் இலங்கை மத்திய வங்கியின் தலையீடு தேறிய அடிப்படையொன்றில் ஐ.அ.டொலர் 387 மில்லியன் கொள்வனவினை ஏற்படுத்தியது. இது, ஐ.அ.டொலர் 207 மில்லியன் கொண்ட வழங்கலையும் ஐ.அ.டொலர் 594 மில்லியன் கொண்ட கொள்வனவையும் உள்ளடக்கியிருந்தது. இது, 2018இல் ஐ.அ.டொலர் 1,677 மில்லியன் தொகையுடைய வெளிநாட்டுச் செலாவணித் திரவத்தன்மையினை மத்திய வங்கி வழங்கியமைக்கும் ஐ.அ.டொலர் 557 மில்லியன் கொண்ட கொள்வனவிற்கும் மாறாக அமைந்திருந்தது. 2019இல் உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையிலிருந்து தேறிய கொள்வனவிற்கு ஆண்டு காலத்தில் இறக்குமதிகளில் குறிப்பிடத்தக்க சுருக்கத்துடன் சந்தையிலிருந்து குறைந்தளவான வெளிப்பாய்ச்சல் மட்டம் பிரதான காரணமாக அமைந்தது. இந்நிலைமைகள், 2019இல் உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல்கள் மற்றும் அரசாங்கப் பிணையங்கள் சந்தையிலிருந்து வெளிநாட்டு முதலீடுகளின் வெளியேற்றம் என்பவற்றினால் ஏற்பட்ட தளம்பல்களுக்கு மத்தியில் தேறிய அடிப்படையொன்றில் வெளிநாட்டுச் செலாவணியை கொள்வனவு செய்வதற்கு மத்திய வங்கியினை இயலச்செய்தன. அதேவேளை, இலங்கை மத்திய வங்கியானது சந்தை அடிப்படைகளைப் பிரதிபலிப்பதற்கு செலாவணி வீதத்தினை தொடர்ந்தும் அனுமதித்ததுடன், இலங்கை ரூபாயின் சடுதியான தளம்பலினைத் தடுப்பதற்கு மாத்திரம் உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையில் தொடர்ந்தும் தலையீடு செய்தது. எனினும், கொவிட் - 19 நோய்ப்பரவலினை எதிர்கொள்வதில் தளம்பல்மிக்க சந்தை நடத்தையானது 2020 மாச்சின் பின்பகுதியில் உள்நாட்டு வெளிநாட்டு செலாவணிச் சந்தையில் இலங்கை மத்திய வங்கியின் தலையீட்டை தேவைப்படுத்தியது.

## 5.12 வெளிநாட்டுத் துறைத் தோற்றப்பாடு

**2020இல் வெளிநாட்டுத் துறையின் தோற்றப்பாடானது கொவிட் - 19 உலகளாவிய நோய்ப்பரவல் தாக்கத்தின் மீதும் அதன் விளைவான உலகளாவிய பொருளாதார மற்றும் சந்தை அபிவிருத்திகளிலும் பாரியளவில் தங்கியிருக்கும் சாத்தியம் காணப்படுகின்றது.** கொவிட் - 19 உலகளாவிய நோய்ப்பரவலானது 2020இன் நடைமுறைக் கணக்குப் பற்றாக்குறையின் கணிசமான விரிவுபடுத்தலினைத் தோற்றுவிக்கக்கூடியதாக இருக்கும். உலகளாவிய மசகெண்ணெய் விலைகளின் எதிர்பாராத வீழ்ச்சி, ஏற்றுமதியினை நோக்காகக் கொண்ட இறக்குமதிக் கேள்வியில் வீழ்ச்சி, முதலீட்டுப் பொருட்களின் இறக்குமதிகளின் மிதமடையக் கூடிய வாய்ப்பு மற்றும் கொள்கையினால் தூண்டப்பட்ட ஊர்திகள் மற்றும் அத்தியாவசியமற்ற பொருட்களின் இறக்குமதிக் கட்டுப்பாடு என்பன மூலமாக இறக்குமதிச் செலவினம் குறைவாக இருக்குமென எதிர்பார்க்கப்படுகின்ற போதிலும் முக்கியமாக இலங்கையின் ஏற்றுமதிகளுக்காக உலகளாவிய கேள்வியின் மீது குறிப்பிடத்தக்க தாக்கமொன்றின் மூலம் வர்த்தகப் பற்றாக்குறை விரிவடைவதற்கு சாத்தியம் காணப்படுகின்றது. உலகளாவிய பயணம் மற்றும் சுற்றுலாத் துறையில் முன்னெப்பொழுதுமில்லாத மெதுவடைதலின் மூலம் சுற்றுலாக் கைத்தொழில் மோசமாகப் பாதிக்கப்படுமென எதிர்பார்க்கப்படுகின்றது. சுற்றுலாக் கைத்தொழில் மீதான ஒட்டுமொத்தத் தாக்கமானது 2020இன் பின்பகுதியில் இலங்கைக்கு சுற்றுலாப் பயணிகள் வருகை உச்சமடைகின்ற பருவகாலத்திற்கு முன்னர் உலகளாவிய பயணத்தின் இயல்புநிலைமையினை மீண்டும் கொண்டு வரும் சாத்தியப்பாட்டின் மீதே தங்கியிருக்கின்றது. விமானப் பயணிகள் போக்குவரத்துப் பணிகளும் உலகளாவிய பயணத்தின் குறைவின் மூலம் பாதிக்கப்படும் அதேவேளை சரக்குப் போக்குவரத்துப் பணிகளும் வழங்கல் சங்கிலி மற்றும் வணிகப் பொருள் வர்த்தகத்தில் குறைவு என்பவற்றிற்கு இசைவாக வீழ்ச்சியடையுமென எதிர்பார்க்கப்படுகின்றது. எவ்வாறாயினும், பயணம் மற்றும் போக்குவரத்துப் பணிகள் என்ற நியதிகளில் வெளிப்பாய்ச்சல்களும் மிதமடையக் கூடுமென்பது பணிகள் கணக்கில் எதிர்பார்க்கப்பட்ட மோசமடைதலுக்கெதிராக சில காப்புகளை வழங்கும். கொவிட் - 19 உலகளாவிய நோய்ப்பரவலானது இத்தாலி, தென்கொரியா மற்றும் மத்தியகிழக்குப் பிராந்தியங்கள் உள்ளடங்கலாக இலங்கைக்கான தொழிலாளர் பணவனுப்பல்களின் சில முக்கிய மூலங்களையும் பாதிக்கும். இது, 2020இல் தொழிலாளர் பணவனுப்பல்களில் சில மோசமடைதலுக்கு வழிவகுக்கக்

கூடியதாகவிருக்கும். ஒட்டுமொத்தமாக, 2020இல் நடைமுறைக் கணக்கு குறிப்பிடத்தக்களவு மோசமடையக்கூடியதாகக் காணப்படக்கூடுமெனினும், அந்த மோசமடைதலின் அளவு உலகளாவிய நோய்ப்பரவல் நீடிக்கும் கால அளவு அத்துடன் உலகளாவிய கொள்கை வகுப்பாளர்களினாலும் அதேபோன்று இலங்கையிலும் பின்பற்றப்படும் கொள்கை ரீதியான வழிமுறைகள் என்பன மீதே தங்கியிருக்கும்.

**2020இல் கொவிட் - 19 உலகளாவிய நோய்ப்பரவலினால் நிதியியல் கணக்கும் பாதிப்புக்குள்ளாகும் சாத்தியம் காணப்படுகின்றது.** உலகளாவிய நிதியியல் சந்தை நடத்தை மற்றும் முதலீட்டாளர் நம்பிக்கை என்பன மூலம் வெளிநாட்டு நேரடி முதலீடு மற்றும் கொழும்புப் பங்குப் பரிவர்த்தனையில் வெளிநாட்டு முதலீடுகள் என்ற வடிவிலான பங்குரிமை மூலதன உட்பாய்ச்சல்கள் சுருக்கமடையக் கூடும். எனினும், குறிப்பாக சீனாவில், மேம்படுகின்ற நிலைமைகள் கொழும்புத் துறைமுக நகரம் மற்றும் அம்பாந்தோட்டை கைத்தொழில் வலயம் போன்ற செயற்றிட்டங்களுக்குத் தொடர்ச்சியான உட்பாய்ச்சல்களுக்கு வழிவகுக்கக்கூடும். 2020இன் இரண்டாம் அரைப்பகுதியில் குறிப்பாக பொதுத் தேர்தல்களின் பின்னர் எதிர்பார்க்கப்படும் அரசியல் ஸ்திரத்தன்மையுடன் வெளிநாட்டு நேரடி முதலீடுகளின் உட்பாய்ச்சல் படிப்படியாக அதிகரிக்கும் வாய்ப்புள்ளது. மேலும், எதிர்பார்க்கப்பட்ட விரிந்து செல்லும் இறைப் பற்றாக்குறையினை நிவர்த்திசெய்வதற்கும் படுகடன் தீர்ப்பனவு கொடுப்பனவுகளை மேற்கொள்வதற்கும் 2020இன் இரண்டாம் அரையாண்டு காலப்பகுதியில் அரசாங்கமானது வெளிநாட்டுக் கடன்பாடுகளில் ஈடுபடுமென எதிர்ப்பார்க்கப்படுகின்றது.

**2020ஆம் ஆண்டிலும் நடுத்தர காலத்திலும் ஏற்படவிருக்கும் உயர்வான வெளிநாட்டு நாணயப் படுகடன் தீர்ப்பனவு கொடுப்பனவுகளும் முக்கிய கரிசனைகளாகத் தொடர்ந்துமிருக்கும்.** 2020இலும் அதனைத் தாண்டியும் செலுத்த வேண்டியுள்ள முதிர்ச்சியடைகின்ற நாட்டிற்கான பன்னாட்டு முறிகள் மற்றும் வெளிநாட்டு நாணய கால நிதியிடல் வசதிகளின் மூலதனக் கொடுப்பனவுகள் உள்ளடங்கலாக வருடாந்த வெளிநாட்டுப் படுகடன் தீர்ப்பனவு கொடுப்பனவுப் பொறுப்புகள் சராசரியாக ஏறத்தாழ ஐ.அ.டொலர் 5 பில்லியனாக காணப்படுகின்றது. உலகளாவிய நிதியியல் சந்தை நிச்சயமின்மைகளையும் பாதுகாப்பான சந்தைகளை நோக்கி முதலீட்டாளர்கள் ஈர்க்கப்படுவதனையும் கருத்திற்கொள்கையில் குறுங்காலத்தில் இலங்கை கடுமையான மீள்நிதியிடல் இடர்நேர்வுகளை எதிர்கொள்ளலாம். இப்பின்னணியில், ஆகக் குறைந்த சாத்தியமான மீள்நிதியிடல் செலவுடன் அலுவல்சார் ஒதுக்குகள் குறைவடைந்து செல்வதற்கு இடமளிக்காது 2020ஆம் ஆண்டிற்கான படுகடன் தீர்ப்பனவுத் தேவைப்பாடுகளை நிறைவேற்றுவது முக்கிய சவாலொன்றாகக் காணப்படுகின்றது. மேலும், நடைமுறைக்கணக்குப் பற்றாக்குறையினை நீடித்து நிலைத்திருக்கும் விதத்தில் பேணுகின்ற அதேவேளை நடுத்தர காலத்தில் வெளிநாட்டு நேரடி முதலீட்டின் வடிவில் படுகடனைத் தோற்றுவிக்காத உட்பாய்ச்சல்களை உயர்ந்த மட்டத்தில் ஈர்த்துக்கொள்வது வெளிநாட்டுக் கடன்பாடுகளை முகாமைசெய்யத்தக்க மட்டத்தில் பேணும் பொருட்டும் நாட்டின் வெளிநாட்டுப் படுகடன் மட்டத்தினை நீடித்து நிலைத்திருக்கும் மட்டத்தில் பேணுவதற்கும் இன்றியமையாத முக்கியத்துவமுடையதாக விளங்குகின்றன.